# சைவ நெறி

# 7



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நெறி

## 7 ஆம் ஆண்டு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | ... | 1975 |
| இரண்டாம் பதிப்பு | ... | 1980 |
| மூன்றாம் பதிப்பு | ... | 1982 |
| நான்காம் பதிப்பு | ... | 1983 |
| ஐந்தாம் பதிப்பு | ... | 1984 |
| ஆறாம் பதிப்பு | ... | 1985 |
| ஏழாம் பதிப்பு | ... | 1986 |
| எட்டாம் பதிப்பு | ... | 1987 |
| ஒன்பதாம் பதிப்பு | ... | 1988 |
| பத்தாம் பதிப்பு | ... | 1989 |
| பதினொராம் பதிப்பு | ... | 1990 |
| பன்னிரண்டாம் பதிப்பு | ... | 1991 |
| பதின்மூன்றாம் பதிப்பு | ... | 1992 |
| பதின்நான்காம் பதிப்பு | ... | 1993 |
| பதினைந்தாம் பதிப்பு | ... | 1994 |
| பதினாறாம் பதிப்பு | ... | 1995 |
| பதினேழாம் பதிப்பு | ... | 1996 |
| பதினெட்டாம் பதிப்பு | ... | 1997 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல் இல. **825/5**, புளோமண்டல் வீதி, கொழும்பு **15**, விஜயா அச்சகம்வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் அச்சிடப்பட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

**97/ගද /67/ (25,000)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் அறிவான்ற தலைமுற
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம்!

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர்!

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றுடுவீர்!

றிச்சட் பதிறண
*கல்வி, உயர் கல்வி அமைச்சர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே – நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள்யாவும் நிறைவான் மணிலங்கா
ஞாலம் புகழ்வள வயல் நதி மலைமலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே – நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறிதுணிவருளே நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே – நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்முகம்

1998 ஆம் ஆண்டுக்கென இந்நூல் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தயானந்த முதலிகே
*பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளரும்,*
*பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும்.*

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய"
பத்தரமுல்ல.
1997-02-18.

## முன்னுரை

மாணவர் உள்ளங்களிலே, தெய்வ நம்பிக்கை, உயர்ந்த இலட்சியங்கள், பாரம்பரியத்திற் பற்று ஆகியவற்றை வளர்த்தல், நீதியும் நேர்மையும் நிறைந்ததொரு சமுதாயத்தை உருவாக்கல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, சமய பாடத்தை மேலும் அர்த்தமுள்ளதாகவும், வாழ்க்கையோடு இணைந்ததாகவும் அதேசமயம் மாணவர் உளங்கொளத்தக்கதாகவும் அமையும்படி செய்வதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இந்த நோக்கங்களுக்கு இசைய, திருத்தி அமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப, பாலர் வகுப்பு முதல் சைவ நெறி பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன. இப் பாடநூல்களுள் இது ஏழாம் ஆண்டிற் கற்கும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமய ஈடுபாடு, சமய ஞானம், ஆசிரிய அனுபவம் ஆகியன கைவரப்பெற்ற எழுத்தாளர்களால் கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக் குழுவின் நெறிப்படுத்தலுக்கு இசைய இப்பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக் குழுவுக்கும், இந்த நூல்களை உருவாக்க உதவிய எழுத்தாளர்களுக்கும், ஓவியர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

எச். ஆர். சந்திரசேகர
*ஆணையாளர்.*

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
புதிய செயலகம்,
கொழும்பு - 10.
1986 - 03 - 16.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு உபகுழு

திரு. ந. சண்முகரத்தினம்
திரு. செ. வேலாயுதபிள்ளை
திருமதி பாலம் லக்ஷ்மணன்
திரு. பெ. கணநாதபிள்ளை (இணைப்புச் செயலாளர்)

## எழுத்தாளர் குழு

திரு. சி. சிவகுருநாதன்
திரு. ந. சண்முகரத்தினம்

## ஓவியர் குழு

திரு. க. இராசரத்தினம்
திரு. எஸ். சிவசாமி

## பிரதம பதிப்பாசிரியர்

திரு. ஐ. தம்பிமுத்து
(இ. க. நி. சே. தரம் I)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக் குழு
## 1978 - 1981

1. இளைப்பாறிய நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் (தலைவர்)
2. சுவாமி பிரேமாத்மானந்தஜீ
3. கேணல் இரா. சபாநாயகம்
4. பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
5. திரு. கி. லக்ஷ்மண ஐயர்
6. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
7. திரு. ப. சந்திரசேகரம்
8. கலாநிதி வே. இராமகிருஷ்ணன்
9. திரு. ந. சண்முகரத்தினம்
10. திரு. கு. பாலசிங்கம்
11. திரு. வே. முருகேசு
12. திரு. டீ. எம். சுவாமிநாதன்
13. பேராசிரியர் த. நடராசா
14. பேராசிரியர் ஆ. சதாசிவம்
15. திரு. சி. சிற்றம்பலம்
16. திரு. சி. உ. சோமசேகரம்
17. திருமதி பராசக்தி சுந்தரலிங்கம்
18. திரு. செ. வேலாயுதபிள்ளை
19. திருமதி பாலம் லக்ஷ்மணன்
20. திரு. பெ. கணநாதபிள்ளை (இணைப்புச் செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | எமது சமயம் | 1 |
| 2. | திருக்கோயில் | 3 |
| 3. | திருக்கோயில் வழிபாடு | 5 |
| 4. | திருக்குறள் | 8 |
| 5. | திருக்கேதீஸ்வரம் | 13 |
| 6. | கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் | 18 |
| 7. | வண்ணை வைத்தீஸ்வரம் | 21 |
| 8. | சிவசின்னங்கள் | 24 |
| 9. | சிவராத்திரி | 28 |
| 10. | திருவாதிரை | 31 |
| 11. | பிரதோஷம் | 34 |
| 12. | காரைக்கால் அம்மையார் | 36 |
| 13. | கண்ணப்ப நாயனார் | 40 |
| 14. | இளையான்குடிமாற நாயனார் | 45 |
| 15. | நமிநந்தி அடிகள் | 47 |
| 16. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | 49 |
| 17. | சம்பந்தர் தேவாரம் | 53 |
| 18. | திருநாவுக்கரசு நாயனார் | 56 |
| 19. | அப்பர் தேவாரம் | 64 |
| 20. | சுந்தரமூர்த்தி நாயனார் | 67 |
| 21. | சுந்தரர் தேவாரம் | 73 |
| 22. | மாணிக்கவாசகர் | 76 |
| 23. | திருவாசகம் | 85 |
| 24. | திருப்புராணம் | 90 |
| 25. | திருப்புகழ் | 92 |


## அனுபந்தம்


| | | |
|---|---|---|
| அ. | இந்து சமயம் | 94 |
| ஆ. | புத்தர் பெருமான் | 97 |
| இ. | முஹம்மது நபி | 101 |
| ஈ. | இயேசு நாதர் | 107 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

# குறிக்கோள்கள்

1. அன்றாட வாழ்க்கையில் மாணவர் கடைப்பிடிக்க வேண்டிய சமயாசாரங்களையும், சமய பழக்க வழக்கங்களையும் உணர்த்துதல்.

2. சமய அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய அறிவையும், விளக்கத்தையும் போதித்தல்.

3. அனுபூதிமான்களின் தோத்திரப் பாடல்களைப் பண்ணோடு பயிற்றுவதன் மூலம் சமயப்பற்றையும், பக்தியையும் மாணவர் மனத்திற் பதித்தல்.

4. தமது சமய பாரம்பரியச் சிறப்பை மாணவர் உணரச் செய்தல்.

5. கடமையுணர்ச்சி, நேர்மை, தியாகம், பரோபகாரம் ஆகியன போன்ற நற்குணங்களும், நல்லொழுக்கமும் உடைய நன்மக்களை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. எமது சமயம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி நம் கடவுள். அக்கடவுள் அநாதியானவர் என்பதனால் அவரைப் பற்றிக் கூறுகின்ற எங்கள் சமயமும் அநாதியானது. எங்கள் சமயம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றது. எனவே அது சைவசமயம் எனப்படும். சைவம் என்றாற் சிவத்தோடு தொடர்புடையது என்பது பொருள். சமயம் என்பது வழி. ஆகவே சைவசயம் என்பது சிவனை அடையும் வழி எனப் பொருள்படும். இது தமிழர்களாகிய நாம் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் வழி; மிகப் பழைமை வாய்ந்த வழி. இற்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவியவை மொஹெஞ் சோதாரோ, ஹரப்பா என்னும் நாகரிகங்கள். இவை இந்து நதிப் பள்ளதாக்கில் அமைந்திருந்தன. அக்காலத்தில் அவ்விடங்களிலும் சிவ வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. அவ்வழிபாடு நடைபெற்றதற் கான வரலாற்றுச் சான்றுகள் இப்பொழுது அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இது நாம் அறிந்த காலம்; அறியாத காலம் எவ்வளவு?

"அன்பே சிவம்" என்று கூறுவது எமது சமயம். அன்பினால் இறைவனை அடையும் முறையினைச் சைவ சமயம் விளக்குகின்றது. அன்பு வழியைக் கடைப்பிடித்துச் சிவன் சேவடி அடைந்த அடியார்களின் வரலாற்றைப் பின்னர் விரிவாகப் படிப்போம்; முன்பு சுருக்கமாகப் படித்திருக்கின்றோம். அவ்வரலாறுகளை இப்போது நீங்கள் நினைவு கூர்ந்தால் அவை எல்லாம் அன்பின் கதைகள் என்பதனை உணர்வீர்கள்.

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்பது திருக்குறள். அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பு; அன்பு இல்லாதவர்களுக்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடம்பு; அந்த உடம்பு உயிர் இருந்தும் இல்லாதது போலப்பயனற்றது என்பது கருத்து. பயனற்ற உடம்பை வைத்திருக்க ஒருவரும் விரும்பமாட்டார்கள். எனவே, உடம்பு உயிரு டன் இருக்க அன்பு வேண்டும். இஃது எல்லை இல்லாத அன்பு. இந்த அன்பை அடைத்துவைக்கத் தாழ் இல்லை. இதனை விளக்கவே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?" என்று கேட்கிறார் திருவள்ளுவர். இவ்வாறு அன்பு பெருகும் பொழுது நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருப்போம். "தன்னுயிர்போல மன்னுயிர் பேணுவோம்". அறச் செயல்கள் தாமாகவே கைகூடும்.

உயிர் என்றும் அழிவில்லாதது என்பது எமது சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களுள் ஒன்று. உயிர் என்பதற்குச் சீவான்மா, ஆன்மா, பசு என்ற பிற பெயர்களும் உண்டு. நம் உயிருக்கு உயிராய் நம் உள்ளே இருப்பவர் கடவுள். அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்று இந்த அத்தியாயத்தின் தொடக்கத்திலே படித்தோம் அல்லவா? அவர் என்றும் உள்ளவர் என்பதே அதன் கருத்து. பதி, பரமான்மா என்பவை கடவுளைக் குறிக்கும் பிற பெயர்கள்.

நம் உடம்பு அழியக்கூடியது. "நான்" என்று ஒருவர் கூறும் பொழுது தம் உடம்பையே அவர் கருதுகிறார். இந்த உடம்போ நீர்க் குமிழிபோல நிலையில்லாதது. நிலையில்லாத இந்த உடம்பினை நாம் நிலையானதெனத் தவறாக நினைக்கின்றோம். அதனாற் பல செயல் களைச் செய்கின்றோம். அவை "வினை" எனப்படும். அவற்றுள் நல்லவை நல்வினை எனவும் தீயவை தீவினை என்றும் கூறப்படும். இவை இரண்டினையுஞ் சேர்த்துக் "கன்மம்" என்று கூறுவோம்.

உடம்பு அழிந்த பின்னும் உயிர் அழிவதில்லை. அதற்கு மேலும் பிறவிகள் உண்டு. நல்வினை செய்த உயிர் உயர்ந்த பிறவியையும் தீவினை செய்த உயிர் இழிந்த பிறவியையும் எடுக்கும். எனவே, இப்பிறவிகள் நாம் செய்த வினைகளுக்கு ஏற்ப நமக்குக் கிடைப்பவை. நாம் நல்லதைச் செய்திருந்தால் எப்பொழுதும் நன்மையே விளையும். கத்தரி விதை விதைக்கத் தக்காளி முளைப்பதுண்டா? நாம் இட்ட வித்தே, அஃதாவது நாம் செய்த வினையே, நமது பிறவிக்கு ஏதுவாகின்றது.


நம் உயிரினும் ஓம்பப்படுவது அன்பு என்பதனை நாம் கற்றோம். அந்த அன்பு நம்முள்ளே இருக்கும்பொழுது சிவமும் நம்முள்ளே விளக்காக இருக்கும். அப்பொழுது நம் செயல் எல்லாம் சிவன் செயல் எனக் கருதிச் செய்தல் வேண்டும். சிவன் அவன் எம் சிந்தனையுள் நிற்க அவன் தாள் வணங்கல் வேண்டும். இவ்வாறு சிவன் எம் உள்ளத்தே உள்ளான் என்ற உணர்வை நாம் பெறும் பொழுது தெய்வம் நமக்கு என்றுந் துணையாக நிற்கும். ஒரு தீங்கும் வரமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. திருக்கோயில்

இறைவனை வழிபடுதற்கு உரிய இடம் திருக்கோயில். இங்கு ஊர் மக்கள் ஒன்றுசேர்ந்து, ஒருமுகப்பட்டு இறை வழிபாடு செய்வார்கள். எனவே, மக்கள் குழுமி வாழும் இடத்துக்கு அயலிற் கோயில் ஒன்று இருத்தல் இன்றியமையாதது. இதனாலேயே "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்று ஆன்றோர் கூறுவர்.



படம் 1. திருக் கோயிலுந் தீர்த்தக் கேணியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் எங்கும் நிறைந்தவன்; அவனை நாம் எங்கிருந்தும் வணங்கலாமே! இறைவனை வழிபடுதற்கு நாம் ஏன் கோயிலுக்குப் போகவேண்டும்? என்ற ஐயம் உங்களுக்கு எழலாம். இதற்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். பசுவின் ஊன் சத்தே பாலாகமாறி அதன் மடியிலிருந்து பெறப்படுகின்றது. ஆயின், பசுவின் ஊன் சத்து அதன் உடலெங்கும் இருக்கின்றது. எனினும், அதன் உடலெங்கும் பால் பெறப்படுவதில்லையே. அவ்வாறே, இறைவனின் அருள் நிறைந்த இடம் கோயில். அங்கு சென்று நாம் வழிபடும் பொழுது அவனுடைய அருளைப்பெறுவோம். நாம் உலக வாழ்வில் ஈடுபட்ட வர்கள். கோயிலில் மட்டுமே நமக்கு மன ஒடுக்கம் உண்டாகும். அஃதாவது, மனம் ஒரு வழிப்படும்; இறைவனினது சிந்தனையில் அழுந்திநிற்கும். துறவியர் அல்லது முனிவர்கள் உலக வாழ்வை விட்டவர்கள் ; இறைவனையே தஞ்சமாகக்கொள்பவர்கள். அவர்கள் கோயிலில் மட்டுமன்றி எங்குமே இறைவனைக் காண்பவர்கள்.

திரிசூலத்தைக் கொண்ட மிகச் சிறிய கோயில் முதல் தூபிகளையும், இராச கோபுரங்களையுங் கொண்ட மிகப் பெரிய கோயில்கள் வரை, பலவகைக் கோயில்களை நாம் காண்கின்றோம். இவற்றுட் சிறிய கோயில்கள் சிவாகம முறைக்கு ஏற்ப அமைந்தவை அல்ல. "சிவாகமம்" என்பது கோயிலின் அமைப்பு, அங்கு நடைபெறும் பூசைகள், திருவிழாக்கள் முதலியவற்றுக்கான விதிகளைக் கூறும் நூலாகும். சிவாகம முறைப்படி அமைந்துள்ள கோயில்களே சிறந்த கோயில்கள்.

இறைவனின் அருள் சுரக்கின்ற இடமே கோயில் என்பதை ஏலவே கற்றுள்ளோம். எனவே, கோயில்கள் புண்ணிய தலங்கள், புனித இடங்கள் என்று பலவாறு வருணிக்கப்படும். அவற்றின் புனிதத் தன்மையைப் பேணுதல் அங்கு சென்று வழிபாடு செய்யும் அடியார்களின் முதற்கடமையாகும். வீட்டுக்கு அயலிற் கோயில் இல்லாதவர்கள் அல்லது கோயிலுக்குச் செல்ல இயலாதவர்கள் தத்தம் வீட்டிலே புனிதமான ஓர் இடத்திற் பூசை அறை அமைத்து இறைவனை வழிபடலாம்.

இக்காலத்திற் சிவராத்திரி தினம் போன்ற முக்கிய தினங்களிற் கோயிற் பூசை நிகழ்ச்சிகள் வானொலியில் அஞ்சல் செய்யப்படுகின் றன. இத்தகைய வேளைகளில் நாம் அவ்வக் கோயில்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளை மனத்தில் நினைந்து வழிபாடு செய்யலாம். எவ்வாறு கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்பதனை அடுத்த பாடத்திற் கற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. திருக்கோயில் வழிபாடு

நாம் எல்லோரும் ஒவ்வொரு நாளும் விதிப்படி திருக்கோயிலுக்குச் சென்று இறைவனைத் தரிசனஞ் செய்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு செய்தல் நடை முறையிற் சாத்தியமாவதில்லை. எனவே, விசேட தினங்களிலாயினும் நாம் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடல் வேண்டும்.

கோயில் புனிதமான இடம் என்பதனை நாம் அறிவோம். எனவே, அங்கு செல்பவர்களும் புனிதமாகச் செல்லுதல் வேண்டும். புறத்தூய்மைக்கு நீராடல் அவசியமானது. புண்ணிய தீர்த்தத்தில் நீராடுதல் உத்தமம். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் வீட்டில் நீராடுதலும் உண்டு. ஆயின் நீராடாது கோயிலுக்குச் செல்லுதலைத் தவிர்த்தல் வேண்டும். நீராடிய பின் தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து, அநுட்டானஞ் செய்யத் தகுதி உடையவர்கள் அநுட்டானஞ் செய்து, ஆலயத்துக்குச் செல்லுதல் சாலச் சிறந்தது.

பெரியவர்களையோ, உறவினர்களையோ நாம் பார்க்கச்செல்லும் பொழுது, வெறுங்கையோடு செல்வதில்லை; கையுறையாக யாதாயினுங் கொண்டு செல்வதே வழக்கம். கடவுளோ மிகவும் பெரியவர்; எமக்குத் தாயுமானவர்; தந்தையுமானவர். அவரைத் தரிசிக்கச் செல்லும்பொழுது நாம் எவ்வாறு வெறுங்கையோடு போகலாம்? எனவே, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, பூசை, அபிசேகம் முதலியவற்றுக்குத் தேவையான பூ, இளநீர், பால் முதலிய பொருள்களைக் கொண்டு போகலாம்.

திருக்கோயிலின் கோபுரம் உயரமாக இருப்பதால் அது அதிக தூரத்துக்குத் தெரியும். அதனைக் கண்டவுடன் அங்குள்ள இறைவனின் உருவத் திருமேனி நமக்கு நினைவிற்கு வரும். எனவே, கோபுரங் காணப்படும்பொழுது அதனை வணங்குதல் வேண்டும். கோயில் வாசலுக்கு அண்மையிற் பொதுவாகக் கை கால் கழுவுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். அங்கு கை கால் கழுவிக் கோயிலுக்கு உள்ளே செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் உள்ளே பலிபீடத்துக்கு இப்பால் நின்று வணங்குதல் வேண்டும். ஆண்கள் செய்வது அட்டாங்க வணக்கம் எனப்படும். அட்டாங்கம் என்பது எட்டு அங்கம் எனப் பொருள்படும். தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய் (வாயின் கீழ்ப் பகுதி), புயங்கள் இரண்டு என்பனவே அந்த எட்டு அங்கங்கள். இந்த எட்டு அங்கங்களும் புவியிற் பொருந்த வணங்குதல் அட்டாங்க வணக்கமாகும். கிழக்கிலாயினும் வடக்கிலாயினும் தலையை வைத்து, மார்பு புவியிலே படும்படி, வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி வலக் காதை மண்ணிற் பொருந்தச் செய்ய வேண்டும். பின்னர் இரண்டு கைகளையும் அரையை நோக்கி நீட்டி, மோவாயும் புயங்களும் மண்ணிற் பொருந்த வைக்க வேண்டும். அதன் பின்னர் இடக் கையை முன்னும் வலக்கையைப் பின்னும் நேரேநீட்டி, இடக்காதை மண்ணிற் பொருந்தச் செய்ய வேண்டும். இதுவே அட்டாங்க வணக்கம்.

பெண்கள் செய்வது பஞ்சாங்க வணக்கம் எனப்படும். பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கம். தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு என்பனவே ஐந்து அங்கங்கள். இந்த ஐந்து அங்கங்களும் நிலத்திற் பொருந்தும்படி வணங்கல் வேண்டும்.

மூன்று தரமும் ஐந்து தரமும் ஏழு தரமும் ஒன்பது தரமும் வணக்கஞ் செய்யலாம். ஒரு தரமாயினும் இரண்டு தரமாயினும் வணக்கஞ் செய்யலாகாது. கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலும் மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும் வடக்கே தலை வைத்து வணங்குவோம். தெற்கு நோக்கிய சந்நிதானத்திலும் வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும் கிழக்கே தலை வைத்து வணங்குவோம். கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் கால் நீட்டலாகாது.

வீழ்ந்து வணங்கிய பின் எழுந்து கும்பிட்டுக் கொண்டு மெல்ல மெல்ல நடந்து கோயிலை வலம் வருதல் வேண்டும். அப்பொழுது இரண்டு கைகளையுந் தலையிலேனும் மார்பிலேனும் குவித்து., சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு செல்லுதல் வேண்டும். மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் வலம் வருதல் முறை. அபிடேக காலத்திலும் நிவேதன காலத்திலும் உள் வீதியில் வலம் வருதல், வீழ்ந்து வணங்குதல் முதலானவை செய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலை வலம் வந்த பின் செய்வது சண்டேசுரர் தரிசனம். சண்டேசுரர் எப்பொழுதுந் தியானத்தில் இருப்பார். எனவே அவரை வணங்கும்பொழுது மூன்று முறை கைகொட்டுதல் வழக்கம். நாம் செய்த தரிசன பலனைத் தரும் பொருட்டு அவரைப் பிரார்த்தித்தல் வேண்டும். பின்னர் கோயிலுக்கு உள்ளே சென்று தோத்திரப் பாடல்களைப் பண்ண இசையுடன் ஓதல் வேண்டும். அருச்சனைப் பொருள்கள் கொண்டு வந்திருந்தால் அவற்றை **அருச்சகரிடங்** கொடுத்து அருச்சனை செய்விக்கலாம். இவற்றை முடித்துக் கொண்டு கோயிலில் அமைதியான ஓர் இடத்தில் வடக்கு நோக்கி இருந்து பஞ்சாட்சர செபஞ் செய்தல் வேண்டும்.

கோயிலில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்பொழுது, ஒழுங்கைக் கடைப்பிடித்தல் மிகவும் மேலானது. அங்கு நாம் செய்யும் செயல்கள் எல்லாம் இறைவனின் பெருமையை மேம்படுத்துவனவாக அமைதல் வேண்டும். அவை கோயிலின் தூய்மையைப் பேணல் வேண்டும். கோயிலுக்கு உள்ளே செல்லுதல், பிரசாதம் வாங்குதல், வெளியே வருதல் ஆகியவை ஒழுங்குடனும் பொறுமையுடனுஞ் செய்ய வேண்டியவை. எறும்புகள் ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்காகச் செல்வதை நாம் பல முறை பார்த்திருப்போம். சிற்றறிவு படைத்த இந்த எறும்புகள் செய்கின்றவாறாயினும் ஆறறிவு படைத்த நாம் செய்கின்றோமில்லையே, "கோயில் என்றால் எல்லோருக்கும் பொதுவானது: நான் செய்வதை யார் கேட்பது?" என்று சிலர் கருதுதல் கூடும். ஆயின், இவற்றையெல்லாம் இறைவன் பார்த்துக் கொண்டு இருக்கின்றாரே என்று நாம் எண்ணுவதுண்டா? இதற்கெல்லாம் இறைவன் மீது நமக்குள்ள பக்தி குறைவாக இருப்பதுதான் காரணம்.

கோயிலுக்குப் போகும்பொழுது நமது முழுச் சிந்தனையும் இறைவன்பால் இருத்தல் வேண்டும். அங்கு வருபவர்கள் எல்லாம் இறைவனின் சொரூபங்கள், நடமாடுங் கோயில்கள் என நாம் அவர்களை மதித்தல் வேண்டும். அவ்வாறு மதித்தால் ஒருவர் பிரசாதம் வாங்கும் பொழுது அவருடைய கையைத் தட்டி விட்டு, நாம் பிரசாதம் வாங்குவோமா? ஒருவரை தள்ளி ஒதுக்கி விட்டு நாம் செல்லுவோமா? இத்தகைய செயல்களையே குளிக்கப் போய்ச் சேறு பூசுதல் என்று பொதுவழக்கிற் கூறுவார்கள். இவை எல்லாவற்றையுஞ் சிந்தித்துப் பார்த்து நாம் ஒழுக்க சீலர்களாக, மற்றோருக்கு எடுத்துக்காட்டானவர்களாக ஒழுகுவோமானால், அதுவே மிக உயர்ந்த சமய நெறி. இந்த நிலையில் இறைவனின் அருட்பார்வையை நாம் பெறுதல் நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. திருக்குறள்

சாதி மத பேதமின்றி உலகிலுள்ள எல்லா மக்களும் எக்காலத்தும் தம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக ஏற்றுக் கொள்கின்ற ஒப்பற்ற நீதி நூல் திருக்குறளாகும். இஃது உலகப் "பொது மறை" என்பதனாற் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் இயற்றிய இந்நூலினாலே தமிழ்நாடு தானும் உலகப் புகழ் பெற்றுள்ளது. இது காரணமாகவே, "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று கூறப்படுகின்றது.

திருக்குறளை மேற்கோள் காட்டாத தமிழ் அறிஞர்களும் இல்லை; நூலாசிரியர்களும் இல்லை. தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திவ்வியப் பிரபந்தம், கம்பராமாயணம் முதலிய உயர்ந்த நூல்களிலே திருக்குறள் கையாளப்பட்டிருத்தலை நாம் காணலாம். படித்தற்கு எளிதான நூல் திருக்குறள். மனனஞ் செய்தற்கும் இலேசானது. இஃது இரண்டு வரிகளைக் கொண்ட குறள் வெண்பாவாக அமைகின்றது. உருவிற் சிறியதாயினும் பரந்த பொருளைச் சுருக்கித் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனாலேயே,

> "அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
> குறுகத்தறித்த குறள்"

என்று ஔவையார் இதன் பெருமையைப் பாடியுள்ளார்.

பசுப் பால், எருமைப் பால், ஆட்டுப் பால் எனப் பால் பல வகைப்படும். ஆயின், இப்பால்களில் மிகச் சிறந்தது பசுவின் பாலே. அதுபோலவே பாரிலுள்ள நூல்கள் எல்லாம் வள்ளுவர் செய்த நூலுக்கு ஈடாவதில்லை. இத்தகைய உயர்ந்த நூலைக் கற்கும் வாய்ப்பைப் பெற்ற நாம் கடவுள் வணக்கத்துடன் தொடங்கி, இதனைக் கசடறக் கற்று, நற்பயன் பெறுவோமாக.

திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துக் குறள்கள் உள்ளன. எனவே, குறள்களின் மொத்தத் தொகை 1,330. இவை அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்ற மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. பால் என்பது பகுதி அல்லது பிரிவு எனப்பொருள்படும். இவற்றுள் முதலாவதாக அமைந்த அறத்துப் பாலில் முதலாவது அதிகாரமாக இருக்கின்ற கடவுள் வாழ்த்து என்பதில் அடங்கியுள்ள பத்துக் குறள்களையும் நாம் இங்கு படிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் 1

## கடவுள் வாழ்த்து

நாம் எந்தக் கருமத்தைச் செய்யத் தொடங்கும்பொழுதும் கடவுளை வணங்கியே தொடங்குவோம். அவ்வாறே, திருவள்ளுவரும் தம் நூலைத் தொடங்கும் பொழுது கடவுளை வாழ்த்துகின்றார். வாழ்த்துதல் என்பதில் வணங்குதலும் அடங்கும்.

**1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு**

நாம் வாயைத் திறந்த மாத்திரத்தே ஒலிக்கும் எழுத்து "அ" என்பது. ஆயின், வாயைத் திறக்காது எந்த எழுத்தையும் உச்சரித்தல் இயலாது. எனவே, எழுத்துக்கள் எல்லாந் தோன்றுவதற்கு அகரம், அஃதாவது "அ" என்ற எழுத்து முதலாக அமைகின்றது. அது போலவே ஆதிபகவான் என்கின்ற என்றுமுள்ள இறைவன் உலகத்துக்கு, அஃதாவது உலகத்திலுள்ள உயிர்களுக்கு முதலாக அமைகின்றான்.

**2. கற்றதனாலாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்**

நாம் கற்கும் கல்வி அனைத்தும் ஒரு முக்கியநோக்கத்தை உடையதாக அமைய வேண்டும். இறைவனின் திருவடியை அடைதலே அந்த நோக்கம். அந்த நோக்கத்தை அடைவதற்கு நாம் கற்ற கல்வியைத் துணையாகக் கொண்டு தூய அறிவே வடிவான இறைவனின் நல்ல திருவடிகளை வணங்குதல் வேண்டும். அவ்வாறு வணங்கவில்லையாயின் நாம் கற்ற கல்வியினால் உண்டாகும் பயன் என்ன? ஒன்றுமில்லை என்பது கருத்து.

**3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்**

அன்பால் நினைப்பவரது உள்ளத் தாமரைக்கு இறைவன் விரைந்து செல்வான். அத்தகைய இறைவனின் பெருமை பொருந்திய திருவடிகளை இடையறாது நினைப்பவர்கள் இன்பவுலகில் எல்லாச் செல்வங்களையும் பெற்று நெடுங்காலம் வாழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல**

எப்பொருளிலும் விருப்பு வெறுப்பு இல்லாதவன் இறைவன். அத்தகைய இறைவனின் திருவடிகளை அடைந்தவர்களுக்கு எக்காலத்துந் துன்பங்கள் நேர்ந்ததில்லை. மூன்றுவகையாக நமக்குத் துன்பங்கள் உண்டாகின்றன. முதலாவதாக, நாமே நம் அறியாமையினாலே துன்பத்தைத் தேடிக்கொள்கின்றோம். இரண்டாவதாக, பிற உயிர்களும் நமக்குத் துன்பஞ் செய்வதுண்டு. மூன்றாவதாக, தெய்வசங்கற்பமும் நமக்குச் சில வேளைகளிலே துன்பம் விளைவிக்கின்றது. நாம் இறைவனின் திருவடியைச் சேர்ந்திருந்தால் இத்துன்பங்கள் நம்மை வருத்தாதவாறு அவன் நம்மைக் காப்பாற்றுவான்.

**5. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

இறைவனின் மெய்ம்மையான புகழைச் சொல்லுவோரை அறியாமையினால் வரும் இருவினையும் வந்துசேரா. இருள், மயக்கம் என்பன ஒரே கருத்துடைய சொற்கள். இன்ன தன்மையினது என எவராலுங் கூறப்படாமையின் அறியாமை இருள் எனப்பட்டது. அறியாமை "அஞ்ஞானம் எனவும் அறிவு ஞானம் "எனவுங்கூறப்படும். ஒளி வந்தவுடன இருள் அகன்றுவிடும். அதுபோலவே, ஞானம் வந்தவுடன் அஞ்ஞானம் அகன்றுவிடும். ஞானத்தைப் பெறுவதற்கு இறைவனின் உண்மையான புகழை எப்பொழுதுங் கூறவேண்டும்.

**6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்**

பொறிகள் ஐந்து உள்ளன. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. இவற்றின் வாயிலாகப் பெறப்படும் புலன்கள் ஐந்து. அவை ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன. இவற்றினால் வரும் அவா, அஃதாவது ஆசையும் ஐந்து.

ஐந்து அவாவினையும் அவித்தவன் இறைவன். அவனுடைய பொய்யபற்ற, அஃதாவது மெய்யான ஒழுக்க வழியில் வழுவாது நிற்பவர்கள் எக்காலமும் வாழ்வார்கள்; முத்தி இன்பம் பெறுவார்கள் என்பது கருத்து.

**7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது. நாம் பிறந்த நாளிலே தொடங்கி ஊண், உடை, உறையுள் முதலிய பல தேவைகளுக்காக என்றுங் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கின்றோம். அக் கவலையை ஒழிப்பதற்கு நாம் இறைவனின் திருவடியைத் தஞ்சமென்று கொள்ளல் வேண்டும். அஃதாவது முத்தி என்று கூறப்படுகின்ற மோட்சம் பெற வேண்டும்.

## 8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லாற் பிறவாழி நீந்தல் அரிது

அறவாழி அந்தணன் என்பது இறைவனைக் குறிக்கின்றது. ஆழி என்பது கடல். எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பு உடையவன் அந்தணன்.

அறக் கடலாகிய இறைவனின் திருவடியைச் சேர்ந்தால் அல்லால், பிறவிப் பெருங்கடலைக் கடத்தலரிது. திருநாவுக்கரசருக்கு இறைவன் துணையாற் கல் தெப்பமானது போல, இறைவனின் தாளைச் சேர்ந்தார்க்கு அவனுடைய தாள், அஃதாவது திருவடி, தெப்பமாகத் துணைபுரிகின்றது.

இதுவரைநாம் எட்டுத் திருக்குறள்கள் கற்றுள்ளோம். திருவள்ளுவர் தாம் வணங்குங் கடவுளின் பெயர் என்ன என்பதனை இவற்றிற் கூறவில்லை. அவருக்குப் பெயர் இல்லை. "ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றும் இலான்" என்றே மாணிக்கவாசகருந் திருவாசகத்திற் பாடுகின்றார்.

இந்த எட்டுத் திருக்குறள்களிலுந் திருவள்ளுவர் இறைவனுக்கு எட்டுக் குணங்களைக் கூறியுள்ளார். அவற்றை இங்கு கவனித்தல் வேண்டும். அக்குணங்களாவன : ஆதியானவன், வாலறிவன், மலர் மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இரு வினையுஞ் சேராதவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமத்தில் எட்டுக் குணங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன : தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களை நீக்குதல், பேரருள் உடைமை, முடிவில்லா ஆற்றலுடைமை, வரம்பில்லா இன்பம் உடைமை என்பன. இந்த எட்டுக் குணங்களையும் மேலே கூறிய எட்டுக் குணங்களுடன் ஒப்புநோக்கிப் பார்க்கலாம்.

## 9. கோளில் பொறியிற்குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை

நோவை உணராத உடம்பு, சுவையைச் சுவைக்காத வாய், காட்சியைக் காணாத கண், மணத்தை மணக்காத மூக்கு, சத்தத்தைக் கேட்காத காது என்பவை தம் தொழில்களை இழந்தவை எனப்படும். அவை போலவே, நம்முடைய தலையும் எட்டுக் குணங்களை உடையவனான இறைவனின் திருவடியை வணங்காத பொழுது, தான் செய்ய வேண்டிய தொழிலைச் செய்யாத பயனற்ற தலையாகும்.

## 10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார்

இறைவனின் திருவடியைச் சேர்ந்தவர்கள் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடந்துவிடுவர். அவர்கள் மீண்டும் பிறப்பு எடுக்கமாட்டார்கள். அவர்கள் வீடு, அஃதாவது முத்தி பெறுவார்கள். அத்திருவடியைச் சேராதவர்கள் பிறவிக் கடலை நீந்திக் கடக்கமாட்டார்கள். எனவே, மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பார்கள் என்பது கருத்து.

பிறவிக் கடல் என்பது வாழ்க்கையைக் குறிப்பது. வாழ்க்கையில் வரும் எல்லா விதமான துன்பங்களையும் கடவுள் பத்தியால் வென்றுவிடலாம் என்பதே இதன் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. திருக்கேதீஸ்வரம்

சிவாலயங்களுள்ளே தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் சிறந்தவை. இவற்றுட் பெரும்பாலனவை இந்தியாவில் உள்ளன. நம் நாட்டில் அத்தகைய தலங்கள் இரண்டு மட்டுமே இருக்கின்றன. அவற்றுள் ஒன்று சுவாமி மலையில் விளங்குந் திருக்கோணேஸ்வரம். மற்றது மன்னார் மாவட்டத்தில் மாந்தை என்னும் ஊரிலே திகழுந் திருக்கேதீஸ்வரம்.

மாந்தை பண்டைக் காலத்தில் மாதோட்டம் என வழங்கியது. இது ஒரு சிறந்த துறைமுகப் பட்டினம். இந்தியர், அரேபியர், கிரேக்கர், உரோமர் முதலாய பலரும் கப்பல்களில் இங்கு வந்து வணிகஞ் செய்தனர். இது இயற்கை எழில் நிறைந்த நகரமாய் விளங்கியது. தென்னந் தோப்புக்களும் கமுகஞ் சோலைகளும் வாழைத் தோட்டங்களும் இங்கு மலிந்து கிடந்தன. மயில்களும் மந்திகளும் அவற்றுள் உலாவித் திரிந்தன. கோயிற் சூழலில் மயில்களையும் மந்திகளையும் நாம் இன்றுங் காணலாம்.

மதோட்டத்தின் வளத்திற்குக் காரணமாய் இருந்தது பாலாவி என்னும் ஆறாகும். இது அருவி ஆற்றின் ஒரு கிளையாக இருந் திருத்தல் வேண்டும். ஆயின், ஆறு இன்று மறைந்து விட்டது. அங்கு பாலாவி என்று ஒரு குளம் இப்போழுது இருக்கின்றது. இக்குளத்தைத் திருத்தி அமைக்க உதவியவர் நீர்ப்பாசனப் பொறியியலாளரான திரு. ச. ஆறுமுகம் என்பவராவர்.


பாலாவி ஒரு புண்ணிய தீர்த்தம். அதிலே தீர்த்தமாடிய அடியார்கள் தமக்கு உற்ற நோய் யாவும் நீங்கப்பெறுவர். சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடிய திருக்கேதீஸ்வரப் பதிகப் பாடல்களிற் பாலாவியைப் பல முறை குறிப்பிட்டுள்ளார்.

பாலாவியின் கரையிலே கோயில் கொண்டு, கேதீஸ்வர நாதர் கௌரி அம்பாள் சமேதராய் வீற்றிருக்கின்றார். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் முறையாக அமைந்த தலம் திருக்கேதீஸ்வரம். ஒன்பது கிரகங்களுக்குள் கேது என்னும் கிரகம் இங்கு வழிபட்டமையாலே கேதீஸ்வரம் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பது புராண வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஆதிக்குடிகள் நாகர்களும் இயக்கர்களுமாவர். இவர்களுள் நாகர்களின் தலையாய வழிபாட்டுத்தலமாக விளங்கியது திருக்கேதீஸ்வரம். இதனால் நாகநாதர் என்ற பழம் பெயர் ஒன்றுங் கேதீச்சரப் பெருமானுக்கு வழங்குகின்றது. இவ்வாறாக இந்நாட்டில் சைவ சமயம் நெடுங்காலமாக நிலவியதையுந் திருக்கேதீஸ்வரத்தின் தொன்மையையும் நாம் அறியலாம்.



படம் 2. திருக்கேதீஸ்வர ஆலய இராசகோபுரம்.

பண்டைக் காலந் தொட்டுச் சிறப்புற்று விளங்கிய இத்தலம் நம் சமய குரவர் காலத்தில் இலங்கையில் மட்டு மின்றி இந்தியாவிலும் புகழ் பெற்றுத் திகழ்ந்தது. தேவார ஆசிரியர்களான சம்பந்தரும் சுந்தரரும் இந்தியாவிலிருந்தே இக்கோயிலின் புகழைத் தேவாரங்களிற் பாடியுள்ளனர். சோழப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்ட காலத்திலும் யாழ்ப்பாணத்து அரசர் காலத்திலும் இக்கோயில் அரசரின் ஆதரவைப் பெற்றுச் செழித்தோங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைப் பிடித்த காலத்தில், ஏனைய சைவக் கோயில்களைப் போலத் திருக்கேதீஸ்வரமும் வீழ்ச்சி அடைந்தது. ஈவிரக்கமற்ற போர்த்துக்கேயர் 1560 ஆம் ஆண்டு நம் பெருங் கோயிலை இடித்து அழித்தனர். இடித்து எடுத்த பொருள்களை மன்னாருக்கு எடுத்துச்சென்று அங்கு ஒரு கோட்டையையுங் கிறிஸ்தவ கோயில்களையுங் கட்டினர். அவர்கள் இடித்தது கோயிற் கட்டிடத்தை மட்டுமேயாம். திருகேதீஸ்வரநாதரை அவர்களால் இடித்து மறைக்க முடியுமா? அவர் தேவாரத் திருப்பதிகங்களில் என்றும் நிலைபெற்று இருக்கின்றார். ஆயின் அவர்களுடைய இழிவான செயலைப் பொறுக்காததுபோல, இயற்கையின் சீற்றத்தால், மண்மாரிபொழிந்து, இக்கோயில் இருந்த இடமே தெரியாது மறைந்தது. இவ்வாறாக, ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் கழிந்தன. அன்னியரின் அட்டூழியங்களும் ஒழிந்தன.


தாய் நாட்டிலுஞ் சேய் நாட்டிலுஞ் சைவத்தைப் பேணி வளர்க்க நாவலர் பெருமான் உதித்தார். மாதோட்டத்தில் மறைந்திருந்த தேன் பொந்தில் அருமருந்தைக் காண ஆவலுற்றார். சைவமக்கள் இப்பணியில் ஈடுபட வேண்டுமென்று பலவாறாக வேண்டினார். அவருடைய இந்த வேண்டுகோள் இன்றுள்ள இப்பெருங்கோயில் உருவாதற்குத் தூண்டுதல் ஆயிற்று.

சைவப் பெருமக்கள் திருக்கேதீஸ்வரம் இருந்ததெனக் கருதப்பட்ட நிலத்தை அரசிடமிருந்து பெறப் பல முயற்சிகள் செய்தனர். இவ்வாறாக 1893 ஆம் ஆண்டில், 40 ஏக்கர் பரப்பைக் கொண்ட அக்காணி ஏலத்தில் விற்கப்பட்ட போது சைவ மக்கள் சார்பில், நாட்டுக்கோட்டை நகரத்தாரைச் சேர்ந்த திரு. பழனியப்பாச் செட்டியார் 3,100 ரூபா கொடுத்து அதனை விலைக்கு வாங்கினார்.

அடுத்த ஆண்டு தை மாதம் சைவச் சான்றோராகிய பசுபதிச் செட்டியார், உதவியாளர் பலருடன் அங்கு சென்று, காடு வெட்டிக் கோயிலைத் தேடினார். அப்பொழுது இறைவன் அருளால், பழைய கோயிலுந் தீர்த்தக் கிணறும் கோயிலிற் பிரதிட்டை செய்திருந்த புராதன இலிங்கமும் விநாயகரும் சோமாஸ்கந்தரும் நந்தியும் கண்ணுக்குப் புலப்பட்டன. அகழ்ந்தெடுத்த இந்த மகாலிங்கம் இப்பொழுது மேற்குப் பிரகாரத்திற் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றது. அவ்வாண்டு ஆவணி மாதம் அங்கே ஒரு சிறு கோயிலை நிறுவிய பின் செட்டியார் யாழ்ப்பாணத்துக்கு மீண்டார். இக்கோயிலின் பரிபாலனம் நாட்டுக்கோட்டை நகரத்தார் கையில் இருந்தது. அவர்கள் 1903ஆம் ஆண்டு கற்கோயில் கட்டி, மகாகும்பாபிடேகஞ் செய்து வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 3.

**திருக்கேதீஸ்வரத்தில் 1894 ஆம் ஆண்டு அகழ்ந்தெடுக்கப்பட்ட நந்தி**

இது இராசகோபுர வாயிலிற் பிரதிட்டை
செய்யப்பட்டிருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவர்கள் காசியிலிருந்து கொண்டு வந்து பிரதிட்டை செய்த சிவலிங்கமும் அம்பாள் விக்கிரகமுமே இன்றும் இருக்கின்றன.

இக்கோயிலைப் புனருத்தாரணஞ் செய்யும் நோக்கத்தோடு 1948 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை நிறுவப்பட்டது. பரிபாலனத்தை இச்சபையார் கையேற்ற பின்பு கோயிலும் அதன் சூழலுஞ் செழிப்புறத் தொடங்கின. திருப்பணிச் சபையின் தலைவராகச் சிவமணி கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அன்னார் ஆற்றிய அரும் பெருஞ் சேவைகள் அளப்பரியன.

இக்கோயிலுக்கு அயலிற் குருகுலம் ஒன்று நடத்தப்படுகின்றது. ஆசாரிய அபிடேகம் பெற விரும்புவோர் இங்கு பயிற்சி பெறுகின்றனர். பூசை முறைகளைச் செயல் முறையிற் கற்பதற்கு இக்கோயில் வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. குருகுலம் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையாரின் மேற்பார்வையில் நடைபெறுகின்றது.

மாசி மாத மகா சிவராத்திரி விழாவுக்கு இக்கோயில் பெரும் பெயர் பெற்றுள்ளது. இவ்விழா நிகழ்ச்சிகளை இரவு முழுவதும் வானொலியில் அஞ்சல் செய்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அன்று பல்லாயிரக் கணக்கான அடியார்கள் அங்கு வந்து "பாவவினை அறுக்கும்" பாலாவியில் நீராடிக் கேதீஸ்வரத்தானை வழிபடுவர். அடியார்கள் தங்குவதற்கு இங்கு பல மடங்கள் உள்ளன. தீர்த்தக்காவடி எடுத்தல் என்பது இக்கோயிலுக்கே சிறப்பானதொன்று. தீர்த்தக் காவடி எடுக்கும் அடியார்கள், பாலாவியிலே தீர்த்தமாடி, ஈரம் புலரா உடையுடன் வெள்ளிக்குடத்திற் பாலாவித் தீர்த்தத்தைப் பக்திப் பரவசத்தோடு தலையிற் சுமந்து கொண்டு வரிசையாக வருவார்கள். அத்தீர்த்தத்தைக் கோயிலின் மேற்குப் பிரகாரத்திற் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் புராதன மகாலிங்கத்துக்குத் தாமே அபிடேகஞ் செய்து பூசிப்பர். இக்காட்சி அன்பு வெள்ளத்தை ஆறாகப் பெருகச் செய்கின்றது.

சிவனுக்கும் அம்பாளுக்குங் கருங்கல்லினால் கர்ப்பக்கிரகம் அமைத்து, 1976 ஆம் ஆண்டு கும்பாபிடேகஞ் செய்யப்பட்டது. இக்கோயிலின் கொடியேற்றத் திருவிழா வைகாசி மாதத்தில் இடம்பெறும். தேர்த் திருவிழா அன்று இழுப்பதற்காக இப்பொழுது ஐந்து தேர்கள் மிகச் சிறந்த முறையில் இந்தியச் சிற்பக்கலை வல்லுனரால் அமைக்கப்பட்டுள்ளன.

திருக்கேதீஸ்வரம் பண்டைப்பீடும் பொலிவும் எய்தும் நாள் உதயமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௬. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரம்

மட்டக்களப்புப் பகுதியிற் புகழ்பெற்ற சைவக் கோயில்கள் பலவுள. அவற்றுள் மிகப் பழமை வாய்ந்தது கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுவரர் கோயில். இது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பழமை வாய்ந்த சிவன் கோயில்களுள் ஒன்று.



படம் 4. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயில்

மட்டக்களப்பு நகரத்திலிருந்து தெற்கே, மண்முனை வழியாக ஏறத்தாழ ஒன்பது மைல் தூரத்திற் கொக்கட்டிச்சோலைக் கிராமம் அமைந்துள்ளது. இங்கு முற்காலத்திற் கொக்கட்டி மரங்கள் சோலையாக வளர்ந்தமையால் இவ்விடம் கொக்கட்டிச்சோலை எனப் பெயர் பெறலாயிற்று. தென்னை மரங்களும் ஆல மரங்களுங் குளிர்ந்த நிழலைப் பரப்பும் இயற்கை எழில் நிறைந்த இக்கிராமத்தின் மத்தியிலே தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலின் மூலத்தானத்தில் உள்ள இலிங்கம் தானாகவே தோன்றியது : அஃதாவது, சிற்பியாற் செய்யப்படாதது. தானாகவே தோன்றிய இலிங்கம் "சுயம்பு இலிங்கம் "எனப்படும். ஒட்டுச்சுட்டான் தான்தோன்றி ஈசுவரர் கோயிலிலுஞ் சுயம்பு இலிங்கமே அமைந்துள்ளது. அக்கோயில் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் வீதியில் ஏறத்தாழப் பதினைந்து மைல் தூரத்தில் இருக்கின்றது.

மிகப் பழைய காலத்தில் மட்டக்களப்புப் பகுதியில் வேடுவர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தேன் தேடிக் காட்டுக்குச் சென்ற பொழுது கொக்கட்டி மரம் ஒன்றிலே தேன்கூடு இருக்கக் கண்டனர். எனவே, அம்மரத்தை வெட்டினர். அவ்வாறு வெட்டும் பொழுது அம்மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டனர். அதற்கு அவ்வேடர் கொத்துப் பந்தல் அமைத்து வழிபடத் தொடங்கினர் என்று கூறுவது செவி வழிக் கதை. இந்தச் சுயம்பு இலிங்கம் இப்பொழுது உள்ளே கோயிலின் மூலத்தானத்தில் இருக்கின்றது. ஆயின், இந்த இலிங்கம் வெளியிலே தெரிவதில்லை; அங்கு உமாமகேசுவரர் விக்கிரகம் தாபிக்கப்பட்டு இருப்பதை நாம் காணலாம்.

திருக்கோணேஸ்வரத்திலே திருப்பணிகள் செய்து கொண்டு இருந்த குளக்கோட்டன் இக்கோயிலின் பெருமையைக் கேள்வியுற்றான். அவன் கொக்கட்டிச்சோலைக்கு வந்து தான்தோன்றீஸ்வரருக்குக் கோயில் கட்டினான். திருப்பணிகள் செய்வதற்கு இந்தியாவிலிருந்து குகன் மரபினரைக் கொண்டுவந்து குடியேற்றினான். கோயிற் பூசைப்பணிகளைக் "கோயிலார்" என்று ஒரு வகுப்பினர் இன்றுஞ் செய்து வருகின்றனர். இந்தக் கோயில் பழைய சிறப்புடன் இன்றும் நிலவுகின்றது.

பதினாறாம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் சைவக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கினர். ஆயின், இக்கோயில் அவர்களாலுந் தாக்கப்படாது தெய்வாதீனமாகத் தப்பியது.

சைவக் குருக்கள் பரம்பரையினர் இங்கு பூசை செய்கின்றனர், இங்கு தினந்தோறும் மூன்று காலப் பூசை நடைபெறுகின்றது. ஆவணி மாதத்தில்வரும் உத்திர நட்சத்திரத்திற் கொடியேற்று விழா ஆரம்பமாகும். பௌர்ணமியை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழா நடைபெறும். மட்டக்களப்பு மாவட்டத்திலே தேர்த்திருவிழா நடைபெறுங் கோயில் இது மட்டுமேயாம். தேர்த் திருவிழாவை இப்பிரதேச மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேரோட்டம்" என்பர். இக்கோயிலில் இரண்டு தேர்கள் இழுக்கப்படுகின்றன. தேரோட்டத்திற்கு அடுத்தநாட் காலையிற் சூகரவேட்டையுந் தீர்த்த உற்சவமும் நடைபெறும். சூகரம் என்பது பன்றி. சிவபெருமான் வேட்டுவக் கோலந் தாங்கி, பன்றி வேட்டை ஆடி, அருச்சுனனுக்கு அருள் புரிந்தார். இக் கதையை ஆறாம் ஆண்டிற் படித்திருபீர்கள். சூகர வேட்டை விழா இந்தக் கதையை நினைவூட்டுகின்றது. மட்டக்களப்புப் பகுதியில் வாழுஞ் சைவ மக்கள் சிவவிரதங்களை இக்கோயிலில் அனுட்டித்து வருகின்றனர்.


இக்கோயிலின் பரிபாலகர்கள் "வண்ணக்கர்" எனப்படுவர். குருக்கள், வண்ணக்கர் ஆகியோரின் உரிமைகள், தாய் வழியாக மருமக்களுக்கு மாற்றப்பட்டு வருதல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. வண்ணை வைத்தீஸ்வரம்

யாழ்ப்பாண நகரிற் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது செட்டியார் சிவன்கோயில். இதனை வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் என்றும் பட்டணத்துச் சிவன் கோயில் என்றுங் கூறுவர். தென்னிந்தியாவிலே திருவாரூருக்கு அண்மையிற் புள்ளிருக்கு வேளூர் என்னுந் தலம் உண்டு. இது தேவாரங்களிற் பாடப்பட்ட தலம். இதனை வைத்தீஸ்வரன் கோயில் என்றும் வழங்குவர். இப்பெயரே வண்ணார் பண்ணையிலுள்ள இச்சிவன் கோயிலுக்கும் இடப்பட்டது இது ஈழநாட்டில் எழுந்த பிற்காலச் சிவன்கோயில்களிற் சிறந்தது



படம் 5. வண்ணை வைத்தீஸ்வரர் கோயில் பழைய தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலை அமைத்தவர் வைத்தியலிங்கச் செட்டியார். ஒல்லாந்தர் ஆட்சியில் இறுதியாகப் பதவி வகித்த தேசாதிபதியின் வளர்ப்பு மகனே வைத்தியலிங்கச் செட்டியார். சைவ சமயத்தவர் வழிபடுதற்கு யாழ்பாண நகரிற் கோயில்கள் இல்லை. எனவே, ஒரு கோயில் கட்டுவதற்குச் செட்டியார் தம் வளர்ப்புத் தந்தையாரிடம் அனுமதி கேட்டார். அனுமதி மனப்பூர்வமாக வழங்கப்பட்டது. செட்டியார் 1790 ஆம் ஆண்டு இக்கோயிலைக் கட்டி முடித்து, மகாகும்பாபிடேகஞ் செய்வித்தார்.

செட்டியாரின் குலகுரு கூழங்கைத் தம்பிரான் என்னும் பெரும்புலவராவர். அவர் செட்டியாருக்கு நல்லாசிரியராய் அமைந்து, அவரை நன்னெறிப்படுத்தினார். செட்டியார் வணிகஞ் செய்து பெருஞ் செல்வம் ஈட்டினார். இதனைச் சிவப் பணியிற் செலவிடப் புலவர் வழிகாட்டினார்.

வைத்தியலிங்கச் செட்டியாரின் குல முன்னோர் திருவாரூரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வைத்தீஸ்வரன் கோயிலில் மிகுந்த பக்தி உடையவர்கள். இதனைச் செட்டியார் அறிவார். அத்துடன், புலவரும் சிவன்கோயிலையே எடுக்க வேண்டுமென்று செட்டியாரைத் தூண்டினார். இவ்வாறாக எழுந்ததே வண்ணை வைத்தீஸ்வரன் கோயில். இது ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. மூன்று பிரகாரங்களை உடையது. இங்கு இரண்டாம் பிரகாரத்துக்கு வெளியே புண்ணிய தீர்த்தம் உண்டு. இதனை அடுத்துப் பெரிய நந்தவனம் ஒன்று உள்ளது. பூசைக்கு வேண்டிய கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ ஆகியவற்றையும் பச்சிலைகளையும் இந்நந்தவனத்தில் பெறக் கூடியதாய் இருக்கின்றது. கிழக்கு நோக்கிய இக்கோயிலின் மூன்றாம் பிரகாரமாகிய தெரு வீதியின் புறத்தே பதினாறு கால் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. பூங்காவனத் திருவிழாவன்று, பார்வதி அம்மையார் பரமேசுவரனை நோக்கித் தவஞ் செய்ய இம்மண்டபத்துக்கு எழுந்தருளுவார்.

புள்ளிருக்குவேளூரிற் போல இங்கும் இறைவர்க்கு வைத்தீஸ்வரன் என்றும் அம்பாளுக்குத் தையல்நாயகி என்றும் தீர்த்தத்திற்குச் சித்தாமிர்தபுட்கரணி என்றும் பெயரிட்டனர். அன்று தொட்டு இன்று வரை நாளும் ஆறு காலப் பூசைகள் முறைப்படி நடக்கின்றன. ஆண்டுதோறும் சுவாமிக்கு 22 நாட் பெருவிழா எடுப்பர். அது பங்குனி உத்திரநாளன்று தீர்த்தோற்சவத்தோடு முடிவுறும். அம்பாளுக்குப் பத்து நாள் விழா ஆடிப் பூரத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் முற்றுப்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட வேறுபல விழாக்களும் ஆண்டுதோறும் சிறப்போடு நடந்து வருகின்றன. நவராத்திரி காலத்தில் அம்பிகை கொலுவீற்றிருத்தல் பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாகும். நால்வர்க்குக் காட்சி கொடுக்கும் விழா பக்தி பெருகச் செய்வது. பிட்டுக்கு மண் சுமந்த பெருவிழாவுஞ் சிறப்பாக நிகழும். அன்று விழாவைப் போன்றே அங்கு வழங்கும் பிட்டும் மிகவுஞ் சுவையாய் இருக்கும். திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையில் நிகழும் மணிவாசகர் பூசை உள்ளத்தை உருக்கும்.

நாவலர் பெருமானுக்கு வண்ணை வைத்தீஸ்வரன் மீது அளப்பரும் பற்று உண்டு. அவர் சைவப் பிரசங்கங்கள் செய்வதற்குத் தகுந்த இடமாக வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வசந்த மண்டபத்தையே கொண்டார். அவர் முதன்முதலாகத் தமது சைவப் பிரசங்கத்தை இங்கேயே நிகழ்த்தினார். அப்போது தெய்வச் செயலாக ஆலய மணி ஒலித்தது. சைவத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கு நல்ல சகுனமாய் அது அமைந்தது. அவருக்குப் பின் அவருடைய மருகர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கங்களை அங்கேயே செய்து வந்தார். பின்பு சங்கர சுப்பையரும் அங்கே இன்னிசையோடு கதை சொல்லி இறைவன் புகழ் பரப்பினார். இந்த மரபு இன்றும் தொடர்ந்து நிலவி வருகின்றது.

இக்கோயிலின் நிருவாகத்தை வைத்தியலிங்கச் செட்டியாரின் மரபிலே தோன்றியவர்கள் செய்து வருகின்றனர். அவர்கள் அண்மையில் இந்தக் கோயிலைப் புனருத்தாரணஞ் செய்து கும்பாபிடேகம் நடாத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. சிவ சின்னங்கள்

## (அ) திருநீற்றின் மகிமை

உடலை இயக்குவது உயிர்; உயிருக்கு உயிராக நின்று அதனை இயக்குபவன் இறைவன். அவனை நினைப்பூட்டுஞ் சின்னங்களாக விளங்குபவை விபூதியும் உருத்திராக்கமும் ஆகும். விபூதி என்பதற்கு நல்ல தமிழ்ச் சொல் "திருநீறு" என்பது. எவர் சிவசின்னங்களைத் தரித்திருக்கின்றாரோ, அவரை இறைவனாக மதித்து நாம் போற்றல் வேண்டும். இது சைவ மக்களுடைய பண்பாடு.

தினந்தோறும் நாம் அணியுந் திருநீறு நம்மிடத்தே இறைவன் குடிகொண்டிருப்பதை நினைவுபடுத்துகின்றது. பெரிய புராணத்தில் வரும் அடியார்களின் சரித்திரங்களை நாம் கற்கும்போது இவ்வுண்மை புலப்படும். திருநீறு அணிந்தவர்களைச் சிவபெருமானாகவே மதித்து அடியார்கள் போற்றினார்கள். மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லவந்த பகைவன் நெற்றி நிறையத் திருநீறு பூசியிருந்தான். இதனால் நாயனார் அவனை மன்னித்தார். ஏனாதிநாத நாயனாருடன் வாட்போர் செய்தான் ஒருவன். அவனுடைய நெற்றியிலிருந்த திருநீற்றைக் கண்டார் நாயனார் : கண்டவுடன் போர் செய்வதை நிறுத்திவிட்டார்.

துணி வெளுப்பதற்காக உவர்மண் பொதி சுமந்து கொண்டு ஒருவன் வந்தான். வழியில் மழை பெய்தது. உவர்மண் உடம்பு முழுவதும் படிந்தது. அவன் திருநீறு பூசியவன் போலக் காட்சியளித்தான். சேரமான் என்னும் அரசர் தம் யானை மீது அவ்வழியே வந்தார்; பொதி சுமப்பவன் முன்னே வரக்கண்டார்; யானையிலிருந்து இறங்கினார். அவனைக் கைகூப்பி வணங்கினார். அப்பொழுது அவன் திகைத்தான் சிந்தை கலங்கினான்; தன் தொழிலைக் கூறினான். அதற்கு அரசர் "திருநீற்றின் வேடம் நினைப்பித்தீர்; மனம் வருந்தாது செல்லும்" என்றார்.

இவர்கள் இங்ஙனஞ் செய்ததன் காரணம் என்ன? திருநீறு இவர்களுக்குச் சிவபெருமானை நினைப்பித்தது; அன்பே உருவான இறைவனின் பிள்ளைகள் நாம் என்ற எண்ணத்தை உதிப்பித்தது. அதனால் அன்பு பிறந்தது. எனவே, அன்பு நெறிக்கு நம்மை இட்டுச் செல்வது திருநீறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் உண்மையே உருவானவன். நாம் திருநீற்றைப் பூசும்பொழுது "உண்மையே பேசுவோம்" என்று உறுதி பூணல்வேண்டும். திருநீற்றின் வெண்மை நிறம் தூய்மையைக் குறிக்கின்றது. நாம் நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து, திருநீறு பூசி, புனிதமாகக் கோயிலுக்குச் செல்கிறோம் அல்லவா? அது எதனைக் குறிக்கின்றது? நமக்குப் புறத்தூய்மை, அகத்தூய்மை ஆகிய இரண்டும் அவசியம் என்பதையே குறிக்கின்றது.

திருநீற்றை நாம் மிகவும் பயபக்தியோடு அணிதல் வேண்டும். நிலத்திலே சிந்தாமல் அண்ணாந்து "சிவ சிவ" என்று செபித்து அதனை அணிதல் முறை. பேசிக்கொண்டும் நடந்துகொண்டும் படுத்துக் கொண்டும் திருநீறு அணிதல் முறையன்று. சிவதீட்சை பெற்றவர்கள் சந்தியாவந்தனஞ் செய்து விதிப்படி திருநீறு அணிவார்கள். பெரியோரிடத்திலிருந்து திருநீறு வாங்கும் பொழுது, பணிவுடன் வணங்கி, இரு கைகளாலும் வாங்கல் வேண்டும்.

கோயிலிற் பிரசாதமாகக் கொடுக்குந் திருநீற்றை மருந்து போலப் பேணிச் சிறிதளவு வாயிலிட்டு நெற்றியிற் பூசுதல் நம் வழக்கம். சிவபெருமானின் நெற்றிக் கண்ணைக் குறித்தற்காக, நாம் நெற்றியிலே சந்தனத்தையுங் குங்குமத்தையும் பொட்டாக அணிகின்றோம். பிரசாதமாக எங்களுக்குக் கிடைத்த திருநீறு, சந்தனம், குங்குமம் ஆகியவற்றை வீட்டுக்குக் கவனமாக எடுத்துச் சென்று வேறொரு நேரம் அணிதல் சாலச் சிறந்தது.

பசுவின் சாணத்தை எரித்துத் திருநீறு பெறுகிறோம், கன்றை உடையதும் உடல் நலம் பொருந்தியதுமான பசுவின் சாணத்தையே இதற்கு எடுப்போம். அதில் மேலுங் கீழும் நீக்குவோம். நடுப் பகுதியை வடைபோலத் தட்டுவோம். அவற்றை வெய்யிலில் நன்றாக உலர்த்துவோம். உலர்ந்தபின் நெற் சப்பட்டையால் நன்கு மூடி எரிப்போம். எரிந்து நீறாகியவுடன் வெள்ளைவெளேரென ஒளிருந்திரு நீறு அங்கு காணப்படும். அதனைப் புதுப்பானையில் எடுத்து, மல்லிகை முல்லை முதலிய நறுமலர்கள் இட்டுக் கவனமாக மூடி வைப்போம்.

திருநீற்றின் மகிமையைத் திருஞானசம்பந்தர் திருநீற்றுப் பதிகத்திற் பாடியுள்ளார். இதன் முதற்பாட்டு "மந்திரமாவது நீறு" என்று தொடங்குகின்றது. வெப்பு நோயால் வருந்திய பாண்டிய மன்னனின் மேனியில் திருஞானசம்பந்தர் திருநீறு இட்டு இப்பதிகத்தைப் பாடினார், உடனே பாண்டியனுடைய நோய் தீர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீறு எங்கள் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றையுந் தூய்மையாக்குங் கருவியாக விளங்குகின்றது.

## (ஆ) உருத்திராக்கத்தின் பெருமை

சிவனடியார்கள் உருத்திராக்கம் அணிவது வழக்கம். சிலர் ஓர் உருத்திராக்க மணியினைக் கழுத்திலே எப்பொழுதும் அணிந்திருப்பர். சிவபூசை, புராணபடனம் முதலியவற்றைச் செய்யும்பொழுது சிலர் உருத்திராக்க மாலை அணிவர். சைவ மடாலயங்களின் முதல்வர்களாகிய பண்டாரச் சந்நிதிகள் முதலானோர் தலையிலுங் கழுத்திலும் கையிலும் உருத்திராக்க மாலைகள் அணிந்திருப்பர்.

சிவபெருமானுக்கு "உருத்திரன்" என்று ஒரு பெயர் உண்டு. "அக்கம்" என்பது கண் எனப் பொருள்படும். உருத்திராக்கம் என்பதற்கு உருத்திரனுடைய கண் என்பது கருத்து. இது சிவபெருமானின் பெருங் கருணைக்கும் அவர் நம்மிடங் கொண்டுள்ள பேரிரக்கத்துக்கும் அடையாளமாக அமைகின்றது.

## (இ) பஞ்சாட்சர செபம்

திருநீறும் உருத்திராக்கமும் நாம் புறத்தே அணியுஞ் சிவசின்னங்கள். அகத்தே எப்பொழுதும் நாம் தியானிக்க வேண்டியது பஞ்சாட்சர மந்திரம். இதனைத் "திருவைந்தெழுத்து "என்று நான்காம் ஆண்டிற் படித்துள்ளோம். எங்களுக்குத் துன்பம் நேரும் பொழுதுதானும் அவல ஓசை எழுப்பலாகாது. அவ்வேளையில் "நமசிவாய" என்ற பஞ்சாட்சர மந்திரத்தைச் சொன்னால் அது நற்றுணையாக அமையும். அப்பரைக் கல்லுடன் கட்டிக் கடலிற் பாய்ச்சிய பொழுது அவர் "நமசிவாய" என்றே துதித்தார். அப்பொழுது கல் தெப்பமாக மாறியது என்று நாம் முன்பே படித்தோமல்லவா? நாமும் அவ்வாறு பழகிக் கொண்டால் ஐந்தெழுத்தை உச்சரிக்கச் சில சமயம் மறந்தாலும் நமது நாவானது "நமசிவாய" என்று சொல்லும்.

"சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை"

என்று நல்வழி என்னும் நூலில் ஒளவையார் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிள்ளை சைவக் குடும்பத்திலே பிறந்து, சைவச் சூழலில் வளர்ந்தாலும் சிவதீட்சை பெற்ற பின்னரே "சைவசமயி" எனக் கொள்ளப் படும். திருநீற்றை விதிப்படி அணியவும் பஞ்சாட்சர மந்திரத்தை முறைப்படி செபிக்கவும் சைவக் கிரியைகளிற் பங்கு கொள்ளவும் சிவதீட்சை பெற்றவனே உரிமை உடையவனாகின்றான். எனவே, உரிய காலத்திற் சிவதீட்சை பெறுதல் சைவர்களாகப் பிறந்த நம்முடைய தலையாய கடமையாகும்.

வாய்மை, தூய்மை, அன்பு, அறம், இரக்கம், பணிவு முதலிய பண்புகளை நாம் வளர்த்துச் சிவ பக்தியைப் பெருக்குவதற்குத் திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து ஆகியன நமக்கு உறுதுணையாக உதவுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. மகாசிவராத்திரி

முன்னொரு பொழுது பிரமா உலகங்களையும், அங்கே இயங்கும் உயிர்களின் அழகிய உடல்களையும், அவை நுகரும் போகப் பொருள்களையும் பார்த்தார். "இவற்றை எல்லாம் நானன்றோ படைத்தேன். என்னில் மேலான வேறொரு கடவுள் இல்லை; நானே பரம்பொருள்" என்று செருக்குற்றார்.

இவ்வாறு செருக்கடைந்த பிரமா திருமாலிடஞ் சென்றார். அவர் பாற்கடலிற் பள்ளி கொண்ட வண்ணம் இருந்தார். பிரமன் அது கண்டு "என் வரவையும் மதியாது நித்திரை செய்கின்றாயே! எழுந்திரு" என்று சொல்லி அவருடைய மார்பிலே குத்தினார்.



படம் 6. திருக்கேதீஸ்வரத்தில் அகழ்ந்தெடுத்த புராதன மகாலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் எழுந்தார். "நீ யார் ? சொல்" என்று பிரமா அதட்டினார். "மைந்தனே, என்னைத் தெரியாதா ? நான் தான் உனது தந்தை" என்றார் திருமால்.

பிரமாவுக்கு இதைக் கேட்டதும் சிரிப்பு உண்டாயிற்று. உனக்கு இன்னும் நித்திரை முறியவில்லைப் போலிருக்கிறது ; வீணாகப் பிதற்றாதே. நீ எனக்குத் தந்தை என்ற செருக்கை விட்டுவிடு. நீ பத்துப் பிறப்புக்கள் எடுத்தாயே! உன்னுடைய அந்தப் பத்து உடல்களையும் படைத்ததனால் என் கைகளுங் கன்றிவிட்டன. இதோ பார் என்றார் பிரமா.

திருமாலுக்கு கோபம் வந்தது ,"பரமசிவன் கிள்ளிய உன் தலையை நீ இன்னும் படைத்துக் கொண்டாயில்லை. அப்படிப்பட்ட நீயா என் பிறவிகளைப் படைத்தாய்? உன் பேச்சு வேடிக்கையாக இருக்கின்றது. நானின்றி உலகில் எந்தப் பொருளும் உண்டாகாது. நாரணனும் நான்: மறையும் நான்: மறைப் பொருளும் நான்; அந்தப் பரமசிவனும் நான்; யாவையும் நான்" என்று திருமால் பலவற்றைச் சொன்னார்.

வாக்குவாதம் முற்றிக் கைகலப்பு ஏற்பட்டது. போர் சற்றுந் தளராது நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது அவர்களுடைய செருக்கை அடக்கிச் செம் மனத்தராக்கச் சிவபெருமான் திருவுளங் கொண்டார்; இருவருக்கும் இடையே ஒரு பெரிய சோதிப் பிழம்பாகத் தோன்றினார்.

திருமாலும் பிரமாவும் நடுநடுங்கிப் போர் விடுத்துப் பயந்து நின்றனர். அப்பொழுது "சிறுவர்களே! உங்கள் வலிமையைக் காட்ட இச்சோதி மலையின் அடியையும் முடியையுங் காணுங்கள்" என்றொரு விண்வாக்கு எழுந்தது.

திருமால் பெரியதொரு பன்றி வடிவங்கொண்டு அடியைத் தேடிக் கீழே அகழ்ந்து சென்றார். பிரமா அன்னப் பறவை வடிவங் கொண்டு முடியைத் தேடி மேலே பறந்துபோனார். ஆயிரமாயிரம் ஆண்டுகள் தேடியும் அடியைக் காணாது திருமால் பூமியின் மேலே வந்து சோதிக்கு அண்மையில் ஒதுங்கி நின்றார். முடியைக் காணாத பிரமாவும் திருமால் இருக்கும் இடத்தைச் சேர்ந்தார்.

செருக்கொழிந்த இருவர் மனமும் இறைவனிடத்திலே சரணடைந்தன. ஒரு சிவலிங்கம் அமைத்து இருவரும் வழிபாடு செய்தனர். அப்பொழுது சிவபெருமான் தோன்றி அவர்களுக்கு அருள் புரிந்தார் ; பின் சோதியினுள் மறைந்தருளினார். சோதியும் சுருங்கிவந்து ஒரு சிறு மலையாக அமைந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிப் பிழம்பாகத் தோன்றிய இறைவன் திருமாலுக்கும் பிரமாவுக்கும் அருள் சுரந்த நாள் கார்த்திகை மாசத்து முழுமதித் தினம் என்பர். அன்று விளக்கீடு கொண்டாடியும் சொக்கப்பனை எரித்தும் சிவபெருமான் சோதிப்பிழம்பான அருட் செயலை நாம் ஞாபகப்படுத்திக்கொள்கிறோம். சிவபெருமான் சோதிப் பிழம்பாகத் தோன்றியது ஒரு மாசித் திங்கள் தேய்பிறை பதினான்காம் நாள் நள்ளிரவாகும். அந்த இரவு மகா சிவராத்திரி என்ற சிவ புண்ணியகாலமாயிற்று. மகா சிவராத்திரியன்று சைவ மக்கள் நோன்பிருந்து சிவலிங்கப் பெருமானை வழிபடுவர்.

மகா சிவராத்திரித் தினத்தன்று இரவு முழுவதும் நித்திரை செய்யாது, செபத்திலும் புராண படனம், திருமுறை ஓதல் ஆகியவற்றைக் கேட்பதிலும் நேரத்தைக் கழித்து, நான்கு யாமமும் சிவாலய தரிசனஞ் செய்ய வேண்டும். இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலம் எனப்படும். முழு இரவும் நித்திரை ஒழிக்க முடியாதவர் இலிங்கோற்பவ காலம் முடியும் வரையாவது நித்திரை ஒழித்தல் வேண்டும்.

மகா சிவராத்திரி அன்று உபவாசம் இருத்தல் உத்தமம். சிவன் கோயில்களுக்குச் சிவராத்திரி சிறந்த தினமாகும். அன்றிரவு நான்கு யாம விசேட பூசை நடைபெறும். நமது நாட்டிற் சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுந் தலம் திருக்கேதீஸ்வரம். வசந்த மண்டபத்தில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடம் பெறும். இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமிருந்து அங்கு வந்து குழுமியிருக்கும் சிவபக்தர்கள் இரவு முழுவதுஞ் சிவபெருமானை வழிபட்டு அருள் பெறுவர். சங்கிலித் தொடர்போல வரிசையாக அடியார்கள் வெள்ளிக் குடங்களிற் பாலாவித் தீர்த்தம் எடுத்துத் தலையிற் சுமந்து சென்று புராதன மகாலிங்கத்தைத் திரு முழுக்காட்டுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. திருவாதிரை

மார்கழித் திருவாதிரையன்று கோயில்கள் எல்லாம், பெரியது சிறியது என்ற பேதமின்றி, விழாக்கோலங் கொள்ளும். ஆண்டு தோறும் மார்கழி மாசத்து வளர்பிறை ஆறாம் நாள் தொடங்கிக் கோயில்களிலே திருப்பள்ளி எழுச்சியைத் தொடர்ந்து திருவெம்பாவை பாடப்படும். பத்தாம் நாளாகிய திருவாதிரையோடு கூடிய முழுமதித் தினத்தன்று விழாவும் எடுக்கப்படும்.

எல்லாக் கோயில்களிலும் இவ்விழாக் கொண்டாப்பட்டாலும் சிவன் கோயில்களிலேதான் அது விமரிசையாக நடைபெறும். அவற்றுள்ளும் அது சிதம்பரத்திலேயே மிகச் சிறப்பாக நிகழும்.

சிதம்பரத்திலே திருவாதிரைக்கு முதல் நாள் இரவு மூன்றாம் சாமம் தொட்டுச் சபாநாயகருக்குப் பெருமுழுக்குச் செய்வார்கள். விடிந்ததும் அங்கே தேர்த்திருவிழா. தேருக்குச் சுவாமி புறப்படுவதற்கு முன் அவர் உள்வீதி வலம் வருவார். மணிவாசகப் பெருமானும் உடன் வலம் வருவார். ஆனால் ஒரு வித்தியாசம் ; பெருமான் சுவாமியை நேர்முகமாகப் பார்த்தவண்ணம் பின் காட்டியே வலம் வருவார். தாம் தேடிப் பெற்றுக் கொண்ட "அருமருந்தை" ஓர் இமைப்பொழுது நேரமாகிலும் கண்ணாற் கண்டு பருகுதலைத் தவிர்க்கலாற்றாமையினால் இப்படிச் செய்கிறார் போலும்.

சபாநாயகர் மலர் விமானத்திலே தேருக்கு எழுந்தருளுங் காட்சி கண்ணிற்கு அரிய விருந்தாகும். மார்கழித் திருவாதிரை நாளின் சிறப்பு நோக்கியே சம்பந்தப்பிள்ளையாரும் "ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவாய்" என்று பாடினார்.

சைவப் பெருமக்கள் பலர் இத்திருநாளிலே உபவாசமிருந்து இறைவனை மனமொழிமெய்களால் வந்திப்பர். இந்த விரதத்தைச் சிதம்பரத்திலேயே இருந்து அனுட்டித்தல் சாலச் சிறந்தது.

மார்கழித் திருவாதிரையும் திருவெம்பாவையும் ஒன்றிவிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. திருவெம்பாவையின் பூர்த்தியே திருவாதிரை எனலாம். திருவெம்பாவைக் காலத்திலே பஜனைக் குழுக்கள் தினமும் அதிகாலையில் வீதி வீதியாகச் சென்று பஜனை செய்யும். ஏற்கனவே துயிலெழாதவர்கள் இன்னிசைப் பாடல்களைக் கேட்டு எழுந்திடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் மற்றையோரைப்போல் நீராடி, கோயிலிலோ, வீட்டிலோ திருவெம்பாவைப் பாசுரங்களைப் பாடி இறை வணக்கஞ் செய்வர்.

திருவெம்பாவைப் பாசுரங்கள் கன்னிப் பெண்கள் ஒருவரை ஒருவர் அதிகாலையிலே துயிலெழுப்பி, ஒழுங்குடன் சென்று, குளிர்ந்து மார்கழி நீராடும் பாவனையில் அமைந்தவை. இவ்வாறு பொய்கையிலே நீராடப் போகும் கன்னியர்கள் தாம் பூசிக்கும் பாவையை, அதாவது சக்தியை விளித்தே ஏனைய மகளிரைத் துயிலெழுப்புவார்கள். நாட்டில் மழை வளம் பெருக வேண்டும் என்றும் உத்தம நாயகரைத் தாம் அடைய வேண்டும் என்றும் கன்னிப் பெண்கள் பாவை நோன்பிருத்தல் பண்டைய மரபாயிருந்தது.

திருவெம்பாவைக் காலத்து முதல் ஒன்பது நாளும் திருக்கோயில்களிலே திருவாசகமன்றிப்பிறிதொரு திருமுறையும் ஓதமாட்டார்கள். இறுதி நாளாகிய திருவாதிரையன்றும் திருவெம்பாவை ஓதப்பட்ட பின்னரே திருமுறைகள் ஓதப்படும்.

மார்கழித் திருவாதிரை ஒரு சிறந்த நாளாயினும் ஏனைய மாசங்களில் வருந் திருவாதிரைகளும் போற்றப்படும்.

ஒருபொழுது சம்பந்தப் பிள்ளையார் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு திருப்புகலூரில் இருந்தார். அப்பொழுது அப்பர் சுவாமிகள் திருவாரூரிலிருந்து அங்கே வருகிறார் என்று கேள்விப்பாட்டார். உடனே அவரை எதிர்கொண்டு வணங்கிப் பின் அப்பரே! நீர் வரும் நாளிலே திருவாரூரில் நடந்த பெருமையினைச் சொல்லும் என்று கேட்டார். அப்பொழுது அப்பர் சுவாமிகள் பதிகம் பாடித் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரைச் சிறப்பினைச் சொல்லியருளினார். திருவாதிரை விழாவின் அழகினை நாயனாருடைய தேவாரம் ஒன்று விவரமாகக் கூறுகின்றது. அது பின்வருமாறு:

திருச்சிற்றம்பலம்

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தனாரூ ராதிரை நாளா லதுவண்ணம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தை ஒரு சித்திரை மாசத்துத் திருவாதிரை நாளிலேயே பாடத் தொடங்கினார். பெரிய புராணத்துக்குப் பொருள் விரிக்குமாறு அரசன் சேக்கிழாரிடங் கேட்டான். அப்பொழுது அவர் பொருள் விரிக்கத் தொடங்கியதும் ஒரு சித்திரை மாசத்துத் திருவாதிரை நாளாகும். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ஒரு சித்திரை மாசத்துத் திருவாதிரை நாளிலே திருவவதாரஞ் செய்தார் என்பதைச் சேக்கிழார் விதந்துரைக்கின்றார்.

திருவாதிரை ஒரு சிறந்த தினம் என்பது இங்கு கூறியவற்றாற் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. பிரதோஷம்

தேவர்களும் அசுரர்களும் சாவாமருந்து பெறுவதற்காகப் பாற் கடலைக் கடைந்தார்கள். கடல் பெரியது என்றமையால் மந்திர மலையை மத்தாக நாட்டினார்கள். அதிலே வாசுகி என்னும் பாம்பைச் சுற்றிக் கடையத் தொடங்கினார்கள். பாம்பு வருத்தம் தாங்கமுடியாது விடம் கக்கியது. அந்த விடம் கடைந்து கொண்டிருந் தவர்களைத் துரத்தியது. அவர்கள் பீதியடைந்து ஓலமிட்டுக்கொண்டு சிவபெருமானிடத்திலே சரண்புகுந்தார்கள்.

விடம் அவர்களை விட்டபாடில்லை ; தொடர்ந்து துரத்தியது. அதனால் அவர்கள் அல்லோல கல்லோலப்பட்டுச் சுவாமியைச் சுற்றி இடப்புறமாக ஓடினார்கள். விடம் வலப்புறமாக விரைந்து வந்து வழி மறித்தது. அவர்கள் வந்த வழியே திரும்பிச் சுவா மியைச் சுற்றி வலப்புறமாக ஓடினார்கள். விடமும் திசை திரும்பி இடப்புறமாக வந்து அவர்களை எதிர்கொண்டது.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சிவபிரானுக்குப் பேரிரக்கம் வந்தது. விடத்தைப் பிடித்துவரும்படி தமது அடியாரான சுந்தரரைப் பணித்தார். சுந்தரர், பெருமானின் அடியாரானமையாற் பேராற்றல் உடையவர். அவர் விடத்தை அங்கையில் அடக்கிக் கொண்டு வந்து சுவாமியிடங் கொடுத்தார். சுவாமி அதை உடனே அமுதமெனப் பருகினார்.

விடம் சுவாமியின் தொண்டை வழியே இறங்கிக் கொண்டி ருந்தது. கூட இருந்த உமையம்மையார் பயந்து நாதரின் கண்டத்தை இறுக்கப்பிடித்தார். நஞ்சும் செலவு நீங்கிக் கண்டத்தே நின்று கொண்டது. ஆனால் கண்டத்திலே விடந் தங்கிய இடம் நீலம் பாரித்துவிட்டது. இந்த நீலக்கறை சுவாமியின் பேரருட் செயலுக்கு அறிகுறியாக நிலவுகின்றது. சுவாமி திருநீலகண்டர் என்ற பெயரையும் பெற்றார்.

இது நிகழ்ந்தது ஒரு திரயோதசித் திதியிலே. அன்று சூரிய னின் மறைவிற்கு முன்னும் பின்னும் முன்றேமுக்கால் நாழிகைகள் நந்தி கேசுவரரின் கொம்புகளுக்கிடையில் நின்று நஞ்சுண்டகண்டர் நடனமாடினார். சுவாமி இப்படி நடனமாடிய முகூர்த்தம் பிரதோஷ காலம் எனப்படும். இவ்வாறு புராணங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தலங்களிலே பிரதோஷ காலத்தில் நந்திகேசுவரருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும் விசேட பூசைகள் நடைபெறும். அவற்றைத் தொடர்ந்து உமையோடு கூடிய உற்சவமூர்த்திக்கு விசேட பூசையுந் தீபாராதனைகளும் நடைபெறும். அதன்பின் மூர்த்தியை உமாசகிதராய் இடபத்தின் மீது எழுந்தருளப்பண்ணி வீதிவலங் கொண்டு வருவார்கள்.

பிரதோஷ காலத்திலே சிவாலய தரிசனஞ் செய்தல் மிகவும் போற்றத் தகுந்த ஒழுக்கமாகும். அக்காலத்திலே கோயில் கும்பிடுவோர் இடமாகவும் வலமாகவும் வீதி சுற்றுதலை நாம் காணலாம். பாற் கடல் கடைந்த அன்று தேவர்கள் நடந்து கொண்ட முறையில் நடப்பதே இதன் நோக்கமாகும். இதனால் இறைவனுடைய பேரருட்டிறத்தினை நினைந்து மனத் தூய்மை அடைகிறோம். இம்மட்டோடு அமையாது நாம் பிரதோஷ காலத்திலே பாடுந் திரு முறைப் பாட்டுக்களையும் விடமுண்ட திருச்செயல் குறிப்பனவாய் தெரிந்தெடுத்துப் பாடுதல் மிகவும் பொருத்தமானது.

பல பத்தர்கள் பிரதோஷ தினத்தன்று நோன்பிருப்பார்கள். இவர்கள் பகல் முழுவதும் உணவு உண்ணாதிருந்து, பிரதோஷ காலத்திலே சுவாமி தரிசனஞ் செய்து, அக்காலங் கழிந்த பின்னரே சிவநேயச் செல்வர்களோடிருந்து உணவு உண்பர்.

இவ்விரதம் ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்கள் ஒன்றிலே வருஞ் சனிப் பிரதோஷம் தொட்டு அனுட்டிக் கப்படும்.

பிரதோஷ காலத்திலே விதிப்படி மெய்யன்போடு சிவாலய தரிசனஞ் செய்துவரின் கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரண வேதனை ஆகியவை நீங்கும். தீவினைப் பயம் அருகும். சகல சிறப்புக்களும் உண்டாகும். பிரதோஷ காலத்திலே வீதி சுற்றும் விதி முறையினை நாவலரின் இரண்டாஞ் சைவ வினா விடையிலும் ஒன்பதாம் வகுப்புக்குரிய சைவ நெறியிலும் பார்த்தறிந்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. காரைக்கால் அம்மையார்

சோழ மண்டலத்திலே காரைக்கால் என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கு அறவழி நின்று பொருள் ஈட்டும் வணிகர் குலத்திலே தனதத்தன் என்னும் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியார் என்ற ஒரு புதல்வி பிறந்தார். தனதத்தன் புனிதவதியாரைப் பரமதத்தன் என்பவனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். அவர்களைத் தன் வீட்டிற்கு அருகிலே ஒரு வீடு கட்டி, அதிலே இருத்தினான்.

பரமதத்தன் தன் செல்வத்தை விருத்தி செய்தான். புனிதவதியார் சிவ பத்தியிற் சிறந்து விளங்கினார். சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து இல்லறத்தை இனிது நடத்தி வந்தார்.

ஒருநாள் பரமதத்தனிடம் அலுவலாக வந்தவர்கள் இரண்டு மாம்பழங்களைக் கையுறையாகக் கொடுத்தனர். அவன் அவற்றைத் தன் மனைவியாரிடம் அனுப்பி வைத்தான். புனிதவதியார் பசியினால் வருந்தி வந்த சிவனடியார் ஒருவருக்கு அமுதூட்ட விரும்பினார். அப்பொழுது சோறு மட்டுமே சமைக்கப்பட்டிருந்தது ; கறி சமைக்கப்படவில்லை. எனவே, அவர் பழங்களுள் ஒன்றினை வெட்டிப் படைத்து அவ்வடியாரைத் திருவமுது செய்வித்தார்.

பரமதத்தன் நண்பகலிலே வீட்டுக்கு வந்து உணவருந்தும் பொழுது, மனைவியர் எஞ்சியிருந்த மாம்பழத்தை வெட்டிக் கொடுத்தார். அது மிகவும் இனிய சுவை உடையதாய் இருந்தது. எனவே, மற்றைக் கனியையும் வெட்டித் தரும்படி இவன் கேட்டான். புனிதவதியார் அதனைக் கொண்டுவரச் செல்பவர் போல உள்ளே போய் நின்று மனமுடைந்தார்; இறைவனை வேண்டினார். மெய்யன்பர்களுக்கு உற்றவிடத்து உதவும் பரமசிவனுடைய கருணையினால் மாம்பழம் ஒன்று அவர் கையில் வந்திருந்தது.

அக்கனியை கண்ட பரமதத்தன், அதன் சுவை முன்னையதிலும் இனிமையாக இருத்தலை உணர்ந்தான். "இதனை நீ எங்கே பெற்றாய்?" என்று கேட்டான். புனிதவதியார் நிகழ்ந்ததை உள்ளபடியே கூறினார். அதனை நம்பாத பரமதத்தன் "இந்தக் கனி சிவபிரானுடைய திருவருளினாலே கிடைத்ததாயின், இன்னும் ஒரு கனி அவருடைய திருவருளினாலே வருவித்துத்தா" என்று கூறினான். புனிதவதியார் அவ்விடம் விட்டகன்று, பரமசிவனைத் துதித்து இன்னும் ஒரு கனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தருளீரேல் என்னுரை பொய்யாம்" என்று விண்ணப்பித்தார். அப்பொழுது சிவனருளால் இன்னுமொரு மாம்பழம் அவர் கையில் வந்தெய்தியது. அதனை அவர் தம் கணவன் கையிற் கொடுத்ததும் அவன் மிக வியப்படைந்து வாங்கினான். அவன் வாங்கியதும் அவன் கையினின்றும் அது மறைந்தது. அவன் மிகுந்த பயமடைந்து மனந்தடுமாறினான். புனிதவதியாரைத் தெய்வமென நினைத்தான். அவரைப் பிரிந்து வாழ எண்ணினான்.

சில நாட்கழிய அவன் பாண்டி நாட்டிலுள்ள ஒரு நகரத்தை அடைந்தான். அங்கே ஒரு வைசியருடைய மகளைத் திருமணஞ் செய்து பெருஞ் செல்வத்தோடு வாழ்ந்திருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே பிறந்த பெண் குழந்தைக்குப் புனிதவதியார் என்னும் பெயரிட்டான்.

இங்ஙனம் பரமதத்தன் அங்கே இருக்குங் காலத்தில், புனிதவதியாருடைய சுற்றுத்தார்கள் பரமதத்தன் பாண்டி நாட்டிலே வாழ்கின்றான் என்று கேள்விப்பட்டார்கள். அவர்கள் அவனிருக்கும் இடத்தே புனிதவதியாரைக் கொண்டுபோய் விடுவது என்று முடிவு செய்தார்கள்.

சிவிகையிலே புனிதவதியாரை ஏற்றிச் சுற்றத்தார் புடைசூழப் பாண்டி நாடு சென்றடைந்தனர். அவனுக்கு ஆள் அனுப்பி தாம் வந்த செய்தியைத் தெரிவித்தார்.

அப்பொழுது அவன் அச்சங் கொண்டான். தன்னுடைய இரண்டாம் மனைவியோடும், மகளோடும் புனிதவதியாரிடத்திற்கு வந்தான். "யான் உமதருளால் இங்கே வாழ்கின்றேன்; இவ்விளங் குழவிக்கு உமது பெயரையே இட்டேன்" என்று கூறி அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

கணவன் தன்னை வணங்கக் கண்ட புனிதவதியார் தம் சுற்றுத்தார்பால் அச்சத்தோடு ஒதுங்கி நின்றார். உறவினர் "நீ உன் மனைவியை வணங்குவது என்ன?" என வினவினர். அப்பொழுது பரமதத்தன் நிகழ்ந்த வரலாற்றைக் கூறி "நீங்களும் இவரை வணங்குங்கள்" என்றான். அது கேட்ட சுற்றத்தார்கள் "இது என்ன ஆச்சரியம்" என்று திகைத்து நின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவதியார் கணவன் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்தார். "இவருடைய கொள்கை இது ; இனி இவருக்காகத் தாங்கிய அழகு பொருந்திய இத்தசைப் பொதியை நீக்கி தேவரீரைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேய் வடிவை அடியேனுக்குத் தந்தருள வேண்டும்" என்று இறைவனை அவர் வேண்டினார். அப்பொழுதே இறைவன் திருவருளினாலே, உடம்பிலுள்ள ஊன் முழுவதையும் அகற்றி எலும்பு உடம்பு உடைய பேய் வடிவம் பெற்றார். சுற்றத்தார்கள் அவரை வணங்கி அகன்று போயினர்.

சிவபெருமானுடைய திருவருளினாலே "அற்புதத் திருவந்தாதி," "திருவிரட்டைமணிமாலை" என்பவற்றைப் பாடித் திருக்கைலைக்குச் செல்ல விரும்பினார். மனதிலும் பார்க்க மிகுந்த வேகத்தோடு வெள்ளிமால்வரையின் பக்கத்தை அடைந்தார். அது இறைவன் விரும்பி உறையும் இடமாதலால் அங்கு காலினால் நடப்பதைத் தவிர்த்துத் தலையினால் நடந்து மலையிலேறிச் சென்றார். அப்போது இறைவனின் இடப்பாகத்து அமர்ந்திருந்த உமையம்மையின் திருக்கண்ணோக்கு அம்மையார்பால் விழுந்தது. அதிசயம் மிக்க உமையம்மை தம் பெருமானை நோக்கி "எம் பெருமானே, தலையினால் நடந்து இங்கே வரும் எலும்பு யாக்கை உடையவரது அன்புதான் என்னே!" என்று வியந்தார். அப்பொழுது பெருமானார். "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண். உமையே இப் பெருமை சேர் வடிவம் இவள் வேண்டிப்பெற்றனள் என்றார். அப்போது வந்தணைந்த புனிதவதியாரை நோக்கி இறைவன்" "அம்மையே" என்று அழைத்தார்.

இறைவன் "அம்மையே" என்றலும் "அப்பா" என்று கூறிய புனிதவதியார், அவருடைய செம்பொற் பாதம் பணிந்து வீழ்ந் தெழுந்தார். அவரை நோக்கிப் பரமசிவன் "நம்பால் நீ வேண்டுவது யாது?" என்று கேட்டார் ; அதற்கு அம்மையார் "இறவாத இன்ப அன்பு வேண்டும்; பின்னும் பிறவாமை வேண்டும் ; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும் ; இன்னும் வேண்டும் அறவா ; நீ ஆடும்போது உன்னடியின் கீழ் நான் பாடி மகிழ்ந்திருத்தல் வேண்டும்" என வேண்டி நின்றார்.

அப்போது சிவபெருமான் "சிறந்த தென்றிசையில் உள்ள திருவாலங்காட்டிலே நாம் ஆடும் திருக்கூத்தைக் கண்டு, நீ பேரானந்தம் அடைந்து எப்போதும் எம்மைப் பாடிக் கொண்டிரு" என்று அருளிச் செய்தார்.

அது கேட்ட அம்மையார் எம்பெருமானை வணங்கி விடை பெற்றுக் கொண்டு திருவாலங்காடு என்னும் நற்பதியைத் தலையினாலே நடந்து சென்றடைந்தார். அங்கே அண்டம் அதிரும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் ஆடுகின்ற கோலத்தைக் கண்களிப்பக் கண்டு "கொங்கை திரங்கி" என்ற மூத்த திருப்பதிகத்தையும் "எட்டி யிலவமீகை" என்னும் திருப்பதிகத்தையும் பாடியருளினார்.

இறைவனுடைய திருவடி நிழலிலே காரைக்கால் அம்மையார் சிவானந்தத்தை என்றும் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. கண்ணப்ப நாயனார்

வேட்டுவத் தலைவன் நாகன் பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரிலே வசித்து வந்தான். வயது முதிர்ந்ததினாலே அவன் உடல் தளர்ந்து இருந்தான். அதனால் அவன் தனது ஆட்சி உரிமைகளை மகன் திண்ணனாருக்குக் கையளித்தான்.

திண்ணனாரோ பெற்றோர் குறிஞ்சிக் கடவுளாகிய குமரப் பெருமானை வந்தித்துப் பெற்றெடுத்த பிள்ளை. இப்பொழுது அவருக்கு வயது பதினாறு. அதிகாரம் பெற்றதும் அவர் வேட்டுவக்குல மரபின்படி கன்னி வேட்டைக்குப் புறப்பட்டார்.

வேட்டையாடும் போது பன்றி ஒன்று தப்பி ஓடியது. அதைத் திண்ணனார் நெடுந்தூரந் தொடர்ந்து சென்று, தன் வாளால் வெட்டிக் கொன்றார். கூடி ஓடிச் சென்ற தோழர்களாகிய நாணனுங் காடனும் திண்ணனாருடைய ஆண்மையைக் கண்டு வியந்தனர்.

"களைப்புத்தீரப் பன்றியைக் காய்ச்சித் தின்று நீருங் குடிப்போம்" என்றனர். தோழர் திண்ணனாரும் அதற்கு இசைந்தார். மூவரும் நீர் தேடி அண்மையிலுள்ள பொன்முகலி ஆற்றங்கரையை நோக்கி நடந்தனர்.

சற்றுத் தூரம் நடந்ததும் எதிரே திருக்காளத்தி மலை தென்பட்டது. அப்பொழுது "அந்த மலைக்குப் போவோம்" என்று நாணனை நோக்கித் திண்ணனார் சொன்னார். அதைக் கேட்ட நாணன் "அங்கே குடுமித்தேவர் இருக்கிறார்; நாம் போனாற் கும்பிடலாம்"" என்றான்.

மலையை அணுக அணுகத் திண்ணனாருக்கு யாதோ பாரங் குறைந்து வருவது போலிருந்தது. உள்ளத்திலும் என்றும் இல்லாதொரு இன்பம் தோன்றிற்று.

இதற்கிடையில் பொன்முகலி ஆற்றங்கரை வந்தது "தீக் கடைகோல் செய்து நெருப்புண்டாக்கு; நாங்கள் மலையிலே சுவாமி தரிசனஞ் செய்து வருகிறோம்" என்று கூறிக் காடனை அங்கே நிறுத்திவிட்டு, நாணனுடன் திண்ணனார் மலையில் ஏறினார்.

கோயிலை அடைந்ததும், அங்கே சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருத்தலைத் திண்ணனார் கண்டார். கண்ட மாத்திரத்திலே, இறைவன் திருநோக்கால், முன்னுள்ள குணங்கள் மாறி அன்புருவமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருமாறிய திண்ணனார் ஓடோடிச் சென்று, சிவலிங்கத்தைக் கட்டித் தழுவி, உச்சிமோந்து முத்தமிட்டார்; தம்வசமிழந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார். சுவாமி மிருகங்களின் மத்தியிலே துணையின்றி இருப்பதற்கு இரங்கினார். சுவாமிக்கு இறைச்சி கொடுப்பார் ஒருவரும் இல்லையே என்று கலங்கினார். இறைச்சி கொண்டு வருவதற்குச் சுவாமியைத் தனியே விட்டுச் செல்ல மனம் ஒருப்படவில்லை. ஆயினும் ஒருவாறு போய்வரத் துணிந்தார்.

மலையைவிட்டு இறங்கித் திண்ணனார் காடன் இருக்கும் இடத்திற்கு வந்தார். அங்கே காடன் தீ வளர்த்து வைத்திருந்தான். அத்தீயிலே பன்றியை வதக்கி, அதன் இனிய தசைப் பகுதிகளை அம்பினாலே கிழித்தெடுத்தார். பின் அவற்றைச் சுவைத்துப் பார்த்துச் சுவையானவற்றை ஒரு தேக்கிலைக் கல்லையிலே வைத்தார். நறுமலர்களைக் கொய்து குடுமியிலே செருகினார். ஆற்று நீரை வாய்நிறைய மொண்டார். ஒரு கையிற் கல்லையையும் மறுகையில் வில்லையுங் கொண்டு காளத்திநாதரிடம் விரைந்து சென்றார்.

அங்கே தமது காற்செருப்பாலே திருமுடிமீதுள்ள பூக்களை மாற்றினார். வாயிலுள்ள நீரை உமிழ்ந்து நாதரை மஞ்சன மாட்டினார். குடுமியிற் கொண்டு வந்த பூக்களை எடுத்துச் சாத்தினார். பின் கல்லையிலுள்ள ஊனமுதத்தைத் திருமுன் படைத்துச் சுவாமியை உண்பித்தார்.

இவ்வளவிலே இராக் காலமாயிற்று. இரவு முழுவதும் காளத்தி நாதரை வனவிலங்குகள் தீண்டாவண்ணம் திண்ணனார் காவல்புரிந்தார். விடிந்ததும் நாதருக்கு ஊனமுது தேடும் பொருட்டு மலையை விட்டுப் போயினார்.

காளத்தி நாதருக்குச் சிவாகம விதிப்படி தினமும் பூசை செய்பவர் சிவகோசரியார். அவர் வழக்கம் போற் பூசை செய்வதற்குக் கோயிலுக்கு வந்தார். அங்கே சுவாமியின் முன்பு இறைச்சியும் எலும்புங் கிடக்கக் கண்டார்! "ஓ கெட்டேன்! மறவேடரே இதைச் செய்திருக்க வேண்டும். தேவரீரும் இதற்குத் திருவுளமிசைவதா?" என்று அழுது விழுந்தார்.

பின்பு பூசையினைத் தாழ்த்தாது செய்யத் துணிந்தார். திருவலகினாற் சுவாமி சந்நிதானத்தைச் சுத்தம் செய்தார். பொன்முகலியாற்றிலே மூழ்கி வந்து விதிப்படி கழுவாய் செய்து, பூசை செய்தார். அதன்பின் இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு தம் தபோவனத்தை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃது இவ்வாறாக, சுவாமிக்கு அமுது கொண்டு வரச் சென்ற திண்ணனாரும் முன் போலவே அடுத்த நாளும் ஊனமுதமும் நீரும் பூக்களுங் கொண்டு விரைந்து வந்தார். சிவகோசரியார் இட்ட பூசைப்பொருட்களை நீக்கித் தாம் கொணர்ந்த நீரும், நறு மலருங் கொண்டு பூசை செய்து முடித்தார். பின்பு இறைச்சிக் கல்லையைத் திருமுன்னே வைத்து "இந்த இறைச்சி நேற்று நான் கொண்டு வந்ததைவிட நன்று; ஏனத்தினோடு மான், மரை, கடமை இவற்றின் இறைச்சி; அடியேனுஞ் சுவை கண்டேன்; தேனுங் கலந்திருக்கிறேன்; தித்திக்கும் ; உண்டருளுக" என்று சொல்லி அன்போடு தேவரை அமுது செய்வித்தார்.

இங்ஙனம் திண்ணனார் பகலில் வேட்டையாடி ஊனமுது தேடியும் இரவிற் காளத்தி நாதருக்குக் காவல் புரிந்தும் ஒப்புயர்வற்ற அன்பு நெறியில் ஒழுகுவராயினார். கோசரியாரும் தினமும் வேடர் பூசைக்காக மனம் நொந்து அப்பூசைப் பொருள்களை நீக்கி, விதிப்படி பூசை செய்து "இத்தீமையை உமதருளால் ஒழித்தருள வேண்டும்" என்று இறைவனை இறைஞ்சிச் சென்றார்.

இவ்வாறு ஐந்து நாள்கள் கழிந்தன. ஐந்தாம் நாள் இரவு கோசரியாரது கனவில் சிவபெருமான் எழுந்தருளி "எனக்குப் பூசை செய்பவனை வேடுவனென்று நினையாதே ; அவன் செயல்களை நாம் உரைக்கக் கேள் ; அவன் வடிவமெல்லாம் நம்மிடத்துக் கொண்ட அன்பேயாம்; அவன் செயல்களெல்லாம் நமக்கு இனியனவே. நாளைக்கு நீ நம்பக்கல் ஒளித்திருந்தால் நம்மிடத்து அவனுக்கிருக்கும் அன்பின் தன்மையெல்லாம் காண்பாய்; மனக்கவலை ஒழிக" என்றருளிச் செய்தார்.

**பொழுது விடிந்ததும் கோசரியார் இறைவனைப் பூசித்துப் பின் புறத்தில் ஒளிந்திருந்தார். வேட்டையாடச் சென்ற திண்ணனார் திரும்பினார், திரும்பிவரும் பொழுது பல தீய சகுனங்களும் நேர்ந்தன. காளத்தியப்பரை அவர் அணைந்தபோது சிவலிங்கத் திருமேனியின் வலக் கண்ணில் உதிரம் பாயக் கண்டார் ; விரைந்தோடி வந்தார். பதைபதைத்தார். துடிதுடித்தார், இரத்தத்தைத் துடைத்தார். ஆனாலும், இரத்தம் ஒழுகுவது ஒழியவில்லை, அவர் கையறவு மிகுதியினால், சுவாமியினுடைய திருமேனியைப் பற்றிக்கொண்டு கதறினார்.**

"என்ன செய்தால் இது தீருமோ? வேடர்களது அம்புப் புண்களைத் தீர்க்கும் பச்சிலை மருந்துகளை இம்மலையிலே தேடிக்கொண்டு வருவேன்" இவ்வாறு சொல்லிப் பச்சிலைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 7. கண்ணப்ப நாயனார் தமது மற்றக் கண்ணையும் இடந்து எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறித்துக் கொண்டு திரும்பினார். அவற்றைப் பிழிந்து கண்ணில் வார்த்தார். "குருதிவடிவது நிற்கவில்லையே. இதற்கு இனிச் செய்வதென்ன? என் கண்ணை இடந்து அப்பிப் பார்ப்போம்" என்று சொல்லிக் கண்ணை அம்பினாலே தோண்டி எடுத்து எம்பெருமான் கண்ணில் அப்பினார். குருதி வடிதல் நின்றது. திண்ணனாருக்கு அளவிலா ஆனந்தம் ஏற்பட்டது. அவர் கை கொட்டிக் கூத்தாடினார்.

திடீரென இடக் கண்ணிலும் உதிரம் பாய ஆரம்பித்தது. "இதற்கு யான் அஞ்சேன், மருந்து கை கண்டேன்; எனக்கு இன்னும் ஒரு கண் உண்டு, அதனையுந் தோண்டி அப்பி இந்நோயை ஒழிப்பேன்" என்று துணிந்தார்.

அடையாளத்துக்காகச் சுவாமியின் கண்ணருகே தமது இடது செருப்புக் காலை ஊன்றிக்கொண்டார். தமது இடக் கண்ணைத் தோண்டத் தொடங்கினார்.

தேவதேவர் இதனைக் கண்டு தரித்திலர். "நில்லு கண்ணப்ப" நில்லு கண்ணப்ப. என் அன்புடைத் தோன்றல். நில்லு கண்ணப்ப" என்று தடுத்தருளினார். கண்ணப்பரினது கையினைப் பிடித்துக் கொண்டார். இவற்றையெல்லாம் சிவகோசரியார் பார்த்து வியந்தார்.

கண்ணப்பரது கையைக் காளத்தியப்பர் தம் கையாற் பிடித்துக்கொண்டு "மாறிலாய், என் வலத்தில் நிற்க" என்று அருளினார். இதனிலும் உயர்ந்த பேறு வேறு உண்டோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. இளையான்குடிமாற நாயனார்

இளையான்குடி என்னும் ஊரிலே மாறனார் என்றொரு வேளாளர் இருந்தார். அவருக்கு வயல்புலங்கள் மிகுதியாக இருந்தன. அவற்றிலிருந்து பெறும் வருவாய் முழுவதையும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தலிலேயே அவர் செலவிட்டு வந்தார். வறுமை வந்த காலத்திலும், மாறனார் இவ்வறச் செயலைத் தளராது செய்வார் என்பதனை உலகத்தோருக்குக் காட்ட இறைவன் திருவுளங்கொண்டான்.

மாறனாருடைய செல்வம் வரவரச் சுருங்கத் தொடங்கியது. தாம் செய்யுந் தொண்டைக் கைவிடாது செய்வதற்கு வயல் நிலங்களை ஒவ்வொன்றாக விற்றார். அயலவர், அறிந்தவர் முதலானவரிடத்திற் கடன் வாங்கியும் தம் தொண்டைத் தொடர்ந்து செய்தார். நாளடைவிலே தீராத வறுமை அவரைச் சூழ்ந்து கொண்டது.

இந்நிலையில், மழைக் காலத்தில் ஒரு நாள் இடி முழக்கத்துடன் பெருமழை பெய்தது. இரவு நெடு நேரமாகியும் மாறனார் உறக்கமின்றி வீட்டில் விழித்து இருந்தார். அவருக்குப் பசி அதிகமாயிற்று. சமைப்பதற்கு வீட்டில் ஒன்றுமில்லை. உதவுவார் ஒருவருமில்லை. இந்த வேளையிற் சிவபெருமான் சிவனடியார் வேடந்தாங்கி மாறனார் வீட்டிற்கு வந்தார். மாறனார் கதவைத் திறந்து, சிவனடியாரை எதிர் கொண்டு வரவேற்றார்; திருமேனியை ஈரம் போக்கினார்; ஆசனங் கொடுத்து அமரச் செய்தார்.

பின்பு "சிவனடியாருக்கு அமுதூட்ட வேண்டும்" என்று ஆவலுற்றார்; உள்ளே சென்றார். அங்கே உண்ண ஒன்றும் இருக்கவில்லை. அத்தனை வறுமை! மனைவியாரைப் பார்த்து "என்ன செய்யலாம்?" என்று வினவினார். மனைவியாரும் "வீட்டிலே ஓர் உணவுப் பதார்த்தமும் இல்லை; நேரமும் அகாலமாயிற்று; அயலவரும் இனி உதவமாட்டார்" என்று சொல்லி வருந்தினார் அறம் வளர்த்த சீமாட்டியல்லவா அவர்! திடீரென அவருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. "நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? காலையிலே வயலிலே விதைத்த நெல் இந்த மழை வெள்ளத்திற் கட்டாயம் மிதக்கும். அதைவாரி எடுத்து வாருங்கள்; குத்தி அரிசியாக்கி விரைவிற் சமைத்துத் தருகிறேன்" என்றார்.

மாறனார் மகிழ்ந்தார்; நீர் இறைக்குங் கூடையைத் தலையிலே கவிழ்த்துக் கொண்டு, கொட்டுகின்ற மழையில் பழக்கக் குறிவழியே காலினால் வழி தடவிச் சென்று வயலை அடைந்தார்; மிதக்கும் நெல்லை அரித்தெடுத்துக் கொண்டு விரைந்து வீடு திரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டு வாயிலிலே நின்ற மனைவியாரிடம் தாம் கொண்டு வந்த நெல்லைக் கொடுத்தார்.

இப்பொழுது சமைப்பதற்கு விறகில்லை. சிதைந்த வீட்டின் மேற் கூரையில் உள்ள சில வரிச்சுகளை மாறனார் அறுத்து விழுத்தினார். மனைவியார் அவற்றைக் கொண்டு அடுப்பு மூட்டி, நெல்லை வறுத்து இடித்து அரிசியாக்கிச் சோறு சமைத்தார்.

இனிக் கறிக்கென்ன செய்வது? மாறனார் புறக்கடையிற் குழியில் முளைகொண்ட கீரைகளை அவசர அவசரமாகப் பிடுங்கிக் கொண்டு வந்து மனைவி கையிற் கொடுத்தார். மனைவியாரும் தமது கைப்பழக்கத்தால் அவற்றைப் பற்பல கறிகளாக்கிச் சமைத்து முடித் தார்.

அப்பொழுது துயில் கொள்வார்போற் கிடந்த சிவனடியாரை அமுதுசெய்ய எழுந்தருளும்படி மாறனார் அழைத்தார். உடனே அவர் ஒரு சோதி வடிவமாய்த் தோன்றினார்.

இளையான்குடி மாற நாயனாரும் மனைவியாரும் அது கண்டு திகைத்து நின்றனர். சிவபெருமான் உமாதேவியாருடன் விண்ணிலே எழுந்தருளி, நாயனாரை நோக்கி, "அன்பனே! அடியார் பூசையைப் பாதுகாத்தளித்த நீ மனைவியோடும் என்னுலகத்திற் சேர்ந்து, பேரின்பப் பெருவாழ்வு எய்துவாய்" என்று அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. நமிநந்தி அடிகள்

சோழ நாட்டில் ஏமப்பேறூரிலே நமிநந்தி என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குதலே தமக்குப் பேரின்பம் எனக் கொண்டிருந்தார். பல நாளுந் திருவாரூருக்குப் போய் வன்மீகநாதரை அவர் வணங்கி வந்தார்.

வன்மீகநாதருடைய கோயிலின் திருமுன்றிலுக்குப் பக்கத்தே அரநெறி என்னுங் கோயில் இருக்கின்றது. ஒரு நாள் நமிநந்தியடிகள் அரநெறிநாதரை வணங்கி எழுந்த பொழுது, அங்கே இறைவனுக்கு ஏராளமான விளக்குகளை ஏற்றுதற்கு விருப்பங் கொண்டார். அப்பொழுது மாலைக் காலமாகலைக் கண்டு, நேரந் தாழ்த்தாது அருகேயிருந்த வீடொன்றிற்குச் சென்று, விளக்கேற்றுதற்கு நெய் தரும்படி கேட்டார். அது சமணர் வீடென்று அவருக்குத் தெரியாது.

வீட்டிலுள்ளோர் "எரிகின்ற நெருப்பைக் கையில் ஏந்திய உங்கள் பரமசிவனுக்கு விளக்கு எதற்கு? இங்கே நெய்யில்லை; வேண்டுமாயின் நீரை விட்டு விளக்கு எரியும்" என்றார்கள். இதைக் கேட்ட நமி நந்திக்கு மனம் பொறுக்க முடியவில்லை. சுவாமி சந்நிதானத்தில் வீழ்ந்து வணங்கினார். அப்பொழுது "நமிநந்தியே கவலை வேண்டாம்; பக்கத்தேயுள்ள குளத்தின் நீரைக் கொண்டு வந்து விளக்கேற்று" என்று ஒரு வாக்குக் கேட்டது.

அதைக் கேட்ட அடிகளார் மனம் மிக மகிழ்ந்து இறைவனின் திருவருளை வியந்தார். அவனுடைய திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு குளத்து நீரை முகந்து வந்து விளக்கேற்றினார். அவ்விளக்குச் சுடர் விட்டு எரிந்தது. அது கண்ட அடிகளார் ஆனந்தக் கூத்து ஆடிக் கோயில் முழுவதும் விடியும் வரை நீரினால் விளக்கேற்றினார். இவ்வாறு தினமுஞ் செய்துவந்தார்.

அடிகளார் திருவாரூர்ப் பெருமானுக்குப் பங்குனி மாதத்திலே மகோற்சவமும் நடத்தி வந்தார். ஒரு நாள் சுவாமி திருமணலிக்கு எழுந்தருள, அடியார் கூட்டத்தோடு அங்கே தாமுஞ் சென்றார். பொழுதுபடச் சுவாமி திருக்கோயிலுக்குத் திரும்பியதும் தாமும் வீட்டிற்குப் போனார்; போனவர் வீட்டினுட் புகாது வெளியிலே படுத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கண்ட அவருடைய மனைவியார் "உள்ளே வந்து பூசையை முடித்துக்கொண்டு பள்ளிகொள்ளும்" என்றார். அதற்கு அடிகளார் "இன்று சுவாமி திருமணலிக்கு எழுந்தருளியபொழுது பல சாதியினருடனுஞ் சேவித்துச் சென்றேன் : அதனால் தீட்டு உண்டா யிற்று. ஆதலாற் குளித்து உள்ளே வருவதற்கு நீர் முதலியன கொண்டுவா" என்று சொன்னார். மனைவியாரும் அவற்றைக் கொண்டுவர உள்ளே சென்றார்.

அப்பொழுது உடலின் சோர்வினாலேயோ, இறைவன் அருளினாலேயோ அடியார் சிறிது உறங்கினார். கனவிலே திருவாரூர்ப்பெருமான் தோன்றி, "திருவாரூரிலே பிறந்தவர்கள் எல்லாம் நம் கணங்கள்; நீ அதைக் காண்பாய்" என்றருளி மறைந்தார். அடிகளார் விழித்தெழுந்து தாம் நினைத்தது குற்றமென உணர்ந்தார். நிகழ்ந்தவற்றை மனைவியாருக்குச் சொல்லிப் பூசையை முடித்தார்.

விடிந்ததும் திருவாரூருக்கு விரைந்து சென்றார். அங்கே இறைவன் சொன்னவாறு கண்டு, தாம் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு இறைவனைப் பிரார்த்தித்தார். அடிகளார் நெடுங்காலந் திருவாரூரிலே திருத்தொண்டு செய்துவந்தார். அவர் ஒரு வைகாசி மாதத்துப் பூச நாளிலே இறையடி சேர்ந்து பெருவாழ்வெய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## (அ) இறைவன் திருக்குமாரர்

சோழ நாட்டிற் சீர்காழிப் பதியிலே சிவபாதவிருதயர் என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் பகவதியார். இருவரும் செய்த தவத்தின் பேறாய் ஒரு குழந்தை பிறந்தது.

குழந்தை வளர்ந்து மூன்றாம் வயதினை எய்தியது. அப்பொழுது ஒரு நாள் தந்தையார் தோணியப்பர் கோயிலுக்குச் செல்லும் போது குழந்தையும் உடன் சென்றது. திருக்குளத்தின் அருகே குழந்தையை இருத்தித் தாம் இறங்கி நீராடினார். அவர் மூழ்கி நீராடியபோது தந்தையைக் காணாத குழந்தை திருக்கோயிற் கோபுரத்தை நோக்கி "அம்மே அப்பா" என்று அழைத்து அழுதது.

அவ்வழுகைக் குரலைக் கேட்டுத் தோணியப்பரும் உமா தேவியாரும் அவ்விடத்திற்கு எழுந்தருளினர். உமாதேவியார் தம்முடைய பாலைப் பொற்கிண்ணத்திலே கறந்து ஊட்டியருளினார். அன்று தொட்டு அக்குழந்தைக்குத் திருஞானசம்பந்தர் என்னும் பெயர் உண்டாயிற்று. சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட பிள்ளை என்பதனால் ஆளுடைய பிள்ளையார் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

நீராடி விட்டுக் கரையிலேறிய சிவபாதவிருதயர் நிகழ்ந்த தொன்றும் அறியார். தம் குழந்தையின் வாயிலே பால் வடிந்திருப்பதைக் கண்டு, "நீ யார் தந்த பாலை உண்டாய்" என்று கோபித்தார். "எச்சிற்பட உனக்கு இப்பாலைத் தந்தவரைக் காட்டு" என்று சொல்லி ஒரு சிறுகம்பு கொண்டு அச்சுறுத்தினார். குழந்தை ஆகாயத்திலே இடப வாகனத்திலே எழுந்தருளியிருந்த பரமசிவனையும் உமா தேவியாரையும் சுட்டிக் காட்டித் "தோடுடைய செவியன்" என்ற திருப்பதிகத்தைப் பாடியது. அங்கு நின்றோர் எல்லோரும் அதிசயித்தனர். தந்தை அளவிலா மகிழ்ச்சி அடைந்தார். குழந்தையுடன் கோயிலுக்குட் சென்று தோணியப்பரைத் தொழுது பின் பிள்ளையாரைத் தோளின் மேல் வைத்துக் கொண்டு இல்லத்துக்கு ஏகினார்.

பிள்ளையார் மற்றைநாள் திருக்கோலக்கா என்னும் திருப்பதியை அடைந்தார். அங்கே கையினாலே ஒத்து அறுத்துத் திருப்பதிகம் பாடத் தொடங்கினார். அப்பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே திருவைந்தெழுத்து எழுதப்பட்ட பொற்றாளம் பிள்ளையார் திருக்கையிலே வந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீலகண்டப் பெரும்பாணர் என்பவர் பிள்ளையாரைத் தரிசிக்க விரும்பினார். அவர் தம் விறலி யாரோடு யாழ் கொண்டு சீர்காழிக்கு வந்து சேர்ந்தார். பிள்ளையார் பதிகங்கள் பாடும் பொழுது பாணர் யாழை மீட்டி உடன் வாசிப்பார். இருவரும் ஒருங்கு சேர்ந்து பல தலங்களுக்கும் சென்று இறைவனை இசையாலே வழிபட்டு வந்தனர். பிள்ளையார் பாடும் திருப்பதிகங்களைப் பாணர் யாழிலே இசைத்து வாசித்துக்கொண்டு என்றுமகலாத நட்புடனிருந்தார்.

## (ஆ)சமய முதற் குரவர்

திருநெல்வாயில் அரத்துறையில் சிவபெருமான் அருளாற் பிள்ளையாருக்கு முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முத்துச் சின்னமுங் கிடைத்தன. இந்த விருதுகள் ஆசாரியத் தகுதிபெற்றவர்களுக்கே உரியன. திருஞானசம்பந்தரே நமது சமயத்தின்முதற் குரவர். சமய குரவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டொழுகும் அருளாளர்கள். பிறர் துன்பங்களைத் தம் துன்பங்கள் போல் எண்ணித் துயர் துடைக்க முற்படுவார்கள்.

இவ்வாறே சம்பந்தப் பெருமான், பல தலங்களுக்குச் சென்று இறை வழிபாடு செய்ததோடு மக்களின் துன்பங்களையும் துடைத்து வந்தார்; திருப் பாச்சிலாச்சிரமத்திலே முயலகன் நோயினால் வருந்திய ஒரு பெண்ணுக்கு இரங்கி, பதிகம் பாடி, அவளின் நோயைப் போக்கினார்; திருச்செங்குன்றூரிலே குளிர்ச் சுரத்தினால் வருந்திய மக்கள் பிள்ளையாரின் அருளால் பிணி நீங்கப்பெற்றனர். திருமருகலிற் பாம்பு தீண்டி இறந்த வணிகனை அவர் உயிர்ப்பித்தருளினார்; திருவீழிமிழலையிலே பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு இறைவனிடமிருந்து படிக்காசு பெற்று உணவு அளித்தார்; திருமயிலாப்பூரிலே அரவந்தீண்டி இறந்த பூம்பாவையின் எலும்பைப் பழையபடி பெண்ணுருவாக்கினார்.

திருஞானசம்பந்தர் சென்ற இடமெல்லாஞ் சிவனடியார்களும் கூட்டமாக உடன் சென்றனர். சிவனடியார்களிடையே பிறப்புப் பற்றிய உயர்வு தாழ்வு இருப்பதில்லை. ஆசாரம் மிக்க அந்தணரான திருநீலகண்ட நாயனார் வீட்டிலே ஒருபொழுது பிள்ளையாரும் அடியார்களுந் தங்கினார்கள். அன்றிரவு பாணரும் மனைவியாரும் உறங்குவதற்கு நித்தியாக்கினி வளர்க்கும் மிகப் புனிதமான இடத்திலே வசதி செய்து கொடுத்தார்கள். இந்த அரிய செயலினாலே நித்தியாக்கினி வலஞ் சுழித்துப் பிரகாசித்து எரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (இ) சைவத்தின் காவலர்

பாண்டி நாட்டிலே சம்பந்தர் காலத்திற் சைவம் நலிவுற்றிருந்தது. அரசன் சமண சமயத்தைத் தழுவியிருந்தான். சிவபெருமானிடம் நீங்காத அன்பு பூண்டிருந்த பாண்டி மாதேவியார் அதனால் மனம் மிக நொந்தார். பாண்டி மாதேவியாரைப் போன்றே அமைச்சர் குலமுச்சிறையாரும் மிகுந்த சிவபத்தி உடையவர். பாண்டி நாட்டிற் சைவம் நலிவுற்றிருந்தமை அவர் மனத்தையும் வாட்டியது.

இந்நிலையில் அவர்கள் திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்வியுற்றனர். சம்பந்தர் அப்பொழுது திருமறைக்காட்டில் எழுந்தருளியிருப்பதை அறிந்தனர். தம் குறையைத் தீர்க்க வருமாறு அவர்கள் சம்பந்தரிடம் ஆள் அனுப்பினர்.

சைவம் வளர்க்கவே அவதரித்தவரான சம்பந்தர் மதுரைக்கு விரைந்தார். அங்கே ஆலவாய்ப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு அயலிலுள்ள மடத்தில் அடியார்களுடன் தங்கியிருந்தார். இவர் வருகை கண்டு அச்சம் அடைந்த சமணர் சிலர் அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். அதனைக் கண்ட பிள்ளையார்:

"செய்ய னே திரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராஞ்சம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே"

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது மடத்திலே தீ அணைந்தது. அதே வேளையில் பாண்டியனுக்கு வெப்பு நோய் உண்டாயிற்று. சமணர்கள் தமது மந்திர மருந்துகளால் முயற்சி செய்தும் நோயைத் தணிக்க முடியவில்லை. அப்பொழுது, பாண்டியனின் இசைவு பெற்று மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாரும் வேண்டிக் கொண்டபடி சுவாமிகள் அரண்மனைக்கு எழுந்தருளினார். எழுந்தருளி "மந்திரமாவது நீறு" என்ற திருப்பதிகம் பாடி மன்னனின் உடம்பிலே திருநீறு தடவினார். உடனே மன்னனை வருத்திய வெப்பம் நீங்கிற்று.

இங்ஙனம் சுரவாதத்திலே தோற்ற சமணர், சுவாமிகளை அனல்வாதத்துக்கு அழைத்தனர். "இரு சமயத்தவரும் தத்தஞ் சமயவுண்மைகளை ஏட்டில் எழுதித் தீயிலிட வேண்டும். எவருடைய ஏடு எரியாமற் பச்சென்று இருக்கிறதோ அவருடைய சமயமே மெய்ச்சமயம் என்று கொள்ளலாம் என்றனர். பிள்ளையார் "போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்த்த பூண்முலையாள்" என்னும் பதிகம் எழுதிய ஏட்டை நெருப்பிலிட்டார். அது வேகாது பசுமையாக இருக்க, சமணர்கள் இட்ட ஏடு எரிந்து சாம்பராயிற்று.

இவ்வாறு அனல் வாதத்திலே தோற்ற சமணர் சுவாமிகளை விடாது புனல் வாதத்துக்கும் இழுத்தனர். இரு சமய உண்மைகளையும் ஏட்டில் எழுதி அவற்றை ஆற்றில் இடுவது என்றும், எவருடைய ஏடு எதிரேறுகின்றதோ அவருடைய சமயமே மெய்ச்சமயம் எனக்கொள்வது என்றும் உடன்பட்டனர். சமணர் தம் மந்திரம் எழுதிய ஏட்டை ஆற்றிலிடச் சுவாமிகள் "வாழ்க அந்தணர்" என்ற திருப்பதிகத்தை எழுதியிட்டார். சமணர்களுடைய ஏடு ஆற்றோடு சென்றது. சுவாமிகளிட்ட ஏடு ஆற்றைக் கிழித்துக் கொண்டு எதிரே செல்வதைக் கண்ட மன்னனும் மற்றோரும் வியப்புற்று மகிழ்ச்சியடைந்தனர். அப்பாசுரத்தில் "வேந்தனும் ஓங்குக" என்று பாடப்பட்டமையாற் பாண்டியன் தன் கூனிமிர்ந்து "நின்ற சீர் நெடுமாறன்" என்னும் பெயரைப் பெற்றான்,

பிள்ளையார் பதினாறு வயதெய்தியதும் மணஞ் செய்தருளுதற்கு அதுவே பருவம் என எண்ணிய சிவபாதவிருதயரும் சுற்றத்தாரும் அவரை அணைந்து "தேவரீர் திருமணஞ் செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். தந்தையாரும் பிறரும் பிள்ளையாருக்கு மனைவியாவதற்குத் தகுதியுடையவர் திருநல்லூரிலிருக்கின்ற நம்பாண்டார் நம்பியின் புதல்வியாவாள் எனத் துணிந்துகொண்டனர்.

குறித்த நாளிலே திருப்பெருமண நல்லூரிலே திருநீலகண்ட நாயனார் வேத விதிப்படி சடங்கு செய்யத் திருஞான சம்பந்தப்பிள்ளையார் திருமங்கலியத்தைச் சாத்தினார். பின்னர் சிவாலயத்தினுள்ளே செல்லக் கருதி, வேத விதிப்படி வளர்க்கப்பட்ட தீயைவலஞ் செய்து "திருநல்லூர்ப் பெருமணத்திலே எழுந்தருளியிருக்குங் கடவுளே தேவரீருடைய திருவடிகளையடையும் பதம் இது" என்று கூறிக் "கல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

அப்பொழுது சிவபெருமான் ஓர் அழகிய சோதி வடிவமாகி அச்சோதிக்கு ஒரு திருவாயிலை வகுத்துக் காட்டியருளினார். காட்டியதும் பிள்ளையார் "காதலாகிக் கசிந்து" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருள, அங்கிருந்த அனைவரும் அதனுட் சென்றனர். ஈற்றில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக்கொண்டு அந்தச் சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்து பேரின்பப் பெருவாழ்வடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. சம்பந்தர் தேவாரம்

## 1. கோளறு பதிகம்

அப்பருஞ் சம்பந்தருந் திருமறைக்காட்டிலே சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு தங்கியிருந்தார்கள். அப்பொழுது மங்கையர்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்கள் வந்து திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரை வணங்கி, "ஐயனே, சமணர்களாலே பாண்டி நாட்டிற் சைவசமயம் சீர்குலைந்துவிட்டது. மன்னனும் அவர்களின் வசப்பட்டான். இந்த நிலையைத் தங்களுக்குச் சொல்லுமாறு பாண்டி மாதேவியும் மந்திரியாரும் எங்களை அனுப்பினர்" என்றனர். அது கேட்டு அங்கு நின்ற சிவனடியார்கள், "சுவாமி, பாண்டி நாட்டிற்கு எழுந்தருளி, சைவ சமயத்தை நிலை நாட்டி, மன்னனையும் மக்களையும் உய்விக்க வேண்டும்" என்று வேண்டினார்கள். நாயனாரும் அதற்கு உடன்பட்டார்

பின்பு இச்செய்தியைச் சம்பந்தர் அப்பருக்குச் சொல்லியருளினார். அது கேட்ட அப்பர் "சமணர் வெகு வஞ்சகர்; நீரோ சிறுபிள்ளை; இப்பொழுது நாளும் கோளும் வலியில; செல்ல வேண்டாம்" என்று தடுத்தார். அப்பொழுது சம்பந்தர் "மெய்யடியார்களுக்கு நாளும் கோளும் என்றும் நல்லவை" என்ற கருத்தைக் கோளாறு பதிகம் பாடி வெளியிட்டார். கீழே அப்பதிகத்தின் முதற் பாட்டைத் தருகின்றோம்.

**பண் – பியந்தைக் காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட
கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் என் உள்ளத்திற் குடிகொண்டு இருப்பதனால், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகியவை என்றைக்கும் எனக்கு நன்மையே செய்யும்; அடியார்களுக்கும் அவை மிக நல்லவேயாம். சிபெருமானின் அருட்செயல்களைக் குறிக்குஞ் சில மூர்த்தங்களை இப்பாடலிலே திருஞானசம்பந்தர் வருணிக்கிறார். அவை பின்வருமாறு:-

1. உமையொருபாகர் 2. நீலகண்டர் 3. வீணாதரமூர்த்தி
4 சோமசேகரர் 5. கங்காதரர்.

## 2. திருநீற்றுப் பதிகம்

பாண்டிய மன்னன் வெப்பு நோயால் வருந்தினான். அப்பொழுது மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் நாயனாரை மன்னனின் நோயைத் தீர்த்தருளுமாறு வேண்டினர். நாயனாரும் இசைந்து அரண்மனைக்கு எழுந்தருளினார். பாண்டியனுக்குத் திருநீறிட்டுப் பதிகம்பாடி நோயைத் தீர்த்தார்.

பண் – காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்

திருவாலவாயில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருநீறு மந்திரம் போல் நம்மைக்காகக்க வல்லது; எல்லோராலும் போற்றப்படுவது; ஆகமப் பொருளாய் அமைவது; எமது சமயத்திற் சிவசின்னமாய் என்றும் பொலிவது.

## 3. நமச்சிவாயத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தம் திருமணம் முடிந்த பின் சோதியுட்புகும் பொழுது "ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொலாம்" என்பதை உலகுக்கு விளக்கும் வகையிற் "காதலாகி" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இது நமச்சிவாயத் திருப்பதிகம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் – கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாத னாம நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

உள்ளம் உருகி, கண்ணீர் வார, அன்போடு "நம சிவாய" என்ற திருவைந்தெழுத்தை ஓதுபவர்களுக்குச் சிவநெறி சித்திக்கும். வேதங்களின் உயிர்நாடியாக விளங்குவதும் இத்திருநாமமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. திருநாவுக்கரசு நாயனார்

## (அ) திலகவதியாரின் தம்பியார்

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வாழ்ந்து வந்த வேளாள மரபினராகிய புகழனாரும் அவர் தம் மனைவி மாதினியாருஞ் செய்த புண்ணியப் பயனாகத் திலகவதியாரும் மருணீக்கியாரும் பிறந்தார்கள்.

மருணீக்கியார் பிறந்து சிறிது காலத்தின் பின்பு பெற்றோர் இருவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். திலகவதியாரைத் திருமணஞ் செய்யவிருந்த கலிப்பகையார் என்பவரும் போர்க்களத்திலே இறந்தார். இதனாலே திலவதியார் வாழ்க்கையை வெறுத்தார். ஆயினும், தம்பியார் ஆதரவற்று இருந்தமையாலே தாம் வாழத் துணிந்தார்.

மருணீக்கியார் சமணர்களுடைய சமய போதனையால் மனங்கவரப்பட்டார். சமண சமய நூல்களையெல்லாம் நன்கு கற்றுத் "தருமசேனர்" என்று அவர்களிட்ட பெயரைத் தாங்கிச் சமணர்களுக்குத் தலைவராக விளங்கினார்.

தம்பியாரின் இந்நிலையைக் கண்டு வருந்திய திலவதியார் திருவதிகை என்னும் சிவத்தலம் சென்றார்; "தம்பியாரை நல்வழிப்படுத்துக" என்று இறைவனை வேண்டினார். சிவபெருமான் மருணீக்கியாரை ஆட்கொள்ள திருவுளங்கொண்டு, அவருக்கு சூலை நோய் உண்டாகச் செய்தார்.

கொடிய சூலை நோய் தமது குடரைப் பிடித்து முடக்கி வருத்த மருணீக்கியார் அதனைத் தாங்கொணாது துன்புற்றார். சமணர்களுடைய தந்திர மந்திர மருந்துகளால் எவ்வித சுகமும் உண்டாகவில்லை. அதனால் அவர் மறைவாகத் தமக்கையாரைச் சென்றடைந்தார். தமக்கையார் அவருக்குத் திருவைந்தெழுத்தையோதித் திருநீறு கொடுத்து சிவசந்நிதிக்கு அழைத்துச் சென்றார். அங்கே மருணீக்கியார் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கித் தேவாரம் பாடச் சூலைநோய் முற்றாக நீங்கியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) திருநாவுக்கரசர்

அருட் பாடல்களை இனிமையாகப் பாடுந் திருவாக்குடைமையினால் இவருக்குத் 'திருநாவுக்கரசர்' என்னும் சிறப்புப்பெயர் வழங்கலாயிற்று.

நாவுக்கரசர் மீண்டும் சைவ சமயத்திற் சேர்ந்ததமையை அறிந்த பாடலிபுரத்துச் சமணர்கள் தம் மன்னனிடம் சென்று முறையிட்டனர். அவனும் மிக வெகுண்டு நாவுக்கரசரை அழைத்துவர அமைச்சரை அனுப்பினன். அரசன் கட்டளையைத் திருவதிகைக்குச் சென்று அறிவித்த அமைச்சர்களைப் பார்த்து "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற திருத்தாண்டகத்தைப் பாடி அரசனிடஞ் செல்ல மறுத்தார். பின்னர் ஒருவாறு மனம் உடன்பட்டுச் சென்றார்.

சமணர்களின் ஏவுதலாற் பல்லவ மன்னன் நாயனாரை நீற்றறையில் இடக் கட்டளையிட்டான். நாயனார் "மாசில் வீணையும்" என்ற தேவாரத் திருப்பதிகத்தைப் பாடித் துன்பம் சிறிதுமின்றி அங்கே மகிழ்ந்திருந்தார்.




படம் 8. நீற்றறையில் நாவுக்கரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுநாட் கழியச் சமணர்கள் நீற்றறையைத் திறந்து பார்த்தார்கள். அப்போது நாவுக்கரசர் முன்னிலும் நலமடைந்திருந்தமையைக் கண்டார்கள் கோபமும் அச்சமுங் கொண்டார்கள். நாயனாரை எப்படியும் கொல்ல வேண்டுமென்று அவருக்கு விடம் கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தார்கள். "நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கே" என்று தொடங்கித் தேவாரம் பாடி அதனை உண்டு தீங்கின்றியிருந்தார்.




படம் 9. நாவுக்கரசரை யானை வலம் வருதல்

இதனைக் கண்டு பொறுக்காத சமணர்களும் அரசர்களும் நாயனாரைக் கொல்லும்படி பட்டத்து யானையை ஏவி விட்டார்கள். அப்போது நாயனார் "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்று தொடங்கும் தேவாரத்தைப் பாடினார். அவ்யானை வாகீசரை வலம் வந்து வணங்கிச் சென்று அருகே நின்ற சமணர்களைக் கொன்றழித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 10. கல் தெப்பமாக மிதத்தல்.

கோபாவேசங் கொண்ட பல்லவ மன்னன் நாயனாரைக் "கல்லோடு கட்டிக் கடலில் இடுக" என்றான். திருநாவுக்கரசர் அமைதியாகவும் இனிமையாகவும் "சொற்றுணை வேதியன்" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே கல் தெப்பமாக மிதந்தது. இவ்வாறாக அவர் திருப்பாதிரிப்புலியூரைச் சென்றடைந்தார். அன்று தொடக்கம் நாவுக்கரசர் சிவத்தலங்களைத் தரிசித்து வந்தார். அத்தலங்களிலுள்ள இறைவனுக்குத் தேவாரத் திருப்பதிகங்கள் பாடினார்.

நாவுக்கரசருடைய கையில் அப்பொழுதும் உழவாரப்படை இருக்கும். அவர் தம் உழவாரத்தாற் கோயிற் சுற்றுப்புறத்தைச் சுத்தஞ் செய்வார். எனவே, "தொண்டுக்கு அப்பர்" என்று அவருடைய சிவப்பணியைச் சிறப்பித்துக் கூறுவது வழக்கம்.

## (இ) தல யாத்திரை

ஆளுடைய அரசு தமது திருத்தல யாத்திரையிலே திருத்தூங்கானைமாடம் என்னும் தலத்தை அடைந்தார். அங்கு இறைவனை நோக்கி "சமண சமயத்திற் சில காலம் நான் இருந்தேன்; அதனால் இந்த உடம்பு மாசடைந்து விட்டது. அம்மாசு நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடலிலே தேவரீருடைய இலச்சினைகளாகிய சூலத்தையும் இடபத்தையும் பதிய வைக்க வேண்டும்" என்று வேண்டி " பொன்னார் திருவடிக்கு" என்று தொடங்குந் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே திருத்தூங்கானைமாடத்துச் சிவபெருமானின் திருவருளால் அவ்வேண்டுகோள் நிறைவேறிற்று.

திங்களூர் என்ற இடத்தில் அப்பூதியடிகள் என்ற அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் திருநாவுக்கரசு நாயனாரிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். தம் ஊரிலே தாம் செய்து வந்த அறப்பணிகளுக்கு எல்லாம் அவர் திருநாவுக்கரசருடைய பெயரையே சூட்டினார். தம் பிள்ளைகளுக்கு மூத்த திருநாவுக்கரசு இளைய திருநாவுக்கரசு என்று பெயரிட்டார்.

திருநாவுக்கரசர் திங்களூருக்கு வந்த சமயம் அவ்வூரிற் காணப்பட்ட தண்ணீர்ப் பந்தல், கிணறு, குளம் முதலியவற்றுக்குத் தம் பெயர் பொறிக்கப்பட்டு இருத்தலைக் கண்டு அதிசயித்தார். இவ்வாறு செய்தவர் அப்பூதியடிகள் என்று அறிந்தார். எனவே அவருடைய வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தார். "நீங்கள் செய்த அறப்பணிகளுக்கு வேறு ஒருவர் பெயர் வைத்ததன் காரணம் என்ன?" என்று நாயனார் அப்பூதியடிகளிடம் வினவினார். "இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரை வேறொருவர் என்று கூறுகிறீரே; நீர் யார்?" என்று அவர் சினந்தார். "சூலை நோய் தந்து ஆட்கொள்ளப்பட்ட சிறுமையேன் யானே" என்று நாயனார் விடை கூறினார். அப்பொழுது அப்பூதியடிகள் அளவிலா ஆனந்தம் அடைந்தார்: நாயனாரை அமுது செய்யுமாறு வேண்டினார். நாயனாரும் இசைந்தார். அமுது செய்வதற்கு ஆயத்தம் செய்யப்பட்டது. மூத்த திருநாவுக்கரசு வாழைக் குருத்து அரியத் தோட்டத்துக்குச் சென்றான். அங்கு அவனை ஒரு நாகந் தீண்டிற்று . அவன் தாயாரிடம் வாழைக் குருத்தைக் கொடுத்துவிட்டு வீழ்ந்து இறந்தான். இதனால் நாயனார் அமுது செய்யார் என அப்பூதியடிகளும் மனைவியாரும் கலங்கினார்கள். எனவே, மகனுடைய உடலை மறைத்து வைத்துவிட்டு, அமுது செய்ய எழுந்தருள வேண்டுமென்று நாயனாரை இரந்தார்கள். அங்கு நிகழ்ந்தவற்றை எல்லாந் திருவருளினாலே நாயனார் அறிந்துகொண்டார். அவர் கூறியவாறு உடலைத் திங்களூர்த் திருக்கோயிலுக்குக் கொண்டு சென்றனர். கோயிலின் முன்னே உடலைக் கிடத்தி விட்டு "ஒன்று கொலாமவர் சிந்தை" என அடி எடுத்து நாயனார் பாடினார். உடனே சிறுவன் உயிர் பெற்று எழுந்து அப்பர் சுவாமிகளை வணங்கினான். அப்பூதியடிகளும் மனைவியாரும் மக்களும் மகிழ்ச்சி பொங்க வாகீசப்பெருந்தகைக்குத் திருவமுது அளித்துப் பெருவாழ்வுப் பேறு பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் சுவாமிகள் திருவீழிமிழலை என்னுந் தலத்துக்குச் சென்றிருந்தார். அங்கு மழையின்மை காரணமாகப் பஞ்சம் உண்டாயிற்று. மக்கள் பெருந்துன்பமுற்றனர். திருநாவுக்கரசரும் அப்பொழுது அவருடன் இருந்த திருஞானசம்பந்தரும் அந்நிலைமையைக் கண்டு இரங்கினர். திருவீழிமிழலை இறைவன் அவர்களுக்குக் கனவிலே தோன்றி, "பஞ்சத்தினால் நீங்கள் வாட்டமுறமாட்டீர்களாயினும், உங்களை வழிபடும் அடியவர்களுக்கு உணவு அளிப்பதற்காக உங்களுக்குப் படிக்காசு அளிக்கின்றோம்" என்று அருளிச் செய்தான். அவ்வாறே திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலே திருஞானசம்பந்தருக்கும் மேற்குப் பீடத்திலே திருநாவுக்கரசருக்கும் ஒவ்வொரு நாளும் இறைவன் படிக்காசு வைத்தான். நாயன்மார் இருவரும் அப்படிக்காசைப் பெற்று, "பரமன் அடியார் ஆனார்கள் எல்லாம் எய்தி உண்க" என்று இரண்டு பொழுதும் பறைசாற்றிச் சோறிட்டனர். அவ்வாறு அக்காலத்தில் மக்களின் துயரத்தைத் தீர்த்தார்கள்.

## (ஈ) கயிலாய யாத்திரை

கண்ணப்பர் முத்தியடைந்த தலமாகிய திருக்காளத்திற்கு நாவுக்கரசர் சென்றார். பின்னர், திருக்காளத்தி மலையினின்றும் நீங்கி வடக்கே இமயமலையிலுள்ள திருக்கயிலாய தரிசனஞ் செய்ய வேண்டும் என்ற பேரார்வம் மீதூரக் கயிலை யாத்திரையைத் தொடங்கினார். இவ்வாறாக அவர் கங்கைக் கரையை அடைந்து காசித் தலத்தைத் தரிசித்தார். பின்னர் கங்கையைக் கடந்து அப்பாற் சென்றார். மனிதர் செல்லாத காடுகளுக்குஞ் சுரங்கங்களுக்கும் ஊடாகச் செல்லும்பொழுது உடல் தளர்ந்தது. மேலும் நடக்க இயலவில்லை. எனினும், கயிலையைக் காணும் வேட்கை உள்ளத்திற் பொங்கி எழ, தவழ்ந்தும் உருண்டும் ஊர்ந்தும் அவர் யாத்திரையைத் தொடர்ந்தார்.

இந்நிலையில் இறைவன் முனிவர் வடிவில் அவர் முன்னே தோன்றினார். "திருக்கயிலாயமலை மனிதரால் அடைவதற்கு எளிதன்று. இனித்திரும்பி விடுதலே நன்று" என்று அவர் நாயனாருக்குக் கூறினார்.

"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்"

என்று நாயனார் மறுத்தார். முனிவர் உடனே மறைந்தார். "ஓங்கு நாவினுக்கு அரசனே, எழுந்திரு" என்று ஓர் ஒலி கேட்டது. என்ன வியப்பு! அவருடைய உடலானது வருத்தம் எல்லாம் நீங்கி ஒளிபெற்றுத் திகழ்ந்தது. அப்பொழுது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணலே எனை ஆண்டுகொண்
டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி
வேதநாயகனே
கண்ணி னால் திருக் கயிலையில்
இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ
நயந்தருள் புரி"

என்று அப்பர் இறைவனை இறைஞ்சினார். "நீ இந்தத் தடாகத்திலே மூழ்கித் திருவையாற்றை அடைந்து நாம் திருக்கயிலாசத்தில் இருக்குந் திருக்கோலத்தை அங்கே காண்பாய்" என்று இறைவன் திருவாக்கு மீண்டும் ஒலித்தது.

## (உ) தமிழ் நாட்டிலே கயிலாய தரிசனம்

இறைவனின் ஆணையைத் தலைமேற்கொண்டு தமிழ் ஆளியாராந் திருநாவுக்கரசர் அத்தடாகத்தில் மூழ்கி, யாவரும் வியக்கத் திருவையாற்றிலேயுள்ள ஒரு வாவியில் எழுந்தார். இறைவனின் கருணையை நினைந்து உருகிக் கண்ணீர் வார, அவர் திருவையாற்றுக் கோயிலை நோக்கிச் செல்வாராயினர். அப்பொழுது அங்கே வழியிற் கண்டவை எல்லாஞ் சக்தியுஞ் சிவமுமாக அவருக்குக் காட்சி அளித்தன.

நாயனார் கோயிலை அடைந்தார். அக்கோயில் கயிலைமலையாகக் காட்சி அளித்தது. அங்கு இந்திரன் முதலிய தேவர்கள் போற்றி செய்கின்றனர். வேதங்கள் ஒலிக்கின்றன. சித்தர், வித்தியாதரர், முனிவர் முதலியோர் புடைசூழ்ந்து இருக்கின்றனர். அரம்பையர் கானம் இசைக்கின்றனர். கங்கை முதலிய புண்ணிய நதிகள் வந்து பூசிக்கின்றன. கணநாதர்கள் இறைஞ்சுகின்றனர். பூதவேதாளங்கள் வாத்தியங்கள் இசைக்கின்றன. முன் வாயிலிலே நந்தியெம்பிரான் நிற்கிறார் மரகதக் கொடியுடன் விளங்கும் பவள வெற்பைப் போன்று, இறைவனும் இறைவியும் நாயனார் முன் காட்சியளிக்கின்றனர்.

இந்தக் காட்சியைக் கண்டார் வாக்கின் மன்னர். இதனைக் கண்களால் முகந்துகொண்டு கை குவித்து எதிர்விழுந்து, எழுந்து ஆடினார்; பாடினார்; அழுதார். இவ்வாறு இருக்கையிற் கயிலைக் கோலம் மறைந்தது. பழையபடி திருவையாறு அமர்ந்த பெருமானைக் கண்டார். தாம் கண்டு களித்த காட்சியை "மாதர் பிறைக் கண்ணியானை" என்ற திருப்பதிகத்திலே நமக்கு அருளிச் செய்துள்ளார் நாவுக்கரசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஊ) திருவடிப்பேறு

அப்பருக்கு எண்பத்தொரு வயது நிரம்பியது. ஒரு சித்திரை மாதத்துச் சதய நட்சத்திரத்திலே, திருப்புகலூர் என்ற தலத்தில்

"எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ
எம் பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்"

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இதன் ஈற்றில் "உன்னடிக்கே போதுகின்றேன், பூம்புகலூர் மேவியபுண்ணியனே" என்று பாடிக் கொண்டு இறைவன் திருவடி நிழலை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. அப்பர் தேவாரம்

## 1. சிதம்பரம்

கூத்தப் பெருமானைக் கும்பிட வேண்டும் என்ற ஆசையினாலே திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரம் வந்து சேர்ந்தார். அங்கே கனகசபையிலே ஆனந்த நடனம் ஆடுகின்ற நடராசப் பெருமானைக் கண்ட மாத்திரத்திலே பலமுறை நிலத்தில் விழுந்து வணங்கினார். கைகள் இரண்டும் தலைமேற் குவிந்தன. கண்களிரண்டும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. மனங் கசிந்துருகப் பெருமானுடைய கண்களினின்றும் பொழியும் அருளிலே திளைத்து நின்று திருவிருத்தங்களைப் பாடினார். அவற்றுள் கீழே வருவதும் ஒன்று.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்

இத்திருத்தலத்திலே நாயனார் கூத்துப்பெருமானைத் தாம் கண்டவாறு சொல்லியருளுகின்றார்.

(கூத்தப் பெருமானுடைய) புருவங்கள் வளைந்திருக்கின்றன. சிவந்த வாயிலே புன்சிரிப்பு அரும்புகின்றது. சடை குளிர்ந்து தோன்றுகின்றது. செம்பவளத் திருமேனியிலே பால் போலும் வெண்ணீறு மிளிருகிறது. இனிதாந் தன்மை வாய்ந்த திருவடியொன்று தூக்கப்பட்டிருக்கிறது. இக்காட்சி கிடைக்கப் பெற்றால் (இழிவானது என்று கருதப்படும்) இம்மானுடப் பிறவியும் வேண்டும் என்ற உயர்வுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனித்த — வளைந்த, கொவ்வை - கொவ்வைப் பழம், இங்கே வாயின் சிவந்த தன்மைக்கு உவமை. குமிழ் சிரிப்பு — புன்னகை. பனித்த — குளிர்ந்த, இங்கே கங்கை நீராற் குளிர்ந்த ; இனித்தம் — இனிதாந் தன்மை : தூக்கிய திருவடி பேரின்பந்தருவதால் இனித்தமுடையதாய், மாநிலம் — உலகம்.

## 2. திருக்குறுக்கை வீரட்டம்

திருக்குறுக்கை வீரட்டம் என்ற தலத்திற் பாடிய பதிகத்தில் ஒரு பாட்டு கீழே கொடுக்கப்படுகின்றது. இப்பதிகத்திலே ஒவ்வொரு பாட்டிலும் அப்பர் இறைவனுடைய அருட்செயல் ஒவ்வொன்றைக் குறிப்பிடுகிறார். இப்பாடலிற் கண்ணப்பருடைய பேரன்பையும் இறைவன் அவரை ஆட்கொண்ட தன்மையையும் குறிப்பிடுகின்றார்.

திருக்குறுக்கை வீரட்டம் பண் — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

காப்பதோர் வில்லும் அம்புங்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

கண்ணப்பர் வில்லையும் அம்பையும் ஒரு கையிலே தாங்கி இறைவனுக்குக் காவல் புரிகின்றார். மற்றக் கையில் இறைவனுக்கு ஊட்டுவதற்காக கல்லையில் வைக்கப்பட்ட ஊனமுதைத் தாங்கி நிற்கின்றார். காலிலே தோற்செருப்பு அணிந்திருக்கின்றார். வாயில் முகந்துகொண்டு வந்த நீரினால் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுகின்றார். இறைவனின் கண்களிலிருந்து குருதி வடிவதைப் பார்க்கின்றார். அதை நிறுத்துவதற்காகத் தமது கண்ணை இடந்து அப்புவதற்கு முயல்கின்றார். அம்பினாலே தம் கண்ணைத் தோண்டும் பொழுது இறைவன் கண்ணப்பருடைய கையைப் பிடித்துத் தடுத்தார். அந்த இறைவன் திருக்குறுக்கை வீரட்டத்தில் எழுந்தருளியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பொது

"நான் அறிவேன்" என்னும் அகந்தையினால் அறிய முடியாதது பரம்பொருள். அதனைக் கல்விச் செருக்கினால் அறியவும் முடியாது; செல்வப் பெருக்கினால் அறியவும் முடியாது. இவ்வுண்மையை விளக்குவதே கீழ்வரும் தேவாரம்.

சிவபெருமான் சோதிப் பிழம்பாய்த் தோன்றியது சிவராத்திரி தினம்.

### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

திருச்சிற்றம்பலம்

திருமாலும் பிரமனும் தமக்கு முன்னே தோன்றிய சோதிப் பிழம்பின் அடிமுடி தேடி அயர்ந்தனர். அவர்களுக்கு இறைவன் 'நான் இங்கு இருக்கின்றேன்' என்று இலிங்கமாகத் தோன்றிக் காட்சியளித்தான்.

செங்கணான் - திருமால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. சுந்தரமூர்த்தி நாயனார்

## (அ) அடியார்க்கு அடியவர்

எத்தொழிலைச் செய்தாலும் எந்நிலையில் இருந்தாலுஞ் சித்தத்தைச் சிவனடியில் வைத்தவரே சிவனடியார்கள்.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங்குணமிக்கார்"

என்று இவர்களின் இலக்கணத்தைப் பெரிய புராணத்திற் சேக்கிழார் பாடுகின்றார். இத்தகைய அடியார்களின் பெருமையை முதன் முதற் பாடியவர் சுந்தரமூர்த்தி நாயனாராவர்.

இவர் ஒருபொழுது திருவாரூர்க் கோயிலுக்குச் சென்றார். அங்கே கோயிலின் முன்புறத்தில் உள்ள தேவாசிரியன் என்ற மண்டபத்திலே அடியார்கள் கூடியிருந்தனர். இவர்களைக் கண்ட நாயனார் "இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாளோ!" என்று நினைத்துக் கவலையுற்றார். அப்பொழுது சுவாமி அவருக்குக் காட்சி கொடுத்து, "நீ நம்முடைய அடியார்களை வணங்கி அவர்கள் மேற் பதிகம் பாடு" என்று அருளினார்.

"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியும் எடுத்துக் கொடுத்தார். இவ்வாறாக நாயனார் திருத் தொண்டத்தொகையைப் பாடிமுடித்தார்.

## (ஆ) இறைவன் தடுத்தாட்கொண்டமை

திருநாவலூரிலே சடையனார் என்னும் பெயருடைய சிவப் பிராமணர் ஒருவர் இருந்தார். இவருடைய மனைவியார் இசைஞானியார் என்பவராவர். இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு நம்பி யாரூரர் என்று பெயரிட்டனர். குழந்தை ஒருநாள் வீதியிலே சிறு தேர் உருட்டி விளையாடியது. அக்குழந்தையைக் கண்ட நரசிங்க முனையார் என்ற அரசன் அதனைத் தாம் வளர்க்க விரும்பினர். அதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரின் தந்தையாரும் இசைந்தார். எனவே நம்பியாரூரர் அரமனையில் வளர்ந்து வந்தார். அரமனையில் வாழ்ந்தாலும் அந்தணர் குல ஒழுக்கத்தையே பேணி வந்தார்; வேதம் ஓதினார். இவ்வாறு வளர்ந்து வரும் நாளில் அவர் மணப் பருவம் எய்தினார். புத்தூர், சடங்கவி சிவாசாரியாரின் புதல்வியை அவருக்குத் திருமணஞ் செய்து வைக்க ஏற்பாடாயிற்று.

திருமண நாளன்று நம்பியாரூரர் மணப் பந்தலில் மணவாளக் கோலத்தில் வீற்றிருந்தார். அப்பொழுது சிவபெருமான் ஒரு கிழப்பிராமண வடிவங் கொண்டு அவ்விடத்துக்கு வந்தார்; "எனக்கும் உனக்கும் ஒரு வழக்கு உண்டு. அதனைத் தீர்த்த பின்னரே நீ திருமணம் செய்தல் தகும்" என்றார். கிழவர் அங்கிருந்த சபையோரைப் பார்த்து, "இவன் எனக்கு அடிமை" என்று தம் வழக்கைக் கூறி வாதாடினார். வழக்கு முதிர்ந்தது. சபையோர் வழக்கை விசாரிப்பதற்குக் கிழவனாரின் ஊராகிய திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றனர்.

திருவெண்ணெய் நல்லூரிலுள்ள அறங்கூறவை வழக்கை விசாரித்தது. வழக்கின் தீர்ப்புக் கிழவனாரின் பக்கமாக அமைந்தது. அப்பொழுது "உமது ஊர் இப்பதி என்றால் இங்கு உமக்கு வழி வழியாக வந்த வீட்டைக் காட்டும்" என்று அவையோர் கேட்டனர். "என்னை நீங்கள் அறியவில்லையானால் வாருங்கள், காட்டுகிறேன்" என்று கூறிக் கிழவர் முன்னே விரைந்தார். அவர் திருவருட்டுறைக் கோயிலுக்குட் சென்று மறைந்தார். எம்பிரான் கோயிலுக்குள் ஏன் இவர் செல்கின்றார் என்று ஐயுற்ற நம்பி யாரூரர் தனியே கோயிலுக்குட் சென்றார்; அங்கு வேதியரைக் காணாமையாற் கூவி அழைத்தார். அப்பொழுது இறைவன் இடபாரூடராக வானிற் காட்சியளித்தார்.

சிவபெருமானின் திருவருளை நம்பியாரூரர் வியந்து நின்றார். அப்பொழுது சிவபெருமான் "நீ நம்மோடு" வன்சொற்களைச் சொல்லி 'வன்றொண்டன்' என்ற பெயரைப் பெற்றாய். நமக்கு அன்பினோடு செய்யத்தக்க அருச்சனை பாட்டேயாம். ஆதலால் மண்மேல் என்னைச் "சொற்றமிழிற் பாடு" என்று அருளிச் செய்தார். "எம் பெருமானே! நான் உம்மை என்ன சொல்லிப் பாடுவேன்" என்று நம்பியாரூரர் கேட்டார். அதற்கு இறைவன், "நீ முன்னே என்னைப் பித்தன் என்று வைதாய். ஆகையால் என்னைப் பித்தன் என்றே பாடு" என்றார். எனவே, வன்றொண்டரும் "பித்தா பிறை சூடி" என்று அடி எடுத்துத் திருப்பதிகம் பாடலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (இ) தம்பிரான் தோழர்

"ஆரூரில் வருக நம்பால்" என்ற இறைவன் அருள் ஆணையைத் தலைமேற்கொண்டு அவர் திருவாரூர் சென்றடைந்தார். அங்கே வாழ்பவர்கள் எல்லாம் தம்மை எதிர் கொண்டு அழைக்க வன்றொண்டர் கோயில் வாசலை அடைந்தார். "நாம் உனக்குத் தோழரானோம். முன்னே நாம் உன்னை ஆட்கொண்ட திருமணக் கோலத்தை எப்பொழுதுங் கொண்டு பூமியின் மேல் விளையாடுவாய்" என்று ஓர் ஒலி கேட்டது. அன்று முதல் எல்லோரும் அவரைத் "தம்பிரான் தோழர்" என்று சொல்லுவாராயினர்.

## (ஈ) பரவையார் திருமணம்

திருவாரூர்க் கோயிலில் இறைவனுக்கு மாலை கட்டல், ஆடல், பாடல் ஆகிய தொண்டு செய்கின்ற மங்கை ஒருவர் இருந்தார். அவர் பெயர் பரவையார். தம்பிரான் தோழரும் பரவையாரும் ஒருவரையொருவர் விரும்பினர். இறைவனின் திருவருளால் இருவருக்கும் திருமணம் நிறைவேறியது. இல்லற வாழ்க்கையிலே அடியார்க்கு அமுது செய்வதில் இருவரும் ஈடுபட்டிருந்தனர். சுந்தரர் ஆலயத்தில் இறைவன் புகழ் பாடியும், பரவையார் நர்த்தனம் ஆடியும் சிவப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இப்பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்காகக் குண்டையூரில் வாழ்ந்த செல்வர் ஒருவர் சுந்தரர் வீட்டிக்குத் தேவையான பொருட்களை அனுப்பி வைத்தார்.

இவ்வாறு செய்து வருகையில் மழை இல்லாமல் வளஞ் சுருங்கியது. சுந்தரருக்கு அனுப்புவதற்குக் குண்டையூர்ச் செல்வரிடம் போதியளவு நெல் இருக்கவில்லை. எனவே அவர் துயர் எய்தி, ஒரு நாள் உண்ணாது துயின்றார். சிவபெருமான் அவருடைய கனவிலே தோன்றி, "ஆரூரன் தனக்கு உன் பால் நெல் தந்தோம்" என்று அருளினார். அவர் நித்திரை விட்டு எழுந்தபொழுது குண்டையூர் முழுவதும் நெல் நிறைந்திருத்தது. அதனைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆளில்லை. எனவே, சுந்தரர் "நீள நினைந்தடியேன்" என்று திருப்பதிகம் பாடினார். அன்றிரவு பரவையாரின் மாளிகையில் நெல் மலையாகக் குவிக்கப்பட்டது.

திருவாரூரிற் பங்குனி உத்தரத் திருவிழாச் செலவிற்குப் பரவையாருக்குக் கொடுக்கச் சுந்தரருக்குப் பொன் தேவையாயிற்று. எனவே, பொன்னைப் பெறும்பொருட்டுச் சுந்தரர் திருப்புகலூருக்குச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு இறைவனை வணங்கித் தம் குறை சொல்லி இரந்தார். பின்னர் அயலிலுள்ள மடம் ஒன்றுக்குச் சென்று செங்கற்களாலே தலையணை அமைத்து நித்திரை செய்தார். அவர் விழித்த பொழுது செங்கற்கள் எல்லாம் பொன் கற்களாக இருந்தன. அப்பொழுது சுந்தரர் இறைவனின் திருவருளைத் துதித்துத் "தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்" என்னுந் திருப்பதிகம் பாடினார்.

பின்னர் சுந்தரர் திருமுதுகுன்றத்துக்குச் சென்றார். அங்கு அவர் சிவபெருமானிடம் பொருள் வேண்டி வணங்கினார். சிவபெருமான் அவருக்குப் பன்னீராயிரம் பொன் கொடுத்தார். "திருவாரூரில் உள்ளோர் வியப்ப இப்பொன் அங்கே வரப்பெற வேண்டும்" என்று சுந்தரர் மேலும் வேண்டினார். அப்பொழுது "இப்பொன் முழுவதையும் மணிமுத்து ஆற்றிற் போட்டுத் திருவாரூர்க் குளத்திற் போய்க் கொள்க" என்று ஒரு வாக்கு ஒலித்தது. அவ்வாறே சுந்தரர் பொன்னை ஆற்றில் போட்டுவிட்டுத் திருவாரூருக்குச் சென்றார்.

அங்கு பரவையாருடன் வாழ்ந்து வரும்பொழுது ஒருநாள், "திருமுதுகுன்றத்துச் சிவபெருமான் எமக்குப் பொன் தந்தார்; அதனை மணிமுத்தாற்றிற் புகவிட்டோம். அவர் அருளாலே, அதனைத் திருவாரூர்க் குளத்தில் எடுப்போம்; நீரும் வாரீர்" என்று சுந்தரர் பரவையாருக்குக் கூறினார். "என்ன அதிசயம் இது" என்று பரவையார் சிரித்தார். எனினும் , இருவரும் அக்குளத்துக்குச் சென்றனர். பரவையார் கரையில் நிற்க, சுந்தரர் குளத்தில் இறங்கி அன்று போட்ட பொன்னை எடுப்பவர் போலத் தேடினார். இறைவனின் திருவிளையாடலாற் பொன்கிடைக்கவில்லை. "ஆற்றில் இட்டுக் குளத்திலே தேடுகிறீரே, கிடைக்குமோ" என்று கேட்டுப் பரவையார் நகைத்தார். சுந்தரர் "பொன் செய்த மேனியினீர்" என்ற பதிகம் பாடினார். ஆற்றில் இட்ட பொன்னை இவள் எதிரே கொடுத்து அருளும் என்று வேண்டினார். பொன் கையிற் கிடைத்தது. இவ்வாறு இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டியவற்றைச் சுந்தரர் இறைவனிடமிருந்தே பெற்றார்.

## (உ) சங்கிலியார் திருமணம்

தல யாத்திரையை மேற்கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூருக்குச் சென்றார்; அங்கே இறைவனுக்குப் பூமாலை கட்டுந்திருத்தொண்டை மேற்கொண்டிருந்த சங்கிலியார் என்ற இளமங்கையைக் கண்டார். அவரை மணஞ் செய்ய விரும்பினார். சுந்தரர் பரவையாரின் கணவர் என்பதைச் சங்கிலியார் அறிந்தார். எனவே, தம்மை விட்டுப் பிரிவதில்லை என்ற உறுதி மொழி பெற்ற பின் திருமணத்துக்கு உடன்பட்டார். அவர்களுக்குத் திருமணம் நிகழ்ந்தது. இருவரும் இனிது வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வாழும் நாளில் வசந்த காலம் வந்ததும் சுந்தரருக்குத் திருவாரூர்த் தியாகேசப் பெருமானின் நினைவு வந்தது. அங்கே பங்குனி உத்தரப் பெரு விழாக் காண வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது. எனவே, திருவொற்றியூரை விட்டு நீங்கித் திருவாரூரை நோக்கிச் சென்றார். நீங்கியவுடனே சுந்தரரின் இரண்டு கண்களும் பார்வை இழந்தன. என்ன செய்வது என்று அறியாது திகைத்தார். சங்கிலியாருக்குக் கொடுத்த உறுதிமொழி தவறியமையால் இத்துயர் வந்து எய்தியது என்று உணர்ந்தார். எனவே. "இத்துயர் நீங்க இறைவனைப் பாடுவேன்" என்று உறுதி பூண்டார்; வழிவழியே திருத்தலங்கள் தோறுங் குறை இரந்து இறைவனைப் பாடினார்.

திருவாரூருக்குச் செல்ல வேண்டும் என்ற பேரவாவினாற் சிலர் முன்னே வழிகாட்டிச் செல்ல அவர் திருவெண்பாக்கத்தை அடைந்தார். அங்குள்ள இறைவனைப் பாடி ஊன்றுகோல் ஒன்றைப் பெற்றார். பல தலங்களையும் வணங்கிக்கொண்டு அவர் காஞ்சிபுரத்தை அடைந்தார். "சிறியேன் செய்த பிழையைப் பொறுத்து யான் உம்மைக் காணக் கண் தந்தருளும்" என்று வணங்கினார். அங்கு அவருக்கு இடக்கண் கிடைத்தது. ஈற்றில் அவர் திருவாரூரை அடைந்தார். அங்குள்ள இறைவனின் அழகிய கோலத்தைப் பார்ப்பதற்கு ஒரு கண்போதாமையால் "மற்றைக் கண்ணையுந் தந்தருளும்" என்று இரந்தார். அப்பொழுது "மீளா அடிமை உமக்கே ஆளாய்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். "அடியார் தம் துன்பங்களைச் சொல்ல, திருவாரூரிலுள்ள பெருமானே நீர் ஒன்றுஞ் செய்யாது சும்மா இருக்கின்றீர்; இது உமது செயலாயின் நீர் வாழ்ந்துபோம்" என்று இறைவனை உரிமையோடு வைதார். உடனே வன்மீகநாதர் அவருக்கு வலக் கண்ணையுங் கொடுத்து அருள் புரிந்தார்.

சுந்தர் திருவொற்றியூருக்குச் சென்றதற்காகப் பரவையார் கோபமுற்றிருந்தார். திருவாரூர் இறைவனே தூது சென்று அக்கோபத்தைத் தீர்த்து வைத்தார்.

சேரநாட்டை ஆண்ட சேரமான் பெருமாள் என்பவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்தி மகிமைகளை அறிந்தார். எனவே, திருவாரூருக்குச் சென்று நாயனாரின் நண்பரானார். இருவரும் மதுரைக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்தனா. பல தலங்களையும் வணங்கிக்கொண்டு சேரநாட்டுக்குச் சென்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வழியிலே ஒருவீட்டில் மங்கல ஒலியும் எதிர் வீட்டில் அழுகை ஒலியுங் கேட்டன. "ஒரே வயதினரான சிறுவர் இருவர் குளத்தில் நீராடினர். ஒருவனை முதலை விழுங்கிற்று. அவன் வீட்டில் அழுகை ஒலி. மற்றவனுக்கு இன்று பூணூற் சடங்கு. அங்கு மங்கல ஒலி" என்று ஒருவர் சுந்தரர்க்குச் சொன்னார். சுந்தரர் இதனைக் கேட்டு வருந்தினார். அவர் அவிநாசியப்பரைத் தொழுது "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்று திருப்பதிகம் பாடினார். அப்பொழுது இறைவன் திருவருளால் முதலை சிறுவனைச் சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியுடன் கரையில் வந்து உமிழ்ந்தது.

சுந்தரர் திருவஞ்சைக்களத்துக்குச் சென்றார். அங்கே "தலைக்குத் தலைமாலை" என்ற திருப்பதிகம் பாடினார். அப்பொழுது இறைவனின் ஆணைப்படி அவர் திருக்கயிலாயஞ் செல்வதற்குத் தேவர்கள் வெள்ளை யானை கொண்டு வந்தனர். சுந்தரர் வெள்ளை யானை மீதும் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீதுமாக, இருவருந் திருக்கயிலாயத்துக்குச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. சுந்தரர் தேவாரம்

## 1. திருவாரூர்

திருவாரூர்க் கோயிலின் முன்புறத்திலுள்ள தேவாசிரியன் மண்டபத்திற் கூடியிருந்த அடியார்களைப் பார்த்துப் பாடிய திருத்தொண்டத்தொகை என்ற பதிகத்தின் முதல் பாடல் இதுவாகும். இதற்கு இறைவனே அடி எடுத்துக் கொடுத்தார்.

திருத்தொண்டத்தொகையில் (தம்மைத் தவிர்த்து) 62 தனி அடியார்களைப் பெயர் குறித்தும் 9 தொகை அடியார்களைப் பொதுவாகவும் பாடியுள்ளார். தில்லைவாழந்தணர், அப்பாலும் அடிச்சார்ந்தார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், முழு நீறு பூசிய முனிவர் முதலியோர் தொகையடியார்கள்.

## திருத்தொண்டத் தொகை

*திருவாரூர்* *பண் - கொல்லிக்கைவாணம்*

*திருச்சிற்றம்பலம்*

*தில்லைவாழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்*
*திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்*
*இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்*
*இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்*
*வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்*
*விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்*
*அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்*
*ஆரூரனாரூரி லம்மானுக் காளே.*

*திருச்சிற்றம்பலம்*

இம்முதற் பாடலிற் குறிப்பிட்டுள்ளோரின் பெயர்கள் வருமாறு: 1. தில்லைவாழந்தணர் (தொகையடியார்) 2. திருநீலகண்ட நாயனார் 3. இயற்பகை நாயனார் 4. இளையான்குடிமாற நாயனார் 5. மெய்ப்பொருள் நாயனார் 6. விறன்மிண்ட நாயனார் 7. அமர்நீதி நாயனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருப்புன்கூர்

ஏயர்கோன் கலிக்காம நாயனாரும் சுந்தரமூர்த்திநாயனாரும் அரிய நண்பர்களாகித் திருப்புன்கூருக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்தபோது சுந்தர மூர்த்தி நாயனார் பாடிய பதிகத்தின் முதலாவது பாடல் கீழே தரப்பட்டுள்ளது:

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் னாருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியின்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூரு ளானே.

திருச்சிற்றம்பலம்

செழிப்பான சோலைகள் நிறைந்த திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே, முன்னொரு முறை மார்க்கண்டேயர் என்னும் பிராமணச் சிறுவன் உமக்குப் பூசை செய்தான். அப்பொழுது அவனுடைய உயிரைக் கொண்டு போவதற்கு இயமன் வந்தான். அவன் உம்மிடம் அடைக்கலம் புகுந்தான். இயமனோ அதைப் பொருட்படுத்தாது அவன் மீது பாசக் கயிற்றை வீசினான். அப்போது நீர் வெளிப்பட்டு இயமனைக் கொன்று அவனைக் காப்பாற்றினீர். நீர் அன்று அவனுக்கு உயிர்ப் பிச்சை வழங்கிய கருணையை நானும் அறிந்து கொண்டேன். எந்தையே என்னிடமும் எப்பொழுதாயினும் ஒருநாள் இயம தூதுவர் வருவர். அப்பொழுது நீர் இவன் என்னுடைய அடியவன்; ஆதலால் இவனை விட்டு அகலுங்கள் என்று கூறி அவர்கள் என்னுயிரைக் கொண்டு போகாது தடுப்பீர் என நம்பி நான் உம்முடைய திருப்பாதங்களை வழிபட வந்துள்ளேன். அந்தணாளன் - பிராமணன் (மார்க்கண்டேயர்). காலன் இயமன். வவ்வினாய் - கவர்ந்தாய், வண்மை - கொடை, அது கருணையால் நிகழ்ந்தது. நலியின் - துன்புறுத்தினால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருக்கேதீஸ்வரம்

சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாள் நாயனாருடன் இராமேஸ்வரத்திற் சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, அங்கு சில நாள்கள் தங்கியிருந்தார்: இருக்கும்போது அங்கியிருந்தே ஈழ நாட்டிலுள்ள மாதோட்டத்துத் திருக்கேதீஸ்வரத்தை வணங்கி, அதன் மேலே திருப்பதிகம் பாடினார்.

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

பலாவி என்று ஒரு புனித தீர்த்தம் உண்டு. அதன் கரையிலே திருக்கேதீஸ்வரம் என்னும் திருக்கோயில் இருக்கின்றது. அக்கோயிலிலே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை விட்டுணு இடப வடிவமாக இருந்து சுமக்கின்றார். சிவபெருமான் என்றும் இளமை அழகுடன் பொலிகின்றார்: யானையின் தோலைப் போர்த்திருக்கின்றார்; இறந்த பிரமவிட்டுணுக்களின் தலை ஓடுகளைக் கோத்து மாலையாக அணிந்திருக்கின்றார். அவருடைய அடியவர்கள் அவரை வணங்கிக்கொண்டு இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. மாணிக்கவாசகர்

## (அ) குருவருள் பெறுதல்

பாண்டிய மன்னனுக்கு முதல் அமைச்சராய்ப் பணியாற்றி வந்தார் திருவாதவூரர். இவர் ஆதி சைவப் பிராமண குலத்திலே தோன்றியவர். இக்குலத்தார் வழி வழியாகப் பாண்டியர்க்கு அமைச்சுத் தொழில் புரிந்து வந்தமையால், அமாத்தியப் பிராமணர் என்றும் சொல்லப்பட்டனர். திருவாதவூரருக்குப் பெற்றோர் இட்ட பெயர் இன்னது என்று தெரியவில்லை. அவர் திருவாதவூரிலே பிறந்து சிறப்புப் பெற்றமையால் திருவாதவூரர் என்ற பெயரே வழங்கலாயிற்று. திருவாதவூரரின் கல்வியறிவு, ஒழுக்கம், அமைச்சுத் திறமை ஆகியவற்றைப் பாராட்டு முகமாகப் பாண்டியன் அவருக்குத் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டப் பெயரை வழங்கினான்.

திருவாதவூரர் அரசனுக்கு அமைச்சுத் தொழில் பூண்டு ஒழுகினாலும் அவருடைய சித்தம் சிவன்பாலே இருந்தது. உலக வாழ்வில் அவருக்குப் பற்றுதல் அற்று வந்தது. சிவபெருமான் திருவடிக்கண் மாறாத பேரன்புடையவராய் அவர் தமது கடமையை ஆற்றிவந்தார். தமக்கு ஞானம் நல்கத்தக்க குரவர் ஒருவரைத் தந்தருளுமாறு நாளும் இறைவனை வேண்டி வந்தார்.

இவ்வாறு இருக்கும் நாளில் ஒருநாள், தூதர் சிலர் அரசனிடம் வந்து கீழைக் கடற்கரையிற் குதிரை வணிகர் விற்பனைக்காக நற்குதிரைகள் கொண்டு வந்திருப்பதாகக் கூறினர். பாண்டியன் தனது படைக்கு வேண்டிய நல்ல குதிரைகளை வாங்கி வருமாறு முதல் அமைச்சரைக் கேட்டுக்கொண்டான். அமைச்சரும் அதற்கு இசைந்து பெருந் தொகையான பொன்னைப் பெற்றுக்கொண்டு அலுவலர் பலர் சூழப் புறப்பட்டார். புறப்படும்போது ஆலவாய்க் கடவுளை வணங்கித் தம்மனக்குறையையுந் தெரிவித்துக் கொண்டார்.

திருவாதவூரர் தம் பரிசனங்களுடன் திருப்பெருந் துறையை அடைந்தபோது, அங்கே ஒரு சோலையிற் சிவநாமம் ஒலிக்கக் கேட்டார். அவருடைய உள்ளத்தில் என்றுமில்லாததோர் ஆனந்தம் பொங்கியது. அவர் தாம் ஏறிவந்த சிவிகையினின்றும் இறங்கி, அச்சோலையை நோக்கிச் சென்றார். அங்கே, குருந்த மரமொன்றின் நிழலிலே, அடியார் பலர் புடைசூழ அருட்குரவர் ஒருவர் எழுந்தருளியிருப்பதைக் கண்டார். சிவபெருமானே தம்மை ஆட்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டுக் குருவாக எழுந்தருளி வந்துள்ளார் என்பதைத் திருவாதவூரர் உணர்ந்தார். அப்போது அவருடைய நெஞ்சம் அனலில் இட்ட மெழுகு போல நெக்கு நெக்கு உருகியது. உடல் விதிர்விதித்தது. மெய்ம்மயிர் பொடித்தது ஆனந்தக் கண்ணீர் அருவி பாய்ந்தது. ஆராக் காதலால் அவர் ஆடினார்; பாடினார்; குருந்த மரநிழலில் வீற்றிருந்த குருவின் திருவடிகளில் வீழ்ந்து "அடியேனை ஆட்கொண்டு உய்வித்தருளுக" என வேண்டிக் குறையிரந்தார். குருவாகி வந்த இறைவனும் திருவாதவூரரின் பக்குவ நிலை கண்டு, அவர் சென்னிமீது திருவடிசூட்டி ஆட்கொண்டருளினார். கடவுள், ஆன்மா, உலகம் என்னும் முப்பொருள் உண்மையை அறிவித்து, திருவைந்தெழுத்தின் உண்மையையும் உபதேசித்தார்.

இறைவனது திருவருளாலே திருவாதவூரடிகளின் நாவில் ஞானவாணி குடிகொண்டாள். அடிகள் அருட் பாடல்களை மழைமாரி போலப் பொழியலானார். அப்பாடலைக் கேட்ட குரவர் உளமுவந்தார்; அடிகளின் வாயிலிருந்து வந்த சொற்கள் எல்லாம் மணி போல ஒண்மையும் உயர் மதிப்பும் வாய்ந்திருந்தமையால், அவருக்கு மாணிக்கவாசகர் என்னும் பெயரைச் சூட்டினார். இப்போது மாணிக்கவாசகருக்கு இறையுணர்வு ஒன்று மட்டுமே உள்ளத்தில் நிறைந்து நின்றது. அவர் தமது அமைச்சுக் கோலத்தைத் துறந்து துறவுக் கோலம் பூண்டு கொண்டார். தமது குரவரை அகலாது, அவர் கருத்துப்படி ஒழுகுவதையே கடனாகவுங் கொண்டார். தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் குருவடிக்கே ஒப்படைத்தார். குதிரைகள் வாங்குவதற்குப் பாண்டியன் கொடுத்த பொருள் எல்லாவற்றையும், தம் குருநாதரின் கருத்துப்படி, சிவனடியார் தொண்டுக்கும் சிவாலயத் திருப்பணிக்கும் செலவிட்டார். கற்புடைய பெண்ணொருத்தி தன் கணவனையன்றி மற்றொருவரைத் தலைவராகக் கருதமாட்டாள். அது போலவே அடிகளும் குருவாகி வந்து தம்மை ஆட்கொண்ட சிவபெருமானையன்றி வேறொருவரையும் தலைவராக மதித்திலர்.

முதலமைச்சரின் இந்தப் பக்தி நிலையை உணராத பரிசனங்கள் அவருக்குப் பித்துப் பிடித்து விட்டதென்றே எண்ணினர். குதிரை வாங்கக் கொண்டு வந்த பெருநிதியை வேறு காரியங்களிற் செலவிட்டதை அறிந்தால் அரசன் கோபிப்பானே என்று அஞ்சினர். அதனால், அவர்கள் மதுரைக்குச் சென்று, நடந்தவற்றை எல்லாம் பாண்டியனுக்குக் கூறினர். அது கேட்ட அரசன் சினங்கொண்டான்; உடனே மதுரைக்கு வந்து சேருமாறு அடிகளுக்குத் திருமுகம் ஒன்றை ஏவலர் மூலம் அனுப்பினான். ஏவலர் விரைந்து சென்று திருவாதவூரடிகளிடம் மன்னவன் திருமுகத்தை நீட்டினர். இறைவனது திருமுகம் அன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறெத் திருமுகத்தையும் பார்க்க விரும்பாத அடிகள், ஏவலரைக் கொண்டே மன்னன் விடுத்த செய்தியை வாசிப்பித்து அறிந்தார். "இறைவனும் இறைவன் அடியாருமே எம்மை அடிமை கொள்ள வல்லவர்; பாண்டியன் எம்மை எவ்வாறு அடிமை கொள்ளல் சாலும்?" என்று கூறிய அடிகள் தம்முடைய குருநாதரிடம் சென்று இதனைத் தெரிவித்தார். "நீ மதுரைக்குப் போ; 'ஆவணி மூல நாளில் குதிரைகள் மதுரை வந்து சேரும்' என்று பாண்டியனுக்குச் சொல்லு" என்று குரவர் மாணிக்கவாசகருக்குக் கூறினார். மன்னனிடம் கொடுக்குமாறு அரிய மாணிக்கம் ஒன்றையும் அடிகளிடம் கொடுத்தார். அடிகளும் தம் குருவின் மொழியைச் சிரமேற் கொண்டு மதுரைக்குச் சென்றார்.

## (ஆ) அரசன் ஆக்கினைக்கு ஆளாதல்

மதுரையை அடைந்ததும் மாணிக்கவாசகர் மன்னனுடைய மாளிகைக்குச் சென்றார். "மன்னர் விரும்பிய குதிரைகள் எல்லாம் திருப்பெருந்துறையிலே நிலைகொண்டுள்ளன; அவை மதுரை வந்தடையும்" என்று சொல்லி, தாம் கொண்டுவந்த மதிப்பரிய மாணிக்கத்தையும் மன்னனுக்குக் கையுறையாகக் கொடுத்தார். மகிழ்ச்சியுற்ற மன்னன், பழையபடி தன் அமைச்சரிடம் நட்புப் பாராட்டி, அவரைத் தம் இல்லத்துக்கு ஏகுமாறு விடைகொடுத்து அனுப்பினான். முன்பு அமைச்சரோடு திருப்பெருந்துறைக்குச் சென்று, மீண்டுவந்து அரசனிடம் முறையிட்ட அலுவலர், தாம் பொய் சொல்லிவிட்டதாக அரசன் தம்மைக் கோபிப்பானே என்று அஞ்சினர். அவர்கள் அமைச்சர் அரசனை வஞ்சித்து விட்டார் என்றே நம்பினர். ஆவணி மூலத்துக்கு இரண்டொரு நாட்களுக்கு முன் அவர்கள் அரசனிடம் சென்று "அரசர் பெருமானே, அடியேம் சொல்வது ஒன்றுண்டு. எங்கள் முதலமைச்சர் குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருளை எல்லாம் வேறு வழிகளிற் செலவிட்டதை நாங்கள் கண்டோம். தேவரீரது கோபத்துக்கு அஞ்சியே அவர் 'குதிரைகள் எல்லாம் திருப்பெருந்துறையில் உள்ளன. ஆவணி மூலநாளிலே மதுரை வந்தடையும்' என்று பொய் சொல்லியுள்ளார்; திருப்பெருந்துறையிலோ, மதுரைக்கு வரும் வழியிலோ நாம் குதிரைகளைக் காணவில்லை" என்று கூறினர்.

அதனைக் கேட்ட அரசன், திருப்பெருந்துறையில் குதிரைகள் நிலைகொண்டுள்ளனவோ என்று அறிந்து வர ஏவலர் சிலரை அனுப்பினான். அங்கே குதிரைகள் இல்லை என்றே அவர்களும் கூறினர். அரசன் திருவாதவூரர்பால் மீண்டுஞ் சினங் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வருத்திப் பொருள் முழுவதையும் வாங்கும்படி தண்ட லாளருக்குக் கட்டளையிட்டான். தண்டலாளர் அடிகளிடம் சென்று அரசன் கருத்தைத் தெரிவித்தனர். அடிகளோ சிவ சிந்தனையிலே திளைத்திருந்தமையால் ஒன்றும் பேசாதிருந்தார். தண்டலாளர் அவரைச் சிறையில் இட்டு வருத்தினர். அந்நிலையில் அடிகள்.

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே

என்று உளமுருகிப் பாடி இறைவனிடம் முறையிட்டார்.

ஆவணி மூலமும் வந்தது, குறித்த நேரத்திலே குதிரைக் கூட்டம் மதுரையை அடைந்தது. சிறையிலிருந்த அடிகளுக்குப் பாதச் சிலம் பொலி கேட்டது. குதிரைகள் வந்த செய்தியைத் தூதர்கள் ஓடிச் சென்று பாண்டியனுக்குக் கூறினர். குதிரைகளைக் கண்டதும் அரசன் மனங் குளிர்ந்தான். சிறையிலிடப்பட்ட முதலமைச்சரை விடுதலை செய்து தன்பால் அழைத்து வரச் செய்தான். அங்கே ஆரிய மன்னன் போலக் கோலம் புனைந்து வந்த குதிரை வாணிகர் தலைவனைக் கண்டதும், அவரே குருந்த மர நிழலில் தம்மை ஆட்கொண்ட குரவர் என்பதை அடிகள் உணர்ந்து கொண்டார். அவர் குதிரைத் தலைவனை மன்னனுக்கு அறிமுகஞ் செய்தார். அத்தலைவனது தோற்றப் பொலிவைக் கண்டு, அரசன் தன்னை அறியாமலே தன் இருக்கை விட்டெழுந்து மரியாதை செய்தான். அடுத்த கணம் அவனது ஆணவம் மேலோங்கவே அவன் தான் செய்தது தவறென எண்ணினான். குதிரைக் கலை அறிஞரைக் கொண்டு அக்குதிரைகளைச் சோதனை செய்து, அவற்றை ஒப்புக் கொண்டான். குதிரை வாணிகர் தலைவனுக்கும் பரிசில் வழங்கிச் சிறப்பித்தான். குதிரைத் தலைவனும் அவன் கூட்டத்தாரும் கீழைத் திசை நோக்கிச் சென்றனர். குதிரைகள் எல்லாம் பாண்டியனது குதிரைப் பந்தியிற் சேர்க்கப்பட்டன. அரசனும் திருவாதவூரடிகளை அவர்தம் மனைக்கேகும்படி விடை கொடுத்து அரண்மனை சேர்ந்தான்.

அன்று பகற்பொழுது கழிந்து நள்ளிரவு வந்ததும் அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. குதிரைப் பந்தியிற் சேர்க்கப்பட் குதிரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் காட்டு நரிகளாக மாறி, மதுரை நகர வீதிகள் எங்கணும் ஊளையிட்டுத் திரியலாயின. அவை, பந்தியில் எஞ்சியிருந்த குதிரைகளைக் கடித்து ஊறுபடுத்தின, மக்களையும் துன்புறுத்தின. மதுரை நகரம் முழுவதுமே அல்லோல கல்லோலப்பட்டது. பகற்பொழுது வந்ததும் அந்நரிகள் எல்லாம் காட்டுக்குள் ஓடிவிட்டன. இதனை அறிந்த பாண்டியன் முன்னரிலும் பன்மடங்கு சீற்றங் கொண்டான். முதலமைச்சரை அழைப்பித்தான். "நம்முடைய பொருள்களை எல்லாம் இரவலர்க்குக் கொடுத்துவிட்டு, காட்டிலுள்ள நரிகளை எல்லாம் பரிகளாக்கி, இவர் காட்டின மாயத்தைக் கண்டீர்களா?" என்று அரசன் அவையிலுள்ளவரைப் பார்த்து வெகுண்டு உரைத்தான். தண்டலாரை நோக்கி, "இவரைக் கொண்டுபோய் வேண்டியவாறு ஆக்கினை செய்து, இவர் கவர்ந்த பொருள்களை எல்லாம் வாங்குங்கள்" என்று கட்டளையிட்டான். அவ்வாறே அவர்கள் அடிகளை வைகை ஆற்றுச் சுடுமண்ணிலே நிறுத்தி நெற்றியிற் கல்லேற்றி, வருத்தலாயினர். அடிகளோ "நன்றே செய்வாய். பிழை செவ்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று தம்மை இறைவனிடம் ஒப்படைத்துவிட்டுத் துன்பங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டார். அடியார் படுந்துன்பத்தை ஆண்டவன் பொறுப்பானா?

மாணிக்கவாசகரின் மாண்பினை வெளிப்படுத்தவும் பாண்டியனுக்கு நல்லறிவு புகட்டவும் இறைவன் திருவுளங் கொண்டார் போலும். திடீரென வைகையாறு பெருக்கெடுத்தது; வெள்ளம் கரைபுரண்டு ஓடத்தொடங்கியது. மதுரை மாநகரம் அழிந்துவிடும் என்றே மக்கள் யாவரும் அஞ்சினர். "இறைவன் அடியாரை அரசன் ஒறுத்தமையாலே இந்தக் கேடு நேர்ந்துள்ளது" என்று யாவரும் பேசலாயினர். தான் செய்த பிழையை உணர்ந்த பாண்டியன் அடிகளிடஞ் சென்று தன் பிழையைப் பொறுக்கு மாறும் நாட்டை அழிவிலிருந்து காக்குமாறும் வேண்டினான். அடிகளும் இறைவன் அருட் செயலை எண்ணி உள்ளம் உருகினார். அப்போது வைகையின் வெள்ளம் வற்றத் தொடங்கியது. குடிகளைக் கொண்டு ஆற்றுக்கு அணை கட்டுவிக்குமாறு அடிகள், அரசனுக்கு ஆலோசனை கூறினார். அந்தப் பணியை உடனே செய்யுமாறு குடிகளுக்கு ஆணையிட்டான் அரசன். ஒவ்வொருவரும் அணை கட்டுவதற்குப் பங்குகள் அளந்துவிடப்பட்டன.

மதுரையில் பிட்டு விற்றுப் பிழைக்கும் வந்தியொருத்தி இருந்தாள். அவள் பெயர் செம்மனச் செல்வி. அவள் சிவனை மறவாச் சீர்மையள். அவளுக்கு அளந்து விடப்பட்டபங்கை அடைப்பதற்கு ஆள் இல்லாமையால் அவள் ஆவலாய்க் கடவுளிடம் குறையிரந்து நின்றாள். அப்பொழுது அழகிய தோற்றமுடைய இளைஞன் ஒருவன் கூடையும் மண்வெட்டியும் கொண்டு வந்தியிடம் வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியாகப் பிட்டைப் பெற்றுக்கொண்டு அவருடைய பங்குக்கு அணைகட்டுவதற்கு உடன்பட்டான். ஆனால் அந்த இளைஞன் மற்றவர்களைப்போல் ஒழுங்காக வேலை செய்யவில்லை ஒரு கூடை மண்ணைக் கொண்டுபோய்க் கரையிலே கொட்டுவதும் மடியிலிருந்த பிட்டை எடுத்து உண்பதும், ஆடுவதும், பாடுவதுமாக அவன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது அணை கட்டும் வேலையைப் பார்வையிட்டுக்கொண்டு அங்கு வந்த பாண்டியன் வந்தியின் கூலியாளண்டை வந்தான். வேலை குறையாயிருக்க, கூலியாள் அயர்ந்திருப்பதைக் கண்ட அரசன் தனது கையிலுள்ள கோலால் அவன் முதுகில் அடித்தான். என்ன ஆச்சரியம்! கூலியாள் தன் தலையிற் சுமந்து கொண்டுவந்த கூடை மண்ணைக் கரையிலே கொட்டிய பின் மறைந்துவிட்டார்! அணைகட்டப்பட்டுவிட்டது! ஆனால் பாண்டியன் கூலியாளை அடித்த அடி எல்லா உயிர்களின் மீதும் பட்டது! பாண்டியனும் அடிபட்டான்! சிவபெருமானே மாணிக்கவாசகர் பொருட்டு இந்தத் திருவிளையாடல்களைச் செய்தார் என்பது இப்போது யாவர்க்கும் தெரிந்துவிட்டது. பாண்டியன் தன் பிழைக்காக வருந்தினான். மாணிக்கவாசகரிடம் சென்று பாண்டிய அரசையே பொறுப்பேற்கும்படி வேண்டினான். சிவலோகத்தை ஆளும் மாணிக்கவாசகர் மண்ணாள்வதை மதிப்பாரா? உலகப் பற்றுக்களை எல்லாம் முற்றாகத் துறந்த அடிகள் தம்மை ஆட்கொண்ட இறைவனை அடையவே விரும்பினார்.

## (இ) சிவநெறி நின்று சிவத்தோடு கலத்தல்

பாண்டியனுடைய அமைச்சுத் தொழிலிலிருந்து முற்றாக விடுதலை பெற்ற மாணிக்கவாசகர், தம்முடைய குருவைத் தேடிப் பழையபடி திருப்பெருந்துறைக்குச் சென்றார். அங்கே, குருந்த மர நீழலில் குரவர் அடியார் கூட்டத்தோடு முன் போலவே காட்சி கொடுத்தார். "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி" ஆண்ட அத்தனோடு இரண்டறக் கலத்தலாகிய பரமுத்தியை வேண்டினார் மாணிக்கவாசகர்.

" நீ இன்னும் சில காலம் பூமியில் இருந்து மக்களுக்கு அன்பு நெறியை அறிவுறுத்திய பின் தில்லைக்கு வா; அங்கே உனக்கு முத்திகொடுப்போம்" என்று குரவர் அருளிச் செய்தார். சிறிது காலம் சென்ற பின் குரவர் சிவலோகம் செல்லத் தீர்மானித்தார். அடியார்களும் அவரைப் பின் தொடர விரும்பினர். "உரியகாலத்தில் இங்குள்ள பொய்கையிலே சோதிப் பிழம்பொன்று தோன்றும்; அதிலே புகுந்து நீங்கள் நம்முலகை அடையலாம்" என்று கூறிக் குரவர் மறைந்தருளினார். அருட்குரவரைப் பிரிந்த அடியார் கூட்டம் ஆற்றாமையால் அழுது புலம்பியது. பின்னர் குரவர் கூறியபடி பொய்கையிலே தீப்பிழம்பு தோன்றியதும், அத்திருக் கூட்டத்தார் அதிலே புகுந்து ஊனுடலை விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் தமது அந்தப் பேறு கிடைக்கவில்லையே என்று இரங்கினார். வலிந்து தமது உடலை மாய்ப்பது குருவின் கட்டளைக்கு மாறாகும் என்று உயிர்வாழ முடிவு செய்தார். ஆனாலும், தம்மை ஆட்கொண்ட தலைவனைப் பிரிந்த துயரினால் அடிகள் உள்ளங்குழைந்து உருகினார்; அழுதழுது புலம்பினார். படிப்பவர், கேட்பவர் யாவருடைய உள்ளத்தையும் உருக்கவல்ல தித்திக்கும் பாடல்களைப் பாடினார்.

"சிவமாநகர் குறுகப் போனார் அடியார்
யானும் பொய்யும் புறமே போந்தோமே"
"தீயில் வீழ்கிலேன் திண்ணவரை யுருள்கிலேன்"
"அழுதால் உன்னைப் பெறலாமே"

என்று பலவாறு புலம்பி அழுதார். பத்தியின் உச்ச நிலைக்குச் சென்ற அடிகள் இப்போது உண்மை ஞானத்தினால் உள்ளம் தேறினார். இறைவன் ஆணைப்படி, திருப்பெருந்துறையினின்றும் புறப்பட்டுத் தில்லையை அடையும் நோக்குடன் இடையிலே பல திருத்தலங்களையும் தரிசித்துச் செல்லலானார்.

ஞான நெறியில் நின்றாலும் மாணிக்கவாசகரின் உள்ளம் இறை அன்பிலே திளைத்திருந்தது. அவர் இறைவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் பாவனை செய்து, இறைவன்பால் அன்பு செலுத்தி வந்தார். அந்த நாயகனைக் காண வேண்டும்; அவனை அடைய வேண்டும் அவனோடு பிரியாது உறைய வேண்டும்; அவனோடு இரண்டறக் கலக்க வேண்டும் என்றே அவருடைய உள்ளம் ஏங்கியது. அதனால் அவ்வப்போது அடிகள் பிரிவுத்துயர் ஆற்றாது பல பாடல்களைப் பாடினார். அன்று குருந்த மரநிழலில் தம்மை ஆட்கொண்ட குருவின் உருவத்தை அவரால் மறக்கவே முடியவில்லை. இதனால், அடிகள் திருத்தல யாத்திரை செய்து வருங்காலத்தில், திருவுத்தரகோச மங்கையிலும், திருக்கழுக்குன்றத்திலும் இறைவன் அடிகளுக்கு அந்த வடிவத்திலே காட்சி கொடுத்தருளினார்.

அடிகள் தம்மை நாயகியாகப் பாவனைசெய்து வந்தமையால், அவர் பெண்மை உள்ளம் பெற்று விளங்கினார். அவர் திருத்தலங்கட்குச் செல்லுமிடம் எல்லாம் இளம் பெண்கள் கூட்டமாகக்கூடி விளையாடுவதையும், அவ்விளையாடல்களில் உலகியற் பேறுகளை வேண்டிப்பாடுவதையும் கண்டார். உலகியற் பேறு கருதிய பெண்களின் பாடல்களைச் சிவப்பேறு கருதிய பாடல்களாக உருவாக்கித் தர விரும்பினார். ஆதலால், தாமும் அப்பெண்கள் கூட்டத்திற் சேர்ந்து இறைவன் புகழ்பாடும் பாவனையிலே திருவம்மானை, திருவுந்தியார், திருவெம்பாவை, திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூஞ்சல், அன்னைப்பத்து என்பன போன்ற அருமந்த திருவாசகப்பாடல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிச் செய்தார். உலகியல் வாழ்வில் ஈடுபட்டிருந்தாலும் சிவநினைவு நெஞ்சில் இருந்தால் உய்தி உண்டாகும் என்ற பேரருளினாலே மாணிக்கவாசகர் இவ்வரிய பாடல்களைப் பாடியருளினார். இது சிவநெறியை மக்களிடையே பரவச்செய்வதற்கு அடிகள் செய்த சீரிய தொண்டாகும்.

திருபெருந்துறையிலிருந்து புறப்பட்ட அடிகள், திருவுத்தர கோசமங்கை, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு இறுதியாகச் சிதம்பரத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கே கூத்தப் பெருமானின் கோயிலுக்குச் சென்று கும்பிட்டார். ஆடும் பெருமானின் கோலத்தைக் கண்டதும் அவர் உலகை மறந்து பரவசநிலை எய்தினார். பின்பு உணர்வுநிலைக்கு வந்ததும் இறைவன் மீது பல பாசுரங்கள் பாடினார். தில்லையின் எல்லையிலே தங்கி, தினமும் கோயிலுக்குச் சென்று, கூத்தப் பெருமானைக் கும்பிடுவதும், ஞானநிட்டை கூடியிருப்பதும், அருட்பாடல்கள் பாடுவதுமே வழக்கமாகக் கொண்டிருந்தார்.

மாணிககவாசகர் தில்லையிலே தஙகியிருநத இடததுககு ஒருநாள் அந்தணர் ஒருவர் வந்தார். அடிகள் வரவேற்று, அவர் தம்மிடம் வந்த காரியம் என்ன என்று கேட்டார். "நீர் அருளிச் செய்த திருப்பாடல்களை ஓத விரும்பி, அவற்றை உம்மிடங் கேட்டு எழுதும் பொருட்டே வந்தேன்" என்று அந்தணர் விடையளித்தார். அடிகள் தம்முடைய பாடல்களை எல்லாம் சொல்ல, அந்தணர் அவற்றை ஏட்டிலே எழுதிக்கொண்டார். பின்பு, தில்லைப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாக ஒரு கோவைப் பிரபந்தமும் பாடித் தருமாறு அடிகளை அந்தணர் கேட்டார். அவ்வாறே அடிகளும் திருச்சிற்றம்பலக் கோவையார் என்ற பிரபந்தத்தைப் பாடினார். அந்தணர் அதனையும் ஏட்டில் எழுதிக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டார். அடிகள் அந்தணராய் வந்தவரைக் காணாது அதிர்ச்சியுற்றார்.

அடுத்த நாட்காலையிலே தில்லைப் பெருமானுக்குப் பூசனை புரிய வந்த அந்தணர் கோயிற் படியிலே ஏடொன்று இருக்கக் கண்டார். அதனை எடுத்துப் பார்த்தபோது, திருவாசகப் பாடல்களும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் எழுதப்பட்டிருப்பதைக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டின் முடிவிலே "வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது" என்று வரைந்து "அழகிய சிற்றம்பலமுடையான்" என்று ஒப்பம் இடப்பட்டுமிருந்தது. பூசை புரிய வந்த அந்தணர் இந்த அதிசயத்தைப் பலர்க்குத் தெரிவித்தார். எல்லாரும் மாணிக்கவாசகரிடஞ் சென்று செய்தியைத் தெரிவித்தனர். அடிகளோ இறைவனின் அருட் செயலை எண்ணிக் கண்ணீர் வடித்தார்.

"நீர் பாடிய பாடல்களுக்குப் பொருள் என்ன?" என்று அவர்கள் கேட்டனர். "பொருளைக் காட்டுகின்றேன்; வாருங்கள்" என்று கூறி அடிகள் அவர்களை அழைத்துக் கொண்டு தில்லைப் பெருமானின் கோயிலுக்குச் சென்றார். அங்கே கூத்தப் பெருமானைக் காட்டி "இவரே அந்தப் பொருள்" என்று சொல்லிக்கொண்டு கோயிற் கருவறையினுட் புகுந்தார். அங்கே அடிகள் இறைவனோடு இரண்டறக்கலந்து விட்டார். ஆறு கடலை அடைந்துவிட்டது. இதுவே மாணிக்க வாசகரின் வரலாறு காட்டும் அன்பு நெறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. திருவாசகம்

## 1. திருவெம்பாவை

திருவெம்பாவை (திரு எம்பாவை) என்பது தெய்வத் தன்மை வாய்ந்த பாவைப் பாட்டு என்று பொருள்படும். இப்பாட்டுகளில் இறுதியில் "எம்பாவாய்" என்ற சொற்றொடர் வருவதால் எம்பாவை என்பதே இவ்வகைப் பாட்டுக்குப் பெயராயிற்று. இன்னோசை கருதி, ஏல், ஓர் என்னும் அசைகளோடு சேர்ந்து, ஏலோர் எம்பாவாய் என்று மேற் சொன்ன சொற்றொடர் வருவது பெருவழக்கு. பாவை என்பது பராசத்தியைக் குறிப்பது.

கன்னிப் பெண்கள், மழை வளஞ் சிறந்து நாடு செழிக்கவும் தமக்கு வருங்காலத்தில் நல்ல கணவர் வாய்க்கவும் பராசத்தியை வழிபடும் நோன்பு பழங் காலந்தொட்டே தமிழ் நாட்டிற் பயின்று வந்துள்ளது. குளிர் மிகுந்த மார்கழி மாதத்தில் இளங் கன்னியர் அதிகாலையிலே துயிலெழுந்து, தம்முடைய தோழியரையும் துயிலெழுப்பிக் கொண்டு நீராடுதுறைக்குச் செல்வர். அங்கே நீராடிய பின் ஈர மண்ணினாற் பாவை உருவஞ் செய்து பராசத்தியை வழிபடுவர். இவ்வழிபாடு பாவை வழிபாடு என்று சொல்லப்பட்டது.

மார்கழி மாதத்தில் திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன் தொடங்கி திருவாதிரையில் முடிவுபெறுமாறு நோற்பது சைவமரபு. நீராடப் போகும் கன்னிப் பெண்கள் விளையாட்டாக ஒருவரையொருவர் எள்ளி நகையாடிப் பாடிச் செல்வர். திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டுத் திருவண்ணாமலைக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து, அங்கே சில நாள்கள் தங்கியிருந்தார் அப்போது மார்கழி மாதம் வந்தது. பாவை நோன்பு நோற்குங் கன்னியர் அதிகாலையிலே பாடிக்கொண்டு, தம் தோழியரைத் துயில் எழுப்பிச் செல்வதைக் கண்டார். அடிகள் தம்மையும் அக்கன்னியருள் ஒருத்தியாகப் பாவனை செய்து, அக்கன்னியர் பாடுவது போல அருளிச் செய்த திருப்பாடலே திருவெம்பாவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

## (அ) தோற்றுவாய்

கன்னியர் சிலர் தோழி ஒருத்தியின் வீட்டு வாயிலில் வந்து நிற்கின்றனர். முன்பு சொன்னபடி அப்பெண் இன்னும் துயிலெழலவில்லை. இன்னும் படுக்கை கொண்டிருக்கிறாள். அவளைத் துயிலெழுப்புமுகமாக இப்பாட்டைப் பாடுகிறார்கள் . தங்களுள் ஒருத்தி சிவநாமங் கேட்ட அளவிலே பக்தி மேலீட்டாற் பரவசமடைந்து படுக்கையினின்றும் புரண்டு செயலற்றுக்கிடந்த செய்தியையும் எடுத்துச் சொல்லி "உன்னுடைய தன்மை இதுதானா?" என்று நகையாடுகின்றனர்.

## (ஆ) பொழிப்புரை

ஒளி பொருந்திய அகன்ற கண்களையுடைய நங்கையே, ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை நாம் பாடக் கேட்டும் நீ இன்னும் துயில்கின்றாயா? உன் செவிகள் செவிட்டுச் செவிகளா? (எங்களுள் ஒருத்தியின் செய்தியைக் கேள்) நாங்கள் சிவபெருமானுடைய திருவடிகளை வாழ்த்திக் கொண்டு வீதியிலே வந்தோம். அந்த வாழ்த்தொலியைக் கேட்ட அளவிலே இவள் பத்திவசப்பட்டாள்; விம்மி விம்மி அழுதாள்; தன்னை மறந்தாள்; மலர்ப்படுக்கையினின்றும் புரண்டு விழுந்து செயலற்றுக் கிடந்தாள். இவளுடைய சிவபத்தி இருந்தவாறு இது; ஆனால் எங்கள் தோழியாகிய உன்னுடைய தன்மை இது தானா? வியப்பாக இருக்கின்றதே!

## (இ) விளக்கவுரை

சிவபெருமான், திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக் கண்டறிய முடியாதவாறு சோதிப் பிழம்பாய் நின்ற தலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலை. ஆகவே, அத்தலத்திற் பாடிய இப்பாட்டிலே இறைவனைக் குறிக்குமிடத்து மாணிக்கவாசகர் "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி" என்றார். வாள் தடம் கண்மாது - ஒளி பொருந்திய விசாலமான கண்களையுடைய பெண், விடியற் காலையில் விழிக்க வேண்டிய கண்கள் துயிலினால் ஒளியின்றிச் சுருங்கிக் கிடக்கின்றனவே என்ற குறிப்பு இங்கே உளது; வளருதியோ - துயில்கின்றாயோ; வன்செவி - செவிட்டுச் செவி; வார் கழல்கள் - சிலம்பணிந்த திருவடிகள்; சிவபெருமானுடைய திருவடி அருளைக் குறிக்கும். அமளி - படுக்கை; மலர் தூவிய மென்மையான படுக்கை என்பதைக் குறிக்கப் போதார் அமளி எனப்பட்டது, போது; - மலர்; பரிசு - தன்மை.

## 2. திருப்பள்ளி எழுச்சி

திருப்பள்ளி எழுச்சி என்பதற்கு இறைவனைத் துயில் எழுப்பும் பாடல் என்பது பொருள். துயில் கொள்ளும் அரசனைக் காலையில் இசைபாடித்துயில் எழுப்பும் வழக்கம் இருந்தது. அது "துயிலெடை" எனப்பட்டது. அது போலவே எல்லா உலகங்களுக்கும் அரசனாகிய இறைவனைத் துயிலெழும்படி பாடுகின்றார் மாணிக்கவாசகசுவாமிகள்.

மக்களுக்குப் போல இறைவனுக்கு உறக்கம் என்றும், விழிப்பு என்றும் இல்லை. ஆனால், குணம் குறிகள் இல்லாத 'சொரூப நிலை' (நிர்க்குணப் பிரமம்) என்றும், குணங்குறிகளோடு கூடிய 'தடத்த நிலை' (சகுணப்பிரமம்) என்றும் இருவகை நிலைகளை நாம் கடவுளுக்குக் கூறுகின்றோம். இவற்றைச் சைவ நூல்கள் முறையே 'சிவம்' என்றும் 'சிவன்' என்றும் சொல்லும். சிவமாகிய சொரூப நிலையிலிருந்து, உயிர்களுக்கு அருள் செய்வதற்காகச் சிவனாகிய தடத்த நிலைக்கு வருவதே துயில் எழுதல் என்று உபசாரமாகச் சொல்லப்படும்.

முழு ஞானியாகிய மாணிக்கவாசகர் இறைவனது அருளைப் பெற்று உலகம் உய்ய வேண்டும் என்ற பேரருளினாலே திருப்பள்ளி எழுச்சியைப் பாடினார். இறைவன் திருமுன் நின்று திருப்பள்ளி எழுச்சி பாடுவது நாம் காலையிற் கண்விழித்து, இறைவனது திருமுக தரிசனத்தைப் பெற்று, அவனது திருவருளால் நாட்கடமையை நன்றாகச் செய்து. உயர வேண்டும் என்னும் நோக்கத்தாலேயாம். இத்திருப்பதிகம் திருப்பெருந்துறையிலே அடிகளால் அருளிச் செய்யப்பட்டது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுதோம்
சேற்றிதழ் கலமங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய் எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

திருச்சிற்றம்பலம்

## (அ) தோற்றுவாய்

அன்பராகிய மாணிக்கவாசகர் விடியற் காலையிலே தம் ஆன்ம நாயகனாகிய சிவபெருமானது முகதரிசனம் பெற வேண்டுகின்றார். தம்மோடு மற்ற உயிர்களும் அந்தத் தரிசனத்தைப் பெற்று உய்ய வேண்டும் என்று விரும்புகிறார். அடியார் கூட்டத்தோடு நின்று இறைவனைத் துயில் எழுப்புவதாகப் பாவனை செய்து பாடுகின்றார். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது அருளாளர்களின் உலகளாவிய பெருநோக்கு அல்லவா?

## (ஆ) பொழிப்புரை

எனது வாழ்வுக்கு மூலப்பொருளாயுள்ள பெருமானே, வணக்கம். பொழுது விடிந்தது. உன் இணையடிகளுக்கு ஒத்த மலர்களை அவற்றின்மேல் தூவி, உனது திருமுகத்திலே எமக்கு அருளும் பொருட்டுத் தோன்றும் அழகிய புன்சிரிப்பைப் பெற்று, உன் திருவடிகளை வணங்குவோம். சேற்றில் முளைத்த செந்தாமரைகள் மலர்கின்ற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே, நந்திக் கொடியை உடையவனே, என்னை அடிமையாக உடையவனே, எங்கள் பெருமானே துயில் நீங்கி எழுந்து அருள் செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (இ) விளக்கவுரை

அடிகள் தம்மைக் குறித்துத் தன்மை ஒருமையிலும், ஏனைய அன்பர்களை உள்ப்படுத்தித் தன்மைப் பன்மையிலும் கூறும் நுட்பம் கருதத்தக்கது. புறவிருள் நீங்கக் கதிரவன் விரிவது போல, எமது அகவிருள் நீங்க இறைவன் கண் மலர்வது, அதாவது அருள் மலர்வது கூறப்பட்டது. கதிரவன் வரவால் தாமரைகள் மலர்கின்றன. அது போலக் கடவுளின் புன்சிரிப்பால் அன்பர்களின் உள்ளக் கமலங்கள் மலரும். காலைக் காட்சி கண்களுக்கு இனிமையும் குளிர்ச்சியும் தருவது. கடவுளின் திருமுகக் காட்சி உயிருக்கு இனிமையும் குளிர்ச்சியும் தரும்.

போற்றி – வணக்கம்; வாழ்முதலாகிய பொருள் – வாழ்க்கைக்கு மூல காரணமாயுள்ள இறைவன்; ஏற்றுதல் – மலர் தூவுதல்; ஏற்றுக் கொடி – நந்திக் கொடி; ஏறு – காளை; பள்ளி – படுக்கை, துயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. திருப்புராணம்

## திருத்தொண்டர் புராணம்

திருத்தொண்டர் புராணம் என்பது திருத்தொண்டர்களது புராணம் என விரியும். (திருத்தொண்டர் - சிவனடியார், எனவே, இது "சிவனடியார்களின் வரலாற்றினைக் கூறும் நூல்" எனப் பொருள்படும். இது 'பெரிய புராணம்' என்னும் பெயராலும் வழங்கப்படுகிறது.

புறத்தேயுள்ள இருளைச் சூரியன் போக்குகிறது. அது போல அகத்தேயுள்ள அஞ்ஞானமாகிய இருளை இத்திருத்தொண்டர்புராணம் போக்கும் என்பர். இது பன்னிரு திருமுறைகளிற் பன்னிரண்டாவதாகும். இதனை இயற்றியருளியவர் சேக்கிழார் பெருமான் ஆவார்.

திருத்தொண்டர் புராணம் அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் பற்றிய வரலாற்றைக் கூறுகின்றது. சமயாசிரியர்கள் நால்வருள் மூவராகிய திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்போரின் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன.

## பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

மாகமார் திருக்கா ளத்தி
மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார்
எழுந்தபே ருவகை அன்பின்
மேகமா னதுமேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார்
தழுவினார் மோந்து நின்றார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணப்பர் திருக்காளத்தி நாதரைக் காணும் வேட்கையோடு மலையில் ஏறுகின்றார். அங்கே மலை உச்சியிற் சிவக்கொழுந்தாய் அமர்ந்திருந்த ஏக நாயகரைக் காண்கின்றார். அவருடைய உள்ளத்தில் உவகையும் அன்பும் பொங்கி எழுகின்றன. அன்பின் வேகத்தால் உந்தப்பெற்றுப் பரவச நிலையில் மிக விரைவாக ஓடிச் செல்கின்றார். சிவலிங்க மூர்த்தியைக் கட்டித் தழுவி முத்தமிடுகின்றார்.

திருச்சிற்றம்பலம்

வருமிவள் நம்மைப் பேணும்
அம்மைகாண் உமையே மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப்
பெற்றனள் என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி
அம்மையே என்னுஞ் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம்
உய்யவே அருளிச் செய்தார்.

திருச்சிற்றம்பலம்

காரைக்காலம்மையார் தலையாலே நடந்து கயிலையை அடைந்தார். "இந்த எலும்பு உருவத்தின் அன்பு தான் என்னே" என்று உமா தேவியார் வியந்தார். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இங்கு வருபவள் என்னைப் பேணும் அம்மை; பெருமைவாய்ந்த இந்த எலும்பு உருவத்தை இவள் நம்மிடம் விரும்பிக்கேட்டுப் பெற்றாள் என்று சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறினார். தம்மை அன்பின்னால் வந்து அடைந்த உருவைப் பார்த்து அம்மையே என்று சிவபெருமான் அழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. திருப்புகழ்

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் முருகப் பெருமானின் புகழைக் கூறுகின்றன. அருணகிரிநாதர் ஏறக்குறைய 450 ஆண்டுகளுக்கு முன்பு, திருவண்ணாமலையிலே பிறந்தார். இளமைப் பருவத்திலே வறுமையும் பிணியும் அவரைப் பற்றிக் கொண்டன. ஆதரித்து வளர்த்த தமக்கையாரும் அவரை வெறுத்தார். இத்துன்பங்களைத் தாங்கமுடியாமல் அவர் திருவண்ணாமலைத் திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்திலே ஏறிக் கீழே குதித்தார். அப்பொழுது முன்னைத் தவப் பயனால் முருகன் தரிசனம் அவருக்குக் கிடைத்தது. முருகப்பெருமான் அருணகிரியாருடைய தலையிலே தம் திருவடிகளைச் சூட்டி ஞான உபதேசமுஞ் செய்தருளினார்; திருப்புகழ் பாடுவதற்கு "முத்தைத் தரு" என்று அடியும் எடுத்துக் கொடுத்தார். அன்று முதல் அருணகிரி நாதர் திருப்புகழ் பாடினார். மேலே வருவது அவர் கதிர்காமத்திலே எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடியதாகும்.

## கதிர்காமத் திருப்புகழ்

தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான


எதிரி லாத பத்தி — தனைமேவி
இனிய தாள் நினைப்பை — இருபோதும்
இதய வாரி திக்குள் — உறவாகி
எனது ளேசி றக்க — அருள்வாயே
கதிர காம வெற்பில் — உறைவோனே
கனக மேரு ஒத்த — புயவீரா
மதுர வாணி உற்ற — கழலோனே
வழுதி கூன் நிமிர்த்த — பெருமாளே.

கதிரமலையின் கண்ணே எழுந்தருளியிருப்பவனே, பொன்மய மான மேரு மலையை ஒத்த தோள்களை உடையவனே, இனிய புகழ் சேர்ந்த வீரக் கழலை அணிந்த திருவடிகளை உடையவனே, பாண்டி யனின் கூன் நிமிர்த்திய பெருமானே, ஒப்பில்லாத பத்தியினை அடை யப்பெற்று, தேவரீரது இனிய திருவடிகளைக் காலை மாலையாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பொழுதுகளிலும் எனது நெஞ்சமாகிய பெருங்கடலிலே தொடர்பு படுத்தி அவை எனதுள்ளே சிறந்தொளிர அருள் புரிவீராக.



படம் 11 கதிர்காமக் கோயில் வாசல்.

எதிர் - ஒப்பு . இருபோதும் – காலை, மாலை ஆகிய இரண்டு நேரமும், வாரிதி - கடல். கனகம் – பொன். மதுரம் – இனிமை. வாணி -சொல்; இங்கே புகழை உணர்த்தியது. வழுதி – பாண்டியன். கூன் – இங்கே கூனிய முதுகை உணர்த்தியது. இங்கு ஞானசம்பந்தரின் அருட்செயல் முருகன் மீது ஏற்றிப் பாடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபந்தம்

## (அ) இந்து சமயம்

இந்து சமயம் மிகவும் பழமையான சமயமாகும். இன்று உலகத்திலே நிலவிவருஞ் சமயங்களுக்குள்ளே இதே மிகவும் பழமையானதெனலாம்.

இந்து சமயம் என்ற பெயர் அச்சயமத்தைக் குறிப்பதற்குச் சமயநூல்கள் ஒன்றிலும் வழங்கப்படவில்லை. மிகப் பழைய காலத்திலே சிந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களைப் பாரசீகர் "இந்துக்கள்" என்று அழைத்தனர். நாளடைவில் இந்திய மக்களின் சமயம் இந்து சமயம் என வழங்குவதாயிற்று. உண்மையில் இந்து சமயத்திற்குச் சரியான பெயர் "சனாதனதர்மம்" என்பதாகும். இது எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒப்ப நடக்கும் தர்மம் என்று பொருள்படும்.

இந்து சயத்திலே பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. எப்பிரிவினரும்,

(1) கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும்,

(2) இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களே தமது சமயத்திற்கு ஆதாரநூல்கள் என்பதையும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். வேதங்கள் என்பதை இருடிகளுக்கும் ஞானிகளுக்கும் கடவுளாற் காலத்துக்குக் காலம் தெரிவிக்கப்பட்ட சமய நூல்களாகும்.

இந்து சமயப் பிரிவுகளுள்ளே தமிழ் மக்களிடையே நின்று நிலவிவரும் முக்கியமான பிரிவுகள் சைவமும், வைணவமும் ஆகும். சைவர்கள் தமது முழுமுதற் கடவுளைச் "சிவன்" என்பர். வைணவர்கள் தமது முழுமுதற் கடவுள் விஷ்ணு என்கின்றனர். இவ்விரு பிரிவினருந் தமக்கென வேறுவேறான கிரியைகளையுஞ் சடங்குகளையும் அமைத்து, வேறுவேறான விழாக்களையும் கொண்டாடுகின்றனர்.

சிவ விழிபாடு புராதன நகரங்களாகிய மொகஞ்சதாரோ, ஹரப்பா என்பவற்றில் நிலவியது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இன்றும் இமாலயந் தொட்டு இலங்கை வரை சிவ வழிபாடு ஆங்காங்கே நிலவுகிறது. இலங்கையிற் பண்டுதொட்டுச் சைவ சமயம் நிலவி வருகிறது. சரித்திர காலத்திற்கு முன் ஆட்சி புரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் ஒரு சைவனாவன். இன்று இலங்கை வாழ் இந்துக்களிற் பெரும்பான்மையோர் சைவ சமயத்தவராவர்.

சைவ சமயத்தவர்களுக்கு வேதங்களுடன் ஆகமங்கள் என்னும் சமய நூல்களும் இருக்கின்றன. இவை சமய தத்துவங்களையும் கோயில்கள் அமைக்கும் முறையையும், கடவுள் வழிபாட்டின் முறையையுங் கூறுகின்றன.

சைவர்களுக்கு முன்னே கூறியவாறு, இறைவன் ஒருவனேயாவன். இறைவனை அவர்கள் சிவபெருமான் என்பர். (சிவன் என்றால் நன்மையைச் செய்பவன் என்று பொருள்படும்.) கடவுள் ஒருவரேயாயினும் அவர் பல்வேறு தொழில் புரியும்பொழுது பல்வேறு பெயர்களால் அவரை அழைக்கிறனர். சைவத் திருக்கோயில்களும், அங்கேயுள்ள விக்கிரகங்கள் முதலானவையும் தத்துவக் கருத்துக்களை விளக்கும் அறிகுறிகளாகும்.

சைவக் கோயில்களிலே தினமும் ஆறு காலங்களிலே வழிபாடு நடப்பது வழக்கம். சைவ மக்கள் தினமுங் கோயில் வழிபாடு செய்தல் வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்கள் விசேட தினங்களிலாவது கோயிலுக்குப் போதல் நன்று. விசேட தினங்களில் வெள்ளிக்கிழமையும் ஒன்றாகும்.

சைவ மக்கள் கடவுளைப் பத்தி மார்க்கத்தினாலே வழிபடுகிறார்கள். கடவுளிடத்துத் தீவிர அன்பு கொண்டு வழிபடுதலே பத்திமார்க்கமாகும். இப்படி வழிபடும்பொழுது ஒவ்வொருவருந் தத்தமக்கு ஏற்ற மாதிரியான தொடர்பைக் கடவுளுடன் கொள்கிறார்கள். வேறு கடவுளை எசமான் எனக் கொண்டு வணங்குகிறார்கள். வேறு சிலர் அவரைத் தந்தையென வந்திக்கின்றனர். இன்னுஞ் சிலர் அவருடன் நட்புரிமை பூண்டு ஒழுகுகின்றனர். எவ்வாறு இறைவனை வழிபடினும் இறுதியில் யாவரும் சென்றடையும் பரம்பொருள் ஒருவரே.

சைவ மக்கள் பல நோன்புகள் நோற்கின்றனர். நோன்பு நாள்களிலே மனத்தை ஒருவழிப்படுத்திக் கடவுளைத் தியானிக்கின்றனர். தீவிரமாக நோன்பைக் கடைப்பிடிப்பவர்கள் பகலும் இரவும் உணவு உட்கொள்ளாதிருந்து அடுத்த நாளே உணவு உட்கொள்ளுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மக்கள் உட்பட இந்துக்களின் அன்றாட வாழ்க்கையையுஞ் சமூக வாழ்க்கையையுங் கட்டுப்படுத்துவன சிமிருதி என்னுந் தர்ம சாத்திரங்களாகும். இவை சமய வாழ்வு வாழ்ந்த ஞானிகளாலே வகுக்கப்பட்டமையினாலே இவற்றை இந்துக்கள் தவறாது கடைப்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள். ஆயினும், இவை சமயத் தத்துவங்களைப் போல என்றும் எவ்விடத்தும் உடன்பாடானவை அல்ல. காலப்போக்கிற்கும் சுற்றாடலுக்குந் தக மாற்றப்படலாம்.

இனித் தமிழ்ச் சைவ மக்களின் சமூகத்திலும் காலத்துக்குக் காலம் ஞானிகள் தோற்றித் தமது வாழ்க்கை மூலஞ் சமயத்தையுஞ் சமயப் பற்றையும் மக்களிடையே வளர்த்திருக்கிறார்கள். இவர்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நான்கு சமயப் பெரியார்களை மக்கள் தம் சமயக் குரவர்களாகக் கொண்டு, அவர்கள் காட்டிய வழியைக் கடைப்பிடித்தொழுக முயலுகின்றனர். இவர்களுட் சம்பந்தரின் வாழ்க்கையில் இரண்டொரு நிகழ்ச்சிகளை இங்கே பொருத்தமாகக் குறிப்பிடலாம்.

சம்பந்தர் தஞ்சாவூரிலே சீர்காழியென்ற திருப்பதியிலே பெற்றோர் தவங் கிடந்து பெற்ற பிள்ளையாவர். இவர் பிறந்தது கி. பி. 640 என்பர். இவர் மூன்று வயதுப் பிராயத்தராக இருந்த பொழுது இறைவனது அருள் பெற்று இறைவன் மீது திருப்பாடல்கள் பாடி வந்தார்.

சம்பந்தர் கோயில்கள் தோறுஞ் சென்று இறைவன் மீது திருப்பாடல்கள் பாடும்போது திரு நீலகண்ட யாழ்ப்பாணர் என்ற ஒரு பாணர் உடன் சென்று அப்பாடல்களைத் தமது யாழிலே இட்டு வாசித்து வந்தார். இப்பாணனார், இழிந்த குலத்தைச் சேர்ந்தவர்.

ஒருநாள் சம்பந்தரும் பாணரும் ஒரு பிராமணச் சிவனடியார் வீட்டிலே தங்கினர். அன்றிரவு பாணனாரும் அவர் மனைவியாரும் நித்திரை செய்வதற்கு அப்பிராமணப் பெரியார் தமது வீட்டினுள்ளேயிருந்த பூசை அறையிலேயே இடங்கொடுத்தார். இறைவன் திருமுன்பு சாதி வேற்றுமைக்கு இடமில்லை என்பதே இதன் கருத்து.

ஒருமுறை சம்பந்தரும் அப்பரும் வேதாரணியக் கோயிலுக்கு வந்திருந்தனர். அப்பொழுது சம்பந்தர் சமய சம்பந்தமாக மதுரைக்குச் செல்லப் புறப்பட்டார். அப்பொழுது "நாளுங்கோளுங் இப்பொழுது நன்மையாயில்லை. மதுரையில் எதிரிகளோ மிகவஞ்சகர். போகவேண்டாம்" என அப்பர் சம்பந்தரைத் தடுத்தார். கடவுளை நம்பினோருக்கு நாளும் கோளும் "எப்பொழுதும் நல்லவையாகும்" என்று சொல்லி விட்டு சம்பந்தர் மதுரைக்குச் சென்று வெற்றியுடன் மீண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) புத்தர் பெருமான்

விசாக பௌர்ணமி நாள் பற்றி நீங்கள் கேள்வியுற்றிப்பீர்கள். சென்ற விசாக தினத்திலே கண்டவை எல்லாம் உங்கள் நினைவில் இருக்கின்றனவா? அன்று எங்கும் அலங்காரம்! எவ்விடத்திலும் ஒளி வெள்ளம்! ஒவ்வொரு பௌத்தரின் வீட்டிலும் ஒரு வெளிச்சக் கூடாவது இருந்ததை அவதானித்திருப்பீர்கள். விசாக நாளிலே எங்கும் அமைதி நிலவும். வளர்ந்தோர்களும் பாலர்களும் இந்நாளைச் சமாதானமும் புனிதமும் நிறைந்ததாய் ஆக்கப் பெரிதும் முயல்வர்.

புத்தர் பெருமானின் ஞாபகத்தினை இவ்வாறு பௌத்தர்கள் கௌரவிக்கின்றனர்; பெருமைப்படுத்துகின்றனர். இவற்றிற்காகவே இந்நாளை இவர்கள் ஒதுக்கி வைத்திருக்கின்றனர். ஏனெனில் பௌத்த சமயத்தின் தாபகாரன புத்தர் பெருமானின் வாழ்க்கையிலே குறிப்பிடத்தக்க மூன்று முக்கிய சம்பவங்கள் இத்தினத்திலேதான் நிகழ்ந்தன.

சுமார் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளின் முன்பு இந்தியாவின் வடகிழக்கிலே, இமாலயப் பெருமலையின் தென்சாரலிலே ஓர் அரசு விளங்கியது. இதனைச் சாக்கிய குலத்தவர் ஆண்டனர். சாக்கியக் குலத் தலைவன் பெயர் சுத்தோதனன். இவனது தலைநகர் கபிலவஸ்து. இவனுக்குப் பட்டத்தரசியாக விளங்கியவள் மகாமாயாதேவி. இவள் பிள்ளைப்பேற்று நிலையில் இருந்தாள். அக்கால வழக்கப்படி, இவள் தன் பெற்றோரின் நகரமாகிய தேவ தாகத்திற்குப் பேரூர்வலத்தோடு அனுப்பப் பெற்றாள். செல்லும் வழியிலே விசாக பௌர்ணமித் தினதன்று, லும்பினி (தற்கால லுமின்தேய்) என்ற அழகிய சால மரச்சோலை ஒன்றிலே, தன் முதற் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பெற்றோர் இக் குழந்தைக்குச் சித்தார்த்தர் என்று பெயரிட்டனர். இக்குழந்தையின் குடும்பப் பெயர் கௌதமர் என்பது. எனவே, சித்தார்த்தர், சித்தார்த்த கௌதமர் எனப் பெயர் பெற்றார்.

அரச வாழ்க்கையின் ஆடம்பரங்களுடனும் வசதிகளுடனும் இளவரசரான சித்தார்த்தர் வளர்ந்தார். அவர் வளர வளர அரசர்க்குரிய கலைகள் யாவும் கற்பிக்கப்பட்டன. அக்கலைகளில் அவர் மிக வல்லவரானார். பதினாறு வயதானதும், இந்திய வழக்கத்திற்கிசைய, அவர் இளவரசி யசோதரையை மணந்தார். எனினும், காலம் செல்லச் செல்லத் தம் தகப்பனின் மாளிகையின் ஆடம்பர வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குச் சலிப்பேற்பட்டது. எந்த நேரமும் சிந்தனையில் மூழ்குவது வழக்கமாயிற்று. ஆனால், சித்தார்த்தர் ஒருநாள் அரசராதல் வேண்டும் என்ற அவாவினால், சுத்தோதனன் தன் மகனை இளவரசருக்குரிய வாழ்க்கையிலே ஈடுபடுத்தப் பெரிதும் முயன்றான் .ஆனால் சித்தார்த்தரோ வாழ்க்கையின் இயல்புகளைப் பற்றி அதிகம் சிந்திப்பதிலேயே ஈடுபட்டார்.

இதுவரையும் ஆடம்பர வாழ்க்கையில் வளர்ந்த சித்தார்த்தர், மக்களின் துன்பங்களைக் கண்டார் அல்லர். ஆனால், குறுகிய காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல துன்ப நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தது. முதலில் மெலிந்த பலவீனன் ஒருவனையும், அடுத்து நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டோன் ஒருவனையும், இறுதியில் பிணம் ஒன்றையும் அவர் கண்டார். மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய இந்த மூன்று நிகழ்ச்சிகளையுங் கண்டபொழுது இவ்வுலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்ற உண்மை அவருக்குத் தெளிவாயிற்று முடிவில்லாத இக்கவலைகளிலிருந்து மனிதன் விடுபடல் கூடுமோ என்று அவர் திகைத்தார். இதற்குப் பின் வீடு வாசல் துறந்து, எங்கும் திரியுந் துறவி ஒருவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அத்துறவி அமைதியும் சாந்தமும் உருவாகக் காட்சி அளித்தார். அவரைப் போலவே தாமும் இல்லற வாழ்க்கையைத் துறந்து வெளியேறுவதற்கு, சித்தார்த்தருக்கு அவா உண்டாயிற்று. இவ்வாறு திரிந்தால் தாமும், தம் போன்ற மக்களும் கவலைகளிலிருந்தும் விடுதலைபெறவழி கிடைக்கும் என்று அவர் எண்ணினார்.

இவ்வேளையில் அவரின் மனைவி தன முதற் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இளவரசரான சித்தார்த்தர் மாளிகையிலே தாம் தொடர்ந்து தங்கினால், தம் மனைவியிலும் மகனிலும் பாசம் மேலும் மேலும் உறுதியாய் வளர்ந்துவிடும்; அப்பாசம் மனித துன்ப துயரங்களினின்றும் நீங்குவதற்கு வழிகாணும் தன் நோக்கத்திற்குத் தடையாகிவிடும் என்பதை உணர்ந்தார். ஆகவே அரச பதவியைத் துறப்பது என்ற நிறைவுறுதியோடு அதனையும், தம் மனைவியையும், குழந்தையையும் விட்டு நீங்கி, வீடற்ற புனித மனிதராய் வாழ்க்கையின் உண்மையை உணரச் சித்தார்த்தர் புறப்பட்டார். பதவிகளையும், பாசத்தளைகளையும் துறந்த இம்மாபெருஞ் செயல் "மாக முற்றத் துறத்தல்" என வழங்கும். அப்போது இவருக்கு வயது இருபத்தொன்பது.

இளவரசர் வீடற்று ஆறு ஆண்டுகள் இருந்தார். அதாவது இவர் இடத்திற்கு இடம் அலைந்து சென்றார். ஞானிகளின் அறிவுரைகளைக் கேட்டார். தாமாகவே, தம்மிலே பல பரிசோதனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்தினார். பல விடயங்களை அவதானித்தார். எனினும் தாம் தேடிய உண்மையை அவர் கண்டாரல்லர்.

ஆறு ஆண்டுகள் இந்தத் தீவிர தேடுதலின் பின்னர், அவர் ஆழ்ந்த சிந்தனையோடு, பெருமரம் ஒன்றின் நிழலில் அமர்ந்திருந்த ஒரு தினம், அவர் தேடிய வாழ்வியல்பின் உண்மை புலனாயிற்று. அவர் உணர்ந்து கொண்டவை: (1) நாம் அறிந்த வரை, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நோவையும் துன்பத்தையும் அடைய வேண்டியே இருக்கிறது. (2) இதற்குத் திட்டவட்டமான காரணம் உள்ளது. (3) அக்காரணங்களை அகற்றினால் கவலை நீங்கும். (4) துன்பத்திலிருந்து ஒருவர் விடுதலை பெறும் வழி உண்டு. விசாக போயா நாளில் புத்தர் பெருமான் கண்ட இம்மெய்யுணர்வு, இவ்வாறு நாலு பிரிவுகளைக் கொண்டிருந்தது. எனவே, இது மகத்தான் நாலு உண்மைகள் என வழங்கலாயிற்று. மெய்யுணர்வு பெற்ற இக்காலத்திலிருந்து இவர் மெய்ஞ்ஞானி (புத்தர்) என விளங்கப்பெற்றார். மெய்ஞ்ஞானம் பெற்ற வேளையில் அவர் அமர்ந்திருந்த இடத்திலுள்ள மரம் வெள்ளரசு எனத் தெரிகின்றது. அவர் மெய்யுணர்வு பெற்ற இடம் "புத்தகயா" என இன்று வழங்குகின்றது.

தற்கால காசியின் அண்மையில் இசிபத்தானம் என்ற அழகான சோலை உண்டு. புத்தர் முதன்முதலாகத் தமது ஞான உண்மையினை எடுத்துரைத்த இடம் இது தான். தம்மோடு முன் உண்மையைத் தேடித்திரிந்த ஐவருக்கு உரையாற்றினார். இவ்வைவருமே இவர்தம் முதற் சீடர்கள். இந்தமுதற் பிரசங்கம் "தர்ம சக்கரத்தின் சுழற்சியின் ஆரம்பம்" என்பர். இப்பிரசங்கத்தில் "ஒருவன் அதிக ஆடம்பரத்தையும் சொகுசையும் வாழ்க்கையில் தேடினால் தீங்கு நேரிடும். அதே அளவு தீங்கு, தன் வாழ்க்கையை, தானாகவே அதிக கஷ்டப்படுத்தினாலும் நேரிடும். ஆகையால் மிகைப்பட்ட இரு போக்குகளுக்கும் இடையிலான நடு நிலை நெறி தேடுதல் திறம்" என அறிவுரை வழங்கினார்.

ஞானம் அடைந்தபொழுது புத்தர் பிரானுக்கு வயது முப்பத்தைந்து. மேலும் நாற்பத்தைந்தாண்டுகள் அவர் வாழ்ந்தார். இக்காலம் முழுவதையும் தம் சகாக்களின் நல்வாழ்விற்கென்றே அவர் அர்ப்பணித்தார். வாழ்வின் பல நிலைகளிலும் இருந்த மக்கள் பலரையும், தனது தேசாந்தர காலத்தில் அவர் சந்தித்தார்; தீமைகளையும் இழிவுகளையும் கைவிடுமாறும், நல்லதும் புனிதமானதுமான வாழ்வை நடாத்துமாறும் அவர்களுக்கு உபதேசித்தார்; வறியவர், செல்வர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், நல்லவர், தீயவராகிய யாவருக்கும் உண்மைகளை எடுத்துரைத்தார்; எப்பொழுதும் ஞானமும் கருணையும் உடைவராய் விளங்கினார். மிகவிரைவிற் பலரும், தம்மை அவரின் சீடர்கள் என்று சொல்லிக் கொள்ளத் தொடங்கினர். ஐவரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய அந்தச் சீடர் கூட்டமானது இன்று ஐம்பத்தைந்து கோடியாக வளர்ந்துள்ளது.

புத்தர் பகவான் தாம் கண்டுணர்ந்த உண்மையினை, உலகிலுள்ள ஒவ்வொருவரும், ஆணோ, பெண்ணோ முயன்றால் தாமாகவே பெற்றுவிடலாம்; பெறல் வேண்டும் என்று உபதேசித்தார். மனித ராயிருத்தலின் மேம்பாட்டைச் சுட்டிக்காட்டினார். மனிதர் யாவரும் சமமென்பதைப் போதித்தார். சாதிக் கொள்கைகளுக்கு எதிரான பிரசாரம் செய்தார். நோயாளரைப் பேணினார். வறியோர்க்கும் உதவியற்றோருக்கும் உதவுவதின் முக்கியத்துவத்தை அவர் தன் வாழ்க்கையால், எடுத்துக்காட்டாய் விளக்கி வழிப்படுத்தினார். பல சந்தர்ப்பங்களில் தமது அதிக கருணை காரணமாக, அவர் தாமாவே வறியோரையும், நோயாளிகளையும், கவலைப்படுவோரையும் நாடிச் சென்று உதவினார். சாதியிலிருந்து தள்ளப்பட்டவனும் துயரடைந்தவனுமான சிறுவன் சுனீதனுக்கு அவர் குருத்துவப்பட்டத்தை வழங்கினார். அழுக்கும், தீராத நோயு முள்ளமையால் தன் தோழர்களாலே கைவிடப்பட்ட பித்தகத்தனதிச என்போனின் புண்களைத் தன் கையாலேயே கழுவிக்கட்டி ஆதரித்தார்.

அகிம்சை, அன்பு, கருணை, பிறர்க்குத் தொண்டு செய்தல், அவர்களின் நல்வாழ்வினைக் கருதுதல், நோயாளரைப் பேணல் என்பன புத்தர்பிரானின் வாழ்வின் முக்கிய அம்சங்களாகும். அவரின் உதாரணத்தைப் பின்பற்றி அவர் வழியிற் சென்றோர் இந்தியாவெங்கணும், பிற்காலத்தில் பிற நாடுகளிலும், வைத்திய சாலைகள் நிறுவினர். அவரின் உபதேச மொழிகள் கவலையும், நோவும் கொண்ட பலர்க்குச் சாந்தத்தையும் சமாதானத்தையும் ஈந்தன. இவர்களில் ஒருவர், தன் ஒரே பிள்ளையின் மரணத்தினால் பித்தடைந்த கிசாகோத்தமியாவார்.

விசாக தினம் ஒன்றிலேதான் புத்தர் பெருமான் குசிநார (தற்கால குசிநகரம்) என்ற இடத்திலுள்ள சால மரச் சோலையிலே வாழ்வை நீத்தார். அப்பொழுது அவருக்கு வயது எண்பது. சிங்கள சாகியத்தின் தாபகரான விஜய இளவரசன் இதே தினத்திலேதான் ஸ்ரீ லங்காவை அடைந்தான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, விசாக தினம் சிங்கள சாகியத்தின் தோற்றத்துக்கும் முதன்மையான வருடாந்த கொண்டாட்ட நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள பௌத்தர்கள் யாவரும் கருணைநிறை புத்த மாகானின் பிறந்த, ஞானம் பெற்ற, பரிநிர்வாணமடைந்த நாள் என்பதாலேயே, விசாக நாளில் பெருவிழா எடுத்துக் கொண்டாடுகின்றனர்.

புத்தர் பெருமானின் வாழ்க்கை வரலாறும் உபதேசங்களும் பெருந்தொகையான மக்களுக்கு ஆசிகளை அளித்தன; அளித்துக் கொண்டேயிருக்கின்றன.

## (இ) முஹம்மத் நபி

(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்)

### அரேபியர்

தென்மேற்கு ஆசியாவில் உள்ள அரேபியா என்னும் பிரதேசத்தில் வதியும் மக்கள் அரேபியர்கள் எனப்படுகின்றனர்.

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அரேபியர் மிகக்கொடிய மனிதர்களாக விளங்கினர். இவர்கள் இழிவான பாடல்களைப் பாடுவதிலும் மது அருந்துவதிலும் தம் காலத்தைக் கழித்தனர். அந்நாட்களில் அரேபியர் தம் விருப்பப்படி பல பெண்களை மணந்தனர். ஆண்களின் பிறப்பின் போது மகிழ்வு கண்ட அரேபியர், பெண்மகவு கிடைக்கும்போது துக்கமடைந்தனர். சிலர் தமக்குப் பிறந்த பெண் குழந்தைகளைக் கொலை செய்தும் உயிருடன் புதைத்தும் வந்தனர். அரேபியர் அநேக தெய்வங்களை வழிபட்டதுடன், விக்கிரங்களையும் வணங்கினர். மனிதர்களையும் தெய்வங்களுக்குப் பலியிட்டனர். இத்தகைய முறைகளால் தெய்வங்களை மகிழ்விக்கலாம் என்று நம்பினர். விலங்குகள், தாவரங்கள், கற்பாறைகள், கற்கள் போன்று பலவற்றைத் தம் தெய்வங்களாகக் கருதினர்.

அரேபியாவிலுள்ள மக்கா நகரில் ஓர் ஆலயம் இருந்தது. அது கஃபா என்று அழைக்கப்பட்டது. ஒரே தெய்வ வழிபாட்டுக்காக அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் அரேபியர் தம் விக்கிரகங்களை வைத்து வணங்கினர். அங்கே முந்நூற்று அறுபது விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரேபியர் பல குலங்களாவும் கிளைகளாகவும் பிரிந்து வாழ்ந்தனர். இக்குலங்களில் ஒன்று "குறைஷ்" என்று அழைக்கப்பட்டது. இக்குலத்தவரே கஃபா எனும் ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனர். இக்காரணத்தால் குறைஷ் குலம் ஏனைய குலங்களிடம் மிக்க மதிப்பைப் பெற்றது.

குறைஷ் குலத்தில் அப்துல்லாஹ் எனும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் ஆமினா எனும் பெண்ணை மணந்தார். ஆமினா கர்ப்பவதியாயிருந்த போது வெளியூர் சென்றிருந்த அப்துல்லாஹ் வழியில் மரணமடைந்தார். மரணித்து மூன்று மாதங்களின் பின் ஆமினா ஆண் மகவொன்றைப் பெற்றெடுத்தார். இக்குழந்தைக்கு முஹம்மத் என்று பெயர் சூட்டப்பட்டது. முஹம்மத் எனும் அரபுச் சொல்லுக்குப் புகழப்பட்டவர் என்பது பொருள்.

இக்குழந்தை எழுதவோ, வாசிக்கவோ வேண்டிய கல்வியறிவைப் பெறாது வளர்ந்து வரலாயிற்று. முஹம்மதின் ஆறாம் வயதில் தாயார் ஆமினாவும் இறந்துவிட்டார். அநாதையான இப்பிள்ளை பாட்டனாரின் பாதுகாப்பில் விடப்பட்டது. பாட்டனாரும் பிள்ளையின் எட்டாம் வயதில் இறந்துவிட்டார். இதனால் இப்பிள்ளையைப் பராமரிக்கும் பொறுப்பை இவருடைய பெரியதந்தை அபூதாலிப் ஏற்றார்.

முஹம்மத் தமது பிள்ளைப் பருவத்தை ஏனைய ஏழைச் சிறுவர்களைப் போன்றே கழித்தார். சாதாரண பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் மந்தை மேய்ப்பவராக விளங்கிய இவர், பின்னர் வர்த்தகம் புரியும் நோக்காகத் சிரியாவுக்கும் வேறு நாடுகளுக்கும் சென்றார். எத்தொழிலையும் இழிவான தொழிலாகக் கருதவில்லை.

உண்மையும் நேர்மையும் கொண்டவராய் வாழ்ந்த முஹம்மத் எல்லோரின் நம்பிக்கைக்கும் உரியரானார். மக்கள் தம் பணத்தையும் ஏனைய பொருள்களையும் பாதுகாப்புக்காக இவரிடம் ஒப்படைத்தனர். இவரும் அவற்றைக் கவனமாகப் பாதுகாத்து உரியவரிடம் திருப்பிக் கொடுத்தார். இதனால் இவரை அல்அமீன் என்று மக்கள் அழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத்தின் அருங்குணங்களையும் நாணயத்தையும் கேள்வியுற்ற விதவையான கதீஜா என்னும் செல்வச் சீமாட்டி தமது வர்த்தகப் பொறுப்பை ஏற்றுச் சிரியாவுக்குச் சென்றுவருமாறு இவரை வேண்டினார். இவர் அப்பொறுப்பை ஏற்றுச் செவ்வனே நிறைவேற்றினார். இதனால் மகிழ்வடைந்த கதீஜா சீமாட்டி இவரைத் திருமணம் செய்ய விரும்பினார். எனவே இரு குடும்பங்களினதும் விருப்பத்தோடு இவர்களிருவருக்கும் விவாகம் நடைபெற்றது. அப்போது முஹம்மதுவுக்கு வயது இருபத்தைந்து கதீஜா சீமாட்டிக்கு வயது நாற்பது.

## தீர்க்கதரிசியாதல்

வாலிபரான முஹம்மத், மக்காவுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு மலைக் குகையிலே தனிமையாக இருந்து சிந்தனை செய்து வந்தார். இறைவனைப் பற்றியும் அவருடைய படைப்புகளைப்பற்றியும் அவற்றின் இரகசியங்களைப் பற்றியும் சிந்தித்து வந்தார். ஒருநாள் அல்லாவின் தூதரான ஜிப்ரீல் அங்கே தோன்றி "முஹம்மதே, ஓதுவீராக" என்றார். "எவ்வாறு எதனை ஓதுவேன்?" என்று முஹம்மத் கேட்டார். "யாவற்றையும் படைத்த உம் இறைவனின் பெயரால் ஓதுவீராக" என்றார் ஜிப்ரீல். எனவே முஹம்மத் நபியும் ஓதினார்.

இந்நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்ற முஹம்மத் நபி தம் வீட்டுக்குத் திரும்பினார். நடந்தவற்றைத் தம் மனைவியிடம் கூறினார். இதைக் கேட்ட கதீஜா சீமாட்டி தம் கணவரைத் தம் பெரிய தந்தையின் மகனிடம் அழைத்துச் சென்றார். விவிலிய நூலையும் ஏனைய புனித நூல்களையும் அறிந்திருந்த அவர் முஹம்மதை நோக்கி, "உம்மிடம் வந்தவர் ஜிப்ரீல் அவர்களே. நீர் இறைவனின் தூதராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்" என்றார். தம் கணவரின் நற்குணங்களை அறிந்திருந்த கதீஜா சீமாட்டி அவர் கூறியவற்றை நம்பினார். முஹம்மத் நபியின் பெரிய தந்தையின் மகனான அலியும் இதை நம்பி இஸ்லாத்தை ஏற்றார். இவ்வாறே முஹம்மத் நபியின் சமயபோதனை ஆரம்பமானது.

இதன்பின் அவர்கள் அடிக்கடி முஹம்மத் நபியிடம் வந்து அல்லாஹ்வை வணங்கவும், நோன்பு நோற்கவும், ஏனைய நற்கருமங்களைச் செய்யவும் கற்றுக் கொண்டனர்.

முஹம்மத் நபி பெற்ற தூதுகள் அனைத்தும் அவரது சீடர்களால் மனனம் செய்யப்பட்டன; எழுதியும் வைக்கப்பட்டன. இவை யாவும் கோவை செய்யப்பட்டு அல்குர் ஆன் என அழைக்கப்படுகின்றன. இதுவே முஸ்லிம்களின் வேதநூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் நபியின் புகழ் நாடு முழுவதும் பரவலாயிற்று. அவரது போதனைகளைக் கேட்பதற்காக நாட்டின் பல பாகங்களிருந்தும் மக்கள் வரலாயினர். பலர் அவரைத் தமது வழிகாட்டியாகவும் நபியாகவும் ஏற்றுக் கொண்டனர்.

## மக்கா வாழ்க்கை

முஹம்மத் நபி அவர்கள், அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், தாம் அல்லாஹ்வின் இறுதித் தூதர் என்றும், விக்கிரக ஆராதனை தவறானது என்றும் போதித்தார்கள். "எல்லார்க்கும் அன்பு காட்டுங்கள்; ஏழைகளுக்கு உதவுங்கள்; பிணியாளரைப் பேணுங்கள்; பெண்களின் உரிமைகளைப் பேணுங்கள்" என்றார்கள். "பொய் சொல்லாதீர்கள்;" களவு செய்யாதீர்கள்; சூதாடாதீர்கள்; மதுவருந்தாதீர்கள்" என்றார்கள்.

ஆனால் கொடிய அரேபியர் தாம் கைக்கொண்டு வந்த தீச்செயல்களை விட விரும்பவில்லை. முஹம்மத் நபியின் நற்குணங்களையும் நல்ல வேலைகளையும் மறந்து அவருக்குத் தீங்கிழைக்க முனைந்தார்கள். அவருக்குக் குறி சொல்வோன், மாந்திரீகன், பித்தன் எனப் பல்வேறுபட்டங்களைச் சூட்டினர். கற்கள், தடிகள் கொண்டு அவரைத்தாக்கியதுடன் புழுதியையும் குப்பைகளையும் அவரின் தலையிற் போட்டனர்; அவரைக் கொலை செய்யவும் விரும்பினர்; அவரை இறைவணக்கத்தில் ஈடுபட விடாமல் பல இடையூறுகளையும் விளைத்தனர்.

முஹம்மத் நபி அவர்களைப் பின்பற்றியவர்களையும் அரேபியர் துன்புறுத்தினர். சிலரைக் கால்களையும் கைகளையும் கட்டிக் கொதிக்கும் மணலில் விட்டனர். உணவும் நீரும் கொடுக்காமல் வாட்டினர்; சிலரைக் கொன்றும் விட்டனர்; இத்தனைத் துன்பங்களையும் அனுபவித்த போதும் தம் நம்பிக்கையையோ, தாம் கைக்கொண்ட சமயத்தையோ கைவிடவில்லை. இவர்கள் அடையும் துன்பங்களைக் கண்டு நபியவர்களின் இளகிய உள்ளம் பாகாய் உருகியது. ஆகவே சிலரை அயல் நாடான அபிசீனியாவுக்குச் செல்ல அனுமதித்தார்கள். ஆனால் நபியவர்கள் எதற்கும் அஞ்சாமல் தம் போதனைகளைச் செய்தார்கள். அரேபியத் தலைவர்கள் இலஞ்சம் கொடுத்தேனும் நபியவர்களின் போதனையை நிறுத்த முனைந்தனர். பணமும், தலைமைப் பதவியும், அழகிய பெண்ணும் கொடுத்து; இப்போதனையை விடுமாறு வேண்டினர். ஆனால் நபியவர்கள் அவற்றை எல்லாம் ஏற்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் கோபமுற்ற அரேபியர் நபி பெருமானாரை மேலும் பல வழிகளில் துன்புறுத்தினார். கருமங்களைப் புரியவிடாது அவர்களைத் தடுத்தனர். அவரைக் கொலை புரியவும் திட்டமிட்டனர். இத் திட்டத்தை நபியவர்கள் ஜிப்ரீல் மூலம் அறிந்து கொண்டார்கள். மக்காவை விட்டு மதீனா நகருக்குச் செல்லுமாறு அல்லாஹ்வின் உத்தரவும் வந்தது. எனவே, நபியவர்கள் ஏறத்தாழ முந்நூறு மைல் தொலைவில் உள்ள மதீனா எனும் நகருக்குச் செல்ல முடிவுசெய்தார்கள்.

நபியவர்கள் தமது தோழர் அபூபக்கருடன் ஒரு நாளிரவு மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். நெடுநேரம் பிரயாணஞ் செய்து களைப்புற்று சூரிய உதயத்துக்கு முன்னர் ஒரு குகைக்குள் தஞ்சமடைந்தார்.

மறுநாட் காலை மக்கா வாசிகள், நபியவர்கள் மக்காவை விட்டு நீங்கியதை அறிந்துகொண்டனர். "முஹம்மதைக் கொண்டு வந்து ஒப்படைப்பவருக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசளிப்போம்" என்று மக்காத் தலைவர்கள் அறிவித்தனர். எனவே, நபியவர்களைத் தேடியலைந்த சிலர், நபியவர்கள் ஒளித்திருந்த குகை வாயிலருகே வந்தார்கள். நபியவர்களுடனிருந்த தோழர் அபூபக்கர் அவர்கள், தேடி வந்தவர்களின் ஒலியைக் கேட்டு அச்சமடைந்தார்கள். "அல்லாஹ்வின் தூதரே! எதிரிகள் பலர் நம்மைப் பிடிக்க வந்திட்டார்கள் நாம் இருவர்தாமே இருக்கிறோம்" என்றார்கள். இதைக் கேட்ட நபியவர்கள் "அபூபக்கரே அஞ்சாதீர்! நாம் மூவர் இருக்கிறோம். ஏனெனில் அல்லாஹ்வும் நம்முடன் இருக்கிறான்". என்று நம்பிக்கையோடு கூறினார்கள். தேடி வந்தவர்கள் குகைவாயிலை எட்டிப் பார்த்த பின் வேறு இடங்களில் நபியைத் தேடிச் சென்றனர். பின்னர் மூன்று நாட்களுக்குப் பிறகு இருவரும் மதீனாவுக்குப் புறப்பட்டார்கள்.

நபியவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவை அடைந்த நிகழ்ச்சி ஹிஜ்றா என்று கூறப்படுகிறது. இந்நாளிலிருந்தே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகிறது.

## மதீனா வாழ்க்கை

மதீனாவில் தீவிரமாக இஸ்லாம் பரவத் தொடங்கியது. மக்காக் குறைஷியர் முஸ்லிம்களை (இஸ்லாத்தைப் பின்பற்றுவோரை) மதீனாவிலும் அமைதியுடன் வாழவிடவில்லை. எல்லா முஸ்லிம்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று இஸ்லாத்தை ஒழிக்க விரும்பினர். இதற்காகப் பெரும்படையைத் திரட்டிக் கொண்டு மதீனாவை நோக்கிச் சென்றனர். நபியவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு, படைக்கல மேந்திப் போரிட முடிவு செய்தார்கள். அரேபியருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே பலமுறை போர்கள் நடைபெற்றன. ஈற்றில் முஸ்லிம்களே வென்றனர். மக்கா நகரும் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டது. நபியவர்கள் பெரும் படையுடன் மக்கா நகரில் நுழைந்த போது முழு நகரும் அவர்களிடம் சரணடைந்தது.

வெற்றியின் உச்சக் கட்டத்தில் இருந்தபோதும் நபியவர்கள் கருணையும், தாராள சிந்தையும் கொண்டவர்களாகவே விளங்கினார்கள். குடிகளை நன்றாக நடத்தியதுடன் தம் வீரர்கள் எதிரிகளைக் கொலை செய்யவோ அவர்களின் உடைமைகளைக் கொள்ளையிடவோ அனுமதிக்கவில்லை. குறைஷியர்க்கும் அவர்களின் தலைவர்களுக்கும் கருணை காட்டினார்கள். தாம் கொல்லப்படுவோம் என்ற அச்சத்துடன் குறைஷியர்கள் நபியவர்களை அணுகியபோது "எனக்குப் பலவகையிலும் இன்னல் விளைத்த நீங்கள் என்னிடமிருந்து எதனை எதிர்பார்க்கீர்கள்? என்று அவர்களிடம் கேட்டார்கள். அதைக் கேட்ட அம்மக்கள்" நீர் மேன்மக்கள் வழி வந்த மேன்மகனாயிற்றே" என்றார்கள். "உங்கள் யாவருக்கும் மன்னிப்பளித்து விட்டேன்; நீங்கள் சுதந்திர மக்களாகச் செல்லலாம்" என்று கூறி எல்லோரையும் அனுப்பினர்கள் நபியவர்கள்.

நபியவர்களின் தாராள சிந்தையைக் கேள்வியுற்ற அரேபியர் திரள் திரளாக வந்து இஸ்லாத்தைத் தழுவலாயினர். நபியவர்கள் மதீனாவை அடைந்து பத்து வருடங்களுக்குள் அரேபியாவின் பெரும்பான்மையான மக்கள் இஸ்லாத்தை ஏற்றனர்.

## நபியவர்கள் மதீனாவுக்கு மறைவு

நபியவர்கள் மதீனாவுக்கு வந்ததிலிருந்து 11 ஆம் ஆண்டில் தமது சேவை பூர்த்தியானதும் தமது 63 ஆம் வயதில் நிம்மதியாக உயிர் நீத்தார்கள். இது கிறித்துவுக்குப் பின் 632 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாந் திகதி மதீனாவில் நிகழ்ந்தது. அவர்கள் அங்கேயே அடக்கஞ் செய்யப்பட்டார்கள்.

## நபியவர்களின் வாழ்க்கை முறை

நபியவர்கள் எளிமையான வாழ்க்கையே வாழ்ந்தார்கள். கனமான உடைகளையே அணிந்தும், சாதாரண உணவு வகைகளையே உண்டும் வந்தார்கள். தம் உடைகளையும் பாதணிகளையும் தாமே செப்பனிடுவதை இழிவாகக் கருதவில்லை. வீட்டைச் சுத்தம் செய்தலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடைகளிலிருந்து பால் கறத்தலையும் தாமே செய்தார்கள். அநாதைகளையும் சிறுவர்களையும் நேசித்தார்கள். பேரீந்து, வாற் கோதுமை, ஒட்டகப் பால் போன்றவற்றை அதிகம் உண்டு வந்தார். முதியோருக்கு மரியாதை செலுத்தினார்கள். "ஏழைகளை நேசித்து அன்பு காட்டுங்கள்; அவர்களை உங்கள் பக்கத்தில் அழையுங்கள்; அல்லாஹ் உங்களைப் பக்கத்தில் அழைத்துக் கொள்வான்" என்று ஒரு முறை கூறினார்கள்.

நபியவர்கள் எல்லா மனிதர்களுக்கும் எல்லாப் பிராணிகளுக்கும் கருணை காட்டினார்கள். அவர்கள் எவரையும் நிந்திக்கவோ, திட்டவோ இல்லை. தமக்கு எல்லையற்ற தீமை செய்த பரமவிரோதியையும் சபிக்கவில்லை.

முஹம்மதே, உலகங்களுக்கெல்லாம் அருட்கொடையாகவே உம்மை அனுப்பினோம்.

(அல்குர் ஆன்)

## (ஈ) இயேசுநாதர்

(கிறிஸ்தவ மறையை ஏற்படுத்தியவர் இயேசு கிறிஸ்து)

பலஸ்தீன நாட்டில் கலிலேயாக் கிராமத்திலே ஒருநாள்! அஃது ஒளிமயமான நன்னாள். அன்று திரளான மக்கள் குழுவினரால் அறியப்பட்டவரும், எவருக்கும் இணையற்றவருமான ஒரு போதகரின் அறிவுரைக்குச் செவிசாய்க்க ஒரு மலைப்பாங்கான இடத்தை அண்மினர். அவரின் இயல்பான போக்கும், அவர் அளித்த செய்திகளும் மக்களை நன்கு கவர்ந்தன. அவர் அன்பையும், அமைதியையும் பற்றி அழகாகப் பேசினார். அவர்களது அயலாளர் பகைவர்களாக இருந்தாலும், அவர்கள் சகோதரர்களாக இருக்கிறார்களென்றும் எல்லோருக்கும் இறைவன் தந்தையாக இருக்கிறாரென்றும் தெளிவாகக் கூறினார். இந்த மனிதன் யாராக இருக்கலாம்? சிலர் அவரை இறைவாக்கினர். முன்பு வந்தவர்களைப் போன்ற ஒருவரென்றும் ஏனையோர் உரோமை ஆளுனர்களிடமிருந்து தம்மை விடுவித்துத் தமக்கு விடுதலை அளிக்க வந்த மீட்பர் என்றும் கருதினார்கள். உண்மையாகவே இவர் இறைவாக்கினரும் மீட்பருமாக இருக்கிறார். இன்னும் கிறிஸ்தவமறையை ஏற்படுத்திய இயேசுக் கிறிஸ்துவும் இவரே.

இவர் பெத்தலெகேம் என்னும் சிற்றூரில் எளிய ஏழைக் குடிசையில் யூத குலத்தில் பிறந்தார் என்றும் கன்னியான மரியாளே இவருடைய தாயானாள்; அவளிடத்தில் அற்புதமாக உற்பவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளுக்கு மண ஒப்பந்தமான தச்சரான சூசை என்பவர் இயேசுவின் பிறப்பிலிருந்தே அவருக்கு வளர்ப்புத் தந்தையானார். நசரேத்து என்னும் ஊரிலேயே இவர் தமது இளமைப் பருவத்தைக் கழித்தார். இதனாலேயே இவர் நசரேயனாகிய இயேசு என்று பல முறை அழைக்கப்பட்டார்.

இவர் வளர்ந்து வரும் நாட்களில் இவரை அறிந்தவர்களால் மிகவும் புகழப்பட்டார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக அமைதியிலும், அயரா உழைப்பிலும் ஆசையோடு வாழ்ந்து வந்தார்.

இந்நாட்களிலே ஸ்தாபக அருளப்பர் என்னும் இறைவாக்கினர் ஒருவர் உலகம் எதிர்பார்த்திருந்த மீட்பர் இறுதியாக வந்துவிட்டார் என்று மக்களுக்கு அறிவித்தார். யோர்தான் ஆற்றங்கரையில் தம்மிடம் வந்தவர்களுக்குத் திருமுழுக்கு அளித்துத் தீயவழிகளை விட்டு விலகும்படி அவர்களை ஏவினார். இந்தத் திருமுழுக்கானது அவர்களைப் புதிய வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் ஓர் உறுதியான மன நிலையின் வெளி அடையாளமாக இருந்தது. இவ்வாழ்வை விரும்பி நிற்கும் சகலரையும் தம்மோடு இணைத்துக் கொள்வதற்காகவே பாவமில்லாதவராகிய இயேசு ஒருநாள் அருளப்பரிடம் வந்து திருமுழுக்கைப் பெற்றார். பல காலமாக மக்களால் எதிர்பார்க்கப்பட்ட மீட்பர் இவர்தானென்று அருளப்பர் அறிந்துகொண்டார். இதற்குப் பின்பு அவர் அமைதியாக ஓர் இடம் தேடி செபத்திலும் தவத்திலும் சில காலம் கழித்து கடவுளால் தமக்கு அளிக்கப்பட்ட திருப்பணிக்குத் தம்மை ஆயத்தப்படுத்தினார்.

இயேசு தமது பகிரங்க வாழ்வைத் தொடங்குவதற்கான ஓய்வு நாளிலே யூதரின் செபக் கூட்டத்தில் அவர்களுடைய வேதநூலை எடுத்து வாசித்தார். "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்று கூறலானார்.

அவருடைய வார்த்தையும் செயலும் நிறைந்த திருப்பணியானது இறைவனிலே நம்பிக்கை கொண்டு அயலவரை அன்பு செய்து மன்னித்து வாழவேண்டுமென்று தெளிவாகக் காண்பித்தது. ஏழைகள், துயரப்படுவோர், சோர்வுற்றோருக்கு உதவி செய்தார். வெளி வேடக்காரரைச் சுட்டிக் காண்பித்தார். மற்றவர்களால் ஒதுக்கப்பட்டவர்களுக்குச் சாதகமாக நின்றார். பாவிகள் மட்டில் ஆழ்ந்த அனுதாபம் கொண்டார். வியாதிகளைக் குணமாக்கினார். குருடருக்குப் பார்வை அளித்தார். ஊமையர் பேசவும் செய்தார். அசுத்த அரூபிகளைத் துரத்தினார். இவரது வல்லமையால் கடலில் எழுந்த புயலை அமர்த்தினார். மரித்தோருக்கு உயிர் கொடுத்தார். வியப்புக்குரிய வாழ்வுக்கு ஊற்றாக அமைந்தது இவர் இறைவனோடு கொண்டிருந்த ஒன்றிப்பேயாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு உதவி செய்ய யேசு பன்னிருவரைத் தேர்ந்து கொண்டார். அவர்கள் செல்வந்தருமல்லர், கல்விமான்களும் அல்லர். சிலர் இராயப்பரைப் போன்று மீனவர்கள். ஒருவர் வரி வசூலிப்பவர்,. மற்றவர் தீவிரவாதி. அவர் தமது மாதிரிகையாலும் போதனையாலும் அவர்களைப் பயிற்றித் தமது சீடர்களாக்கிக் கொண்டார். "நான் உங்கள் மேல் அன்பு கூர்ந்தது போல நீங்களும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கூருங்கள்" என்று தாம் இறப்பதற்கு முதல்நாள் கூறினார். எல்லோரும் தம்மைப் பின்செல்லும் படியாகத் தம் சீடருக்கு இரு கட்டளைகளைக் கொடுத்தார். "உன் கடவுளாகிய ஆண்டவரை முழு உள்ளத்தோடும் அன்பு செய். உன் மீது அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டு".

அவர் ஊரெல்லாம் சென்று வரும்போது தம்மைப் பின் சென்ற திரளான மக்களுக்குச் சிறிய கதைகளாலும் உவமைகளாலும் தமது நற்செய்தியை எடுத்துரைப்பார். அவருடைய போதனை எல்லோருக்கும் எளிதாக அமைந்தது. "தன்னலம் தேடும் மனப்பான்மையை மாற்றிப் புதுவாழ்வுக்காகத் தாழ்ச்சியையும் அன்புள்ளங்களையும் கொண்டிருங்கள். என்னைப் பின் செல்பனுக்கு எல்லாம் ஆகும்" என்று குறிப்பாகத் தமக்குச் செவிசாய்க்க மறுத்த ஆணவக்காரருக்கும், வெளிவேடக்காரருக்கும் எடுத்துரைத்தார். குழந்தைகளின் மத்தியில் இருப்பதில் யேசு எப்போதும் தனி இன்பம் கண்டார் என்று கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய வேதாகமம் கூறுகின்றது. ஒருமுறை சிறுவர்கள் அவரிடம் சென்றபோது சீடர்கள் அவர்களை அதட்டினர். யேசுவோ அவர்களிடம் "குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள், ஏனெனில் கடவுளின் அரசு இத்தகையோரதே" என்றார்.

உண்மையாகவே அவரை விரும்பாத மக்களும் சிலர் இருந்தனர். அவர் கண்டனம் செய்ததால் அவரை விரும்பாத தேவாலயக் குருக்களும் அதிகாரிகளும் அவர்களுள் இருந்தனர். அவர்களால் அடக்கி ஆளப்பட்ட பொது மக்களும் யேசுவின் வார்த்தைகளால் தாக்கப்பட்டமையால் அவர்களும் பயந்திருந்தனர். எனவே அவருக்கெதிராகக் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்து அவரைத் தண்டனைக்குள்ளாக்கினார். ரோமை ஆளுநராகிய போஞ்சியோ பிலாத்துவிடம் அவரைக் கையளித்து அவருக்கு மரண தண்டனை அளிக்குமாறு வற்புறுத்தினர். அவர் மரணத் தீர்ப்பிடப்பட்டார். யேசு சாட்டைகளால் அடிக்கப்பட்டு, ஏளனம் செய்து முள்முடி தரிக்கப்பட்டுச் சிலுவை சுமந்தவராய் யெருசலேமுக்கு வெளியே உள்ள கொல்கொத்தா என்னும் குன்றில் சிலுவையில் அறையப்பட்டார். குற்றவாளிகளுக்குகென்று உரோமானியர் விதிக்கும் தண்டனை முறைகளில் சிலுவையில் அறையப்படுதலும் ஒன்றாகும். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதம் புரிந்து தன்னை விடுவித்திருக்கலாம்; ஆனால் தீயசக்திகளை அழிப்பதற்காகவே எல்லாவற்றையும் நன் மனத்துடன் ஏற்றுக்கொண்டார்.

இயேசு ஒரு வெள்ளிக்கிழமை அன்று உயிர் நீத்தபடியால் கிறிஸ்தவர்கள் ஆண்டுதோறும் இச்சம்பவத்தை நினைவு கூர்ந்து வழிபாடு செய்வர். அத்தினத்துக்குப் "பெரிய வெள்ளி" என்று பெயர். தாம் வாக்குரைத்தபடியே ஞாயிறு வாரம் மாலை நேரம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். இதனாலேயே கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறுப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். அன்றியும் ஒவ்வொரு ஞாயிறு வாரமும் அவர்களுக்குச் சிறப்பான நாளாகும். அன்று எல்லோரும் ஒன்று கூடிப் பொது வழிபாடு நடத்துகிறார்கள். இயேசு மரணத்தை வென்று உயிர்த்துத் தம் சீடருக்கும், தம்மைப் பின் செல்வபர் அனைவருக்கும் தாம் உண்மையான கடவுளும் உண்மையான மனிதனுமாக இருக்கிறார் என்று சான்று பகர்ந்தார்.

இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் தீய சக்திகளை ஒழித்தார்.. ஒவ்வொருவரும் தன்னலப் பற்றுக்களில் இருந்து தாம் விடுதலை பெறுவதற்கு வழிவகைகளையும் திறந்து வைத்தார் "உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன். நான் உங்கள் மேல் அன்பு கூர்ந்தது போல் நீங்களும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கூருங்கள். நீங்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டிருந்தால்தான் என் சீடர் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள்" என்றார். அவர் உயிர்த்த பிற்பாடு தமது சீடர், சிநேகிதர்களுக்குத் தோன்றித் தமது பணியைத் தொடர்ந்து செய்யுமாறு அதிகாரம் கொடுத்தார்.

"நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் என் சீடர் ஆக்குங்கள். உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்" என்று இயேசு அவர்களுக்குக் கூறினார்.

இயேசுக்கிறிஸ்து இன்றும் மனிதரோடு இருந்து, தம்மைப் போன்று தமது பணியைத் தொடர்ந்து செய்யும்படி தங்களுக்கு அருள் புரிந்து வருகிறார் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலைப் பெயர் : ..........................................................

| | மாணவர் பெயா | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1998 | .................................... | .................... | .............................. |
| 1999 | .................................... | .................... | .............................. |
| 2000 | .................................... | .................... | .............................. |
| 2001 | .................................... | .................... | .............................. |
| 2002 | .................................... | .................... | .............................. |
| 2003 | .................................... | .................... | .............................. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org